
# இரட்சணிய வரலாறு



யேசுதாசன் பிலிப்ஸ் அ.ம.தி.

இரட்சணிய வரலாறு

# க. பொ. த. (உயர் தரம்)
# மறை ஆசிரியர் பயிற்சி
# ஆசிரியர் கலாசாலை
# வகுப்புகளுக்குரியது

ஆக்கியோன்

அருட் திரு பிலிப்ஸ் இயேசுதாசன் அ.ம.தி.

அச்சேற்றலாம் :-

அருட் திரு. ஆ. மைக்கல் சாமி அ.ம.தி.
குரு முதல்வர்
யாழ் மாவட்டம்.

வெளியீடு :-

யாழ். மறைக் கல்வி நிலையம்
ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்.

# அறிமுகம்

—o—

"நாம் பெற்ற இன்பம், பெறுக இவ் வையகம், என்ற கூற்றுக்கு ஒப்ப, நாம் பெற்ற விசுவாசத்தையும், மறை அறிவையும், இறை அனுபவத்தையும் பிறருடன் பகிர்ந்து வாழ்வது ஒவ்வொரு கிறிஸ்தவனின் கடமையாகும். கிடைக்கும் சந்தர்ப்பங்களையெல்லாம் பயன்படுத்தி இவற்றை மற்றவர்களுக்கும் அளிக்கவேண்டும். நான் மட்டுநகர், புனித மரியாள் பேராலயத்தில் பணி புரிந்த (1976 — 79) காலத்தில் அங்குள்ள பல்வேறு பாடசாலைகளில் (க.பொ.த.) உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு 'கிறிஸ்தவம்' கற்பிக்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. கிறிஸ்தவத்தைக் கற்பதற்கு மாணவர்களுக்கு ஆர்வம் இருந்தாலும், அவர்கள் படிப்பதற்கு பாடநூல்கள் இல்லாதது பெரும் குறையாகவே இருந்தது. எனவே அன்றாட வகுப்புகளுக்கும், பரீட்சைக்கு மாணவர்களை ஆயத்தப்படுத்துவதற்கும் நான் தயாரித்த பாடக்குறிப்புகளை பிரதிகள் செய்து அவர்களுக்கும் கொடுத்து உதவினேன். இதன் துணையால் ஆயிரக்கணக்கான மாணவர்கள் தம் பரீட்சையில் சிறப்புப் பேறுகள் பெற்று முன்னேறியது எனக்கு மிக மன நிறைவை அளிக்கிறது.

அப் பாடக்குறிப்புகள் தான் இப்பொழுது புத்தக வடிவில் வெளிவருகின்றது. பாடக் குறிப்புகளைப் புத்தகமாக வெளியிடும் பொழுது சில குறைபாடுகள் இருக்கத்தான் செய்யும். அவற்றைப் பெரிது படுத்தாது, மாணவர்கள் இதைப் பயன்படுத்தி தம் வாழ்வுக்கும், பரீட்சைக்கும் நன்மை பெறுவார்கள் என்பது என் நம்பிக்கை. (க.பொ.த.) உயர்தரப் பரீட்சைக்கு மாணவர்களை ஆயத்தப்படுத்திய பல்லாண்டு கால அனுபவத்தினதும், கடந்த கால பரீட்சை வினாத்தாள்களினதும், உதவியுடனேயே இந் நூல் வெளிவருகின்றது. இதன் வழியாக இன்னும் பலர் நன்மை பெற வேண்டுமென்பது என் விருப்பம்.

வாழ்க கிறிஸ்து ! வளர்க அவர் மறை !!

அருட் திரு. பி. யோசுதாசன் அ.ம.தி.

# உள்ளே


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | வேதாகம அறிமுகம் ... ... | 1 |
| 2. | இஸ்ராயேல் வரலாற்றின் முக்கிய கட்டங்கள் | 9 |
| 3. | பஞ்சாகமத்திற்கு முன்னுரை ... | 10 |
| 4. | நான்கு மரபுகளும் அதன் சிறப்பியல்புகளும் ... | 15 |
| 5. | ஆரம்ப காலம் அல்லது வரலாற்றுக்கு முற்பட்ட காலம் ... ... | 20 |
| 6. | பிதாப்பிதாக்கள் காலம் ... ... | 33 |
| 7. | மோயீசன் வரலாறு .. ... ... | 53 |
| 8. | நீதிபதிகள் காலம் ... ... ... | 60 |
| 9. | அரசர்கள் காலம் ... ... | 65 |
| 10. | நாடுகடத்தப்பட்ட காலம் ... ... | 80 |
| 11. | இறைவாக்கினர் காலம் ... ... | 82 |
| 12. | பேர்சியரின் ஆதிக்க காலம் ... ... | 111 |
| 13. | கிரேக்க ஆட்சிக் காலம் ... ... | 113 |
| 14. | உரோமைப் பேரரசு... ... ... | 113 |

# வேதாகம அறிமுகம்

உலகில் மிகவும் புகழ்பெற்ற நூல் பைபிள், விவிலியம், வேதாகமம். முதன் முதல் அச்சேறிய நூலும் இதுவே. இதைப்போன்று பல்வேறு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட நூல் வேறொன்றும் இல்லை. "பைபிள்" என்ற ஆங்கிலச் சொல் "பிபிளுஸ்" என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து வந்தது. இது எழுதப் பயன்படுத்தப்பட்ட ஒரு புல் தண்டின் பெயர். அதிலிருந்து பிபிளம் (புத்தகம்) என்ற பெயர் உருவாகி, முக்கிய புத்தகமாகிய பைபிளுக்குரிய சொல்லாக மாறியது.

வேதாகமம் ஒரு புனித நூல்.

ஆரம்பத்திலிருந்து கிறிஸ்தவ சமுதாயம் இந் நூலை மிகப் புனிதமாகக் கருதி, உயிருக்கு மேலாக மதித்து, விசுவாசத்தின் ஆணிவேராகப் பாதுகாத்து வருகின்றது. ஆலயங்களில் திருவழிபாட்டின்போது இந்நூலுக்குத் தூபம் காட்டி, முத்தம் செய்து, தகுந்த ஆயத்தத்துடன் அதை வாசித்து, பரிசுத்தமாய் பாதுகாத்து வருகின்றது. இத்தனைக்கும் முக்கிய காரணம், இது இறைவன் தந்தநூல். இறைவனின் எண்ணங்களைத் தாங்கி வந்த நூல். கடவுள் வார்த்தையைக் கொண்டுள்ள நூல். எனவேதான் இதற்கு இவ்வளவு மரியாதை கொடுக்கப்படுகின்றது. இதன் புனிதத்தன்மைக்குக் கிறிஸ்தவர்கள் குருதி சிந்திச் சான்றுபகர்ந்துள்ளார்கள். கலாபனையின் போது வேதநூலைச் சமயப்பகைவர்களிடம் அளிப்பதைவிடத் தங்களையே விலங்குகளுக்கு உணவாக அளித்தார்கள். எங்கெங்கு சென்றார்களோ, அங்கெல்லாம் இப்புத்தகங்களை எடுத்துச் சென்றனர். பல மொழிகளில் மொழி பெயர்த்து, பலரும் வாசிக்கும்படி செய்தனர். விவிலியத்தைப்பற்றி ஆராய்ச்சி நூல்கள் பலகோடியாக எழுந்தன. இவ்விதமாக விவிலியம் புனிதமாகப் போற்றப்பட்டு வந்தது.

கிறிஸ்தவத்தின் தொடக்க முதல் 19ஆம் நூற்றாண்டு வரை விவிலியத்தின் புனிதத்தன்மையைப் பற்றி ஒருவரும் ஐயம் கொள்ளவில்லை, மறுத்துக் கூறவுமில்லை. ஆனால் 19ஆம் நூற்றாண்டில் நிலை மாறியது. இக்காலத்தில் பல புதிய கலைகள் தோன்றி வளர்ச்சியடைந்தன. விஞ்ஞானம் விரைவாக வளர்ச்சியடைந்த காலம். விஞ்ஞானிகள் தற்கால விஞ்ஞான கொள்கைகளுக்கும், கண்டுபிடிப்புகளுக்கும் முரணானவைகளை விவிலியத்தில் கண்டனர். விவிலியத்தில் விஞ்ஞான நூலை எதிர்பார்த்த சில விஞ்ஞானிகள், விஞ்ஞானக் குறை

களும் தலறுகளும் மலிந்த இந்நூலைக் கடவுள் தந்திருக்க முடியாது. விவிலியம் கடவுளது நூலல்ல, புனிதமானதல்ல எனறு கூறினர். விவிலியத்தில் வரலாற்று நூலைத் தேடிய வரலாற்று ஆசிரியர், அதில் பல வரலாற்றுப் பிழைகளையும் துல்லியமின்மையையும் கண்டு அதன் புனிதத்தன்மையில் விசுவாசமிழந்தனர். ஒழுக்கநூல் அறிஞர்கள் விவிலியத்தில் ஒழுக்கத்திற்கு மாறான செயல்கள் பல குறிப்பிட்டிருப்பதைக் கண்டு, அதன் புனிதத்தன்மையை ஏற்க மறுத்தனர். விவிலியத்தை மற்ற சமய நூல்களுடனும் இலக்கியங்களுடனும் ஒப்பிட்டு ஆராய்ந்தவர்களும், விவிலியத்தில் மனிதத்தன்மை மலிந்திருப்பதைக் கண்டு, அதன் புனிதத்தன்மையை, இறைத்தன்மையை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. இப்படியாகப் பல தீய சக்திகள் எழுந்து, விவிலியத்தின் புனிதத்தன்மையைத் தகர்க்க முயன்றன. விவிலியத்திற்கு மரியாதை செய்வதும், தூபம் காட்டுவதும் விக்கிரக ஆராதனை என்றனர்.

## இறையூக்கம் அல்லது இறை ஏவுதல்

இத்தகைய சூழலில்தான் தாய்த் திருச்சபை வேத நூலின் புனிதத்தன்மை எதில் அடங்கியிருக்கிறது என முதலாம் வத்திக்கான் சங்கத்தின் வழியாகக் கற்பித்தாள். ''வேதநூல் புனிதமானது. அதிகாரபூர்வமானது என்று திருச்சபை கூறுகிறாள் இவ்வாறு கருதுவது .. .. இது பரிசுத்த ஆவியின் தூண்டுதலால் எழுதப்பட்டது என்பதற்காகவே.'' பாப்பு 13ஆம் சிங்கராயரும், ''பரிசுத்த ஆவியின் ஏவுதலால் எழுதப்பட்ட இந்நூல் கடவுளை ஆசிரியராகக் கொண்டுள்ளது பரிசுத்த ஆவி மனிதரை எழுதும்படி கருவிகளாகப் பயன்படுத்தினார். கடவுள் தமது இறை வல்லமையால் எழுதும்படி தூண்டினார். அவற்றை அவர்கள் சரியான படி அறிந்து பிரமாணிக்கமாக எழுத விரும்பி, தகுந்த சொற்களால் வழுவா உண்மையோடு அவற்றை வெளிப்படுத்தும்படி அவர்களுக்கு உதவினார்.'' இவ்வாறு கடவுள் வேதநூல் முழுவதற்கும் ஆசிரியராக இருக்கிறார். இதிலேயே அதன் புனிதத்தன்மை அடங்கியிருக்கிறது. 'தேவ ஏவுதலால் எழுதப்பட்ட வேதாகமங்கள் போதிப்பதற்கும், கற்பிப்பதற்கும், திருத்துவதற்கும், நீதிநெறியில் நடத்துவதற்கும் பிரயோசனமாயுள்ளது.'' (2 திமோ 3:16) 'இறைவாக்கானது எக்காலத்திலும் மனிதருடைய மனதினால் உண்டானதல்ல, இறைவனின் புனித மக்கள் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டுப் பேசினார்கள்.'' (2 இரா. 1:21)

இறை ஏவுதலைச் சரியாக விளங்குவதற்குக் கருவித் தன்மையின் அறிவு அவசியமாகும். நாம் நமது உறுப்புகளால்

நேரடியாக ஒரு செயலைச் செய்ய முடியாதபோது, கருவிகளைப் பயன்படுத்துகிறோம். கையால் வெட்ட இயலாது எனவே கத்தியைப் பயன்படுத்துகின்றோம். நமது உறுப்புக்கு இல்லாத தனிப்பட்ட குணமும், ஆற்றலும் கருவிக்கு உண்டு. ஆனால் மனித உறுப்பின் அசைவின்றிக் கருவி குறிப்பிட்ட செயலைச் செய்ய சக்தியற்றது. எனவே மனிதன் மூலகாரணமாகின்றான். கருவி துணைக்காரணமாகுகிறது. துணைக்காரணம் தனது ஆற்றலால் இயங்குவதில்லை, மூலகாரணத்தால் இயக்கப்பட வேண்டும். மூலகாரணம் துணைக்காரணத்தை இயக்குவது மட்டுமன்றி, அதன் சொந்த ஆற்றலால் செய்ய முடியாதவைகளைச் செய்யும் நிலைக்கு உயர்த்துகின்றது. துணைக்காரணம் மூலகாரணத்தின் செயலை மட்டுப்படுத்தி. சிறிது மாற்றி அமைக்கவல்லது. தனித்தனியே செய்யமுடியாதவற்றை இரு காரணங்களும் செய்கின்றன எனவே விளைவு இரு காரணங்களுக்கும் உரியது.

மூல ஆசிரியரும், துணை ஆசிரியரும்.

மனிதன் எழுதுகோலால் எழுதும்போது, மனிதனும் எழுதுகிறான். எழுதுகோலும் எழுதுகிறது. எழுதிய எழுத்து மனிதனுக்கும் எழுதுகோலுக்கும் பொதுவானது. இருவரும் எழுதப்பட்டவற்றிற்குப் பொறுப்பானவர்கள் எழுதுகோலின் அமைப்பு மை, நிறம், தடிப்பு. அழகு மனிதன் எழுதுவதை மட்டுப்படுத்தக் கூடியது, அதேபோன்று கடவுள் மூலகாரணமாகவும், மனித ஆசிரியர்களைக் கருவிகளாகப் பயன்படுத்தி மறைநூலை எழுதியபோது, மனித ஆசிரியர் துணைக்காரணமாகவும் செயல்புரிகின்றனர். இச்செயலின் விளைவான விவிலிய நூல் இருவருக்கும் பொதுவானது. மூலகாரணமாகிய கடவுள் சிறப்புமிக்க முதலாசிரியராகவிருந்தாலும், துணைக்காரணமாகிய மனித ஆசிரியரும் இந்நூலின் ஆசிரியரே. மூலகாரணம் கடவுட்தன்மையுடையதால். வேதநூல் இயற்கைக்கு மேம்பட்டது புனிதமானது. மனித ஆசிரியர்களது அகக்காரணங்கள் தடைப்படுவதிலை. அழிக்கப்படுவதில்லை. அவர்களது ஆளுமை, இலக்கிய அமைப்பு இலக்கிய நடை ஆகியவற்றிற்கேற்ப முதற்காரணத்தின் செயல் மாற்றியமைக்கப்படுகிறது சாதாரண கருவிக்கு (எழுதுகோல்) இல்லாத ஆற்றல் மனித கருவிக்குள்ளது. மனிதன் உயிர், உணர்ச்சி, பகுத்தறிவு, சுயாதீனம் உள்ளவன் ஆகவே கடவுள் மனிதனைக் கருவியாகப் பயன்படுத்திய பொழுது, அவனது இயல்புக்கும் ஆற்றலுக்கும் அமையவே பயன்படுத்தினார். ஒரு கருவியின் இயல்புக்கும் ஆற்றலுக்கும் மேற்பட்ட செயலைச் செய்ய அக்கருவியை எவரும் பயன்படுத்த முடியாது. ஆகவே கடவுள் மனித ஆசிரியர்களை

அவர்களது அறிவு, புத்தி, ஆராய்ச்சித்திறன், ஆளுமை, சுயாதீனம் ஆகியவற்றிற்கு மரியாதையளித்துப் பயன்படுத்தினார். எனவே மறைநூலாசிரியர்கள், ஏனைய ஆசிரியர்களைப் போல தங்களது சொந்த ஆற்றல், அறிவு, மனம், கற்பனா சக்தி ஆகிய அகக்காரணங்களைச் செயற்படுத்தி எழுதினர் எனவே மறைநூல்களிலே அவற்றை எழுதிய ஆசிரியர்களின் தன்மை, சிறப்புப் பண்புகள், ஆற்றல், மனப்போக்கு விருப்பு வெறுப்பு முதலியவற்றைக் காணலாம். அவர்கள் தங்களது தனிப்பண்புகளையும், தாங்கள் வாழ்ந்த காலம், தங்கள் பண்பாடு, வரலாறு, சூழ்நிலை தங்கள் காலத்தைய இலக்கிய அமைப்பு ஆகியவற்றின் பிரதிபலிப்பையும் தங்கள் நூல்களில் விட்டுச் சென்றுள்ளனர். இவைகளை அறிவது வேதநூலைப் புரிந்து கொள்வதற்கு அத்தியாவசியம். எனினும் வேத நூல் ஆசிரியர்கள் தங்கள் விருப்பம்போல் எழுதினாலும் பரிசுத்த ஆவியின் ஏவுதலால் எழுதினர். பரிசுத்த ஆவி விரும்பியதை அவர் விரும்பியவாறே எழுதினர் வேறொன்றையும் எழுதவில்லை. இதுதான் இறை அருள் பாலிப்பாகும்.

இறை வெளிப்பாடும் இறை ஊக்கமும்

இறைவெளிப்பாடும் இறையூக்கமும் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்டது: மனித புத்தியால் கண்டுபிடிக்க முடியாத உண்மைகளையோ மற்ற உண்மைகளையோ கடவுள் மனிதனுக்கு அறிவித்தல் இறைவெளிப்பாடு ஆகும் இறை ஏவுதல் என்பது கடவுளால் இயக்கப்பட்டு அவர் விரும்பியதை மட்டும் அவர் விரும்பியவாறே நூலாக எழுதுவதற்கு மனித ஆசிரியனுக்கு அளிக்கப்படும் அருங்கொடையாகும். இறைவன் உலகில் பற்பலவிதமாக பலமுறைகளில் பிதாப்பிதாக்கள், இறைவாக்கினர்கள், தம் மகன் கிறிஸ்து வழியாகத் தம்மை வெளிப்படுத்தியிருக்கிறார். இவ்வாறு இறைவன் வெளிப்படுத்தியவை பரம்பரை பரம்பரையாக வாய்மொழியாகத் தொன்றுதொட்டு வழங்கப்பட்டு வந்தன. இதை நாம் பாரம்பரியங்கள் என்று அழைக்கின்றோம். மறைநூல் ஆசிரியர் இந்தப் பாரம்பரியங்களைச் சேகரித்துத் தாவாரியாகப் பிரித்து ஒழுங்கு படுத்தி, அவற்றுட் சிலவற்றைத் தேர்ந்து, பொறுக்கியெடுத்துத் தொகுத்து, விளக்கியும் எழுதினார்கள். ஆசிரியர்கள் இதைப் பிரமாணிக்கமாகச் செய்து முடிக்க பரிசுத்த ஆவி அவர்களது சுயாதீனத்தை அழிக்காது. உதவிபுரிகிறார். ஆசிரியர்கள் அவ்வேலையை முடிக்கும் மட்டும் தனிப்பட்ட முறையில அவர்களுடன் உறைந்து வருகின்றார். தாம் விரும்பியவற்றை மனித ஆசிரியர்களது மனதில் நிச்சயமான கருத்துக்களாக உரு

வாக்கி, அவற்றை ஆசிரியர்கள் அறியவும். அறிந்தவற்றை எழுத விரும்பவும், எழுத விரும்பியவற்றை வழுவா உண்மையுடனும், பிரமாணிக்கத்துடனும் எழுதவும் செய்கின்றார். பரிசுத்த ஆவி. இது தான் வேதநூலில் "இறை ஏவுதல்" ஆகும். ஆகவே கடவுளின் வார்த்தை மனித ஆசிரியர்கள் மூலமாகவே நமக்கு வருகிறது. இவ்வாசிரியர்கள் தங்களது சூழ்நிலைக்கும் பண்பாட்டிற்கும் ஏற்ப கடவுளது செய்தியை மனித வார்த்தைகளில் நமக்கு அளித்துச் சென்றனர். ஆகவே இம்மனித ஆசிரியர்களையும், அவர்களது கலாச்சாரம், சமயம், இலக்கியநடை முதலியவற்றையும் நாம் நன்கு அறியாவிடில் கடவுள் அவர்கள் வழியாக என்ன கூறவிளைகிறார் என்பதை நாம் அறிய முடியாது வேதாகமம் பல்வேறு காலகட்டத்தில் வாழ்ந்த பல ஆசிரியர்களால், பல இலக்கிய மரபுகளில் எழுதப்பட்ட 73 நூல்களைக் கொண்டுள்ளது. இவற்றில் கதைகள் உண்டு, காவியம் உண்டு. சட்டம் உண்டு, சங்கீதம் உண்டு, காதல் உண்டு, கடிதங்கள் உண்டு. உவமைகள் உண்டு, உண்மை நிகழ்ச்சிகள் உண்டு, வேதநூல்களின் முதல் ஆசிரியர் இறைவனாயிருப்பதால் அதில் யாதொரு தவறும் இருக்க முடியாது. ஆனால் நூல் எழுதப்பட்டதன் நோக்கம், எழுத்தாளர் கையாண்ட இலக்கிய மரபு, ஆசிரியர்கள் வாழ்ந்த சூழ்நிலை ஆகியவற்றை நன்கு அறியாததால் ஒரு சில பகுதிகள் முரண்பாடுடையவையாக ஒரு சிலருக்குத் தென்படலாம். ஆனால் உண்மையில் எவ்வித முரண்பாடும் இல்லை. மூலமொழியில் எழுதப்பட்ட மூலப் பிரதிகள் மட்டுமே இறை ஏவுதலால் எழுதப்பட்டவை. மொழிபெயர்ப்புகள் மூலத்தை எந்த அளவு உள்ளபடி தருகின்றனவோ அந்த அளவே இறை ஊக்கம் பெற்றதெனலாம். மூலநூலிலே இடையிலே புகுத்தப்பட்ட இடைச் செருகல்கள், அடிக்குறிப்புகள், ஏடு பெயர்த்து எழுதும்போது இடைபுகுந்த பிழைகள் என்ற அனைத்தும் இறையூக்கம் பெற்றவை அல்ல.

ஓர் ஆசிரியன் ஒரு விடயம் பற்றி எழுதும் போது எல்லாக் கோணங்களிலிருந்தும் அதைப்பற்றி ஆராய்வதில்லை. ஒரு தனிச்சிறப்பான கோணத்திலிருந்து ஆராய்வான். உ. ம். வானவியல் ஆசிரியன் விண்மீன்களை நோக்கும் விதம் வேறு, ஒரு கவிஞன் நோக்கும் விதம் வேறு. மறைச்சிந்தனையாளன் நோக்கும் விதம் வேறு. விவிலிய ஆசிரியர்கள், மறைச்சிந்தனையாளர்கள் இயற்கை நிகழ்ச்சிகளை நோக்கிய விதம் தனிச்சிறப்புடையது. அவர்கள் உலகில் நடக்கும் யாவற்றையும் கடவுளது செயலாகக் கண்டனர். அவரது ஆற்றலையும், அன்பையும், சினத்தையும், ஆதரவு அளிக்கும் பண்பையும், பராமரிப்பையும் அவற்றில் கண்டனர். அவற்றையே வரலாறாக (சமய வரலாறு) எழுதினர். அவர்கள் எழுதியது அறிவியல் முறைப்

படி வரலாறு அல்ல, விஞ்ஞானம் அல்ல. ஒழுக்கவியல் அல்ல, மாறாக மறைநூல். ஆகவே வேதநூலை விஞ்ஞான நூலாகவோ, வரலாற்று நூலாகவோ, ஒழுக்கவியல் நூலாகவோ கருதிப் படிப்பது தவறு. அது மறை நூலாகவே படிக்கப்பட வேண்டும்.

வேதாகமம் எழுதப்பட்ட மொழி.

பழைய ஏற்பாட்டின் பெரும்பகுதி எபிரேய மொழியில் எழுதப்பட்டது. ஏனைய சிறுபகுதிகளும், புதிய ஏற்பாடு முழுவதும் கிரேக்க மொழியில் எழுதப்பட்டன. எபிரேய மொழியில் வேதாகமங்கள் தோன்றிப் பல ஆண்டுகள் சென்றபின் கிரேக்க நாகரிகம் உச்சநிலையை அடைந்தது; கிரேக்க மொழி செல்வாக்குப் பெற்ற காலத்தில், எபிரேய மொழியில் எழுதப்பட்ட வேதநூல்கள் பலருக்கு விளங்காதபடியால், கிரேக்க மொழியில் மொழிபெயர்க்கப்பட்டன. இம்மொழி பெயர்ப்பு எழுபது பெயரால் செய்யப்பட்டபடியால் 'செப்டுவாஜின்ட்' என்றழைப்பர். இது கி. மு. 3 ஆம் நூற்றாண்டில் தோன்றியிருக்கலாம். கிரேக்க சாம்ராச்சியம் வீழ்ச்சியடைய, உரோமைப் பேரரசு தோன்றியது. இங்கு இலத்தீன் மொழி முதலிடம் வகித்தபடியால், இலத்தீன் மொழியில் வேதாகமம் மொழிபெயர்க்கப்பட்டது. இதைச் செய்து முடித்தவர் புனித ஜெறோம். இவ்இலத்தீன் மொழி பெயர்ப்பு 'வல்கேற்', என்றழைக்கப்படுகிறது. இந்நூலிலிருந்தே ஏனைய நாட்டு மொழிகளில் பைபிள் மொழிபெயர்க்கப்பட்டது. வல்கேட்டைத்தழுவி மொழிபெயர்க்கப்பட்டதால் இம்மொழிபெயர்ப்புகளில் ஒரு சில குறைபாடுகள் இருக்கத்தான் செய்தன.

பழைய ஏற்பாடு இஸ்ராயேலின் 2000 ஆண்டுகளின் சரித்திரத்தையும், புதிய ஏற்பாடு ஆதித் திருச்சபையின் 70 வருட சரித்திரத்தையும் கொண்டுள்ளன. பழைய ஏற்பாட்டில் 46 நூல்களும், புதிய ஏற்பாட்டில் 27 நூல்களும் உள்ளன. ஆகவே வேதாகமம் பல நூல்களையும், பல ஆசிரியர்களையும், பற்பல கால சூழ்நிலையில், பற்பல இலக்கிய மரபில் எழுதப்பட்டுளவையையும் கொண்டுள்ளது. இவையெல்லாம் பைபிளை விளங்கிக் கொள்வதின் கடினத்தை நமக்கு உணர்த்துகின்றன. ஒரு நூலைப் படித்து அனுபவிக்க, அதன் பொருளைப் புரிந்து கொள்ள அது எழுந்துள்ள பின்னணி, எழுதப்பட்டதன் நோக்கம், அதிலே எழுதப்பட்டுள்ள எண்ணற்ற இலக்கிய நுணுக்கங்கள் ஆகிய அனைத்தையும் அறிய வேண்டும். மேலும் இன்று வரலாறு எழுதப்படும் முறையும், நோக்கமும், அன்று இஸ்ராயேல் மக்கள் வரலாறு எழுதிய முறையிலும்

நோக்கத்திலும் வேறுபட்டவை, இன்று ஆராய்ச்சியின் அடிப்படையில் ஆராய்ந்துகண்ட உண்மைகளையே வைத்து வரலாறு எழுதுகின்றனர். ஆனால் அன்று இஸ்ராயேலர் தங்களைத் தெரிந்துகொண்ட இறைவன் எவ்வளவு கருணையுடன் தம்மை நடத்தினார் என்பதைக் காட்டவே வரலாறு எழுதினர்; இவற்றையெல்லாம் அறிந்தாலும், வேதநூலின் முழுப் பொருளை நாம் முற்றிலும் அறிந்துவிட முடியாது. ஏனெனில் அவை கடவுளின் வார்த்தைகள். அதைக் கணிக்கக்கூடியவன் யார் ?

பழைய ஏற்பாட்டின் பகுதிகள்.

பழைய ஏற்பாடு யூத சமூகத்தில் உருவாகிப் படிப்படியாக ஒரு தொகுப்பாயிற்று. யூதர் பழைய ஏற்பாட்டை மூன்று பாகங்களாகப் பிரித்தனர்.

1. சட்டம் அல்லது தோரா... இதில் முதல் 5 புத்தகங்களும் அடங்கியுள்ளன. ஆதியாகமம், யாத்திராகமம், லேவியராகமம், எண்ணாகமம், உபாகமம்; பிற்காலத்தில் இவை பஞ்சாகமம் என அழைக்கப்பட்டன.

2. இறைவாக்கினர் ... நாம் இன்று இறைவாக்கினர் என்று கூறும் பகுதியைமட்டுமன்றி, வரலாற்று நூல்கள் பலவற்றையும் இங்கு காணலாம். யோசுவா, நீதிபதிகள், 1, 2 சாமுவேல், 1, 2, அரசர். இசையாஸ், எரேமியாஸ், எசேக்கியேல், மற்ற 12 சிறிய இறைவாக்கினர்;

3. இலக்கியங்கள் அல்லது சங்கீதங்கள் ... இப்பகுதியில் சங்கீதங்கள், பழமொழியாகமம், யோபு, உன்னத சங்கீதங்கள், ரூத், சங்கத் திருவுரையாகமம், எஸ்தேர், தானியேல், எஸ்திராஸின் இரு நூல்கள், நாளாகமத்தின் இரு நூல்கள் என்டவை உள்ளன.

கத்தோலிக்க வேதாகமம்.

கிறிஸ்துவின் காலத்திற்கு முன்னதாகவே கி. மு. 2 ஆம் நூற்றாண்டிலேயே இவ்வாறு தொகுத்துப் பிரிக்கப்பட்டிருந்தன. கிறிஸ்து பல முறைகளிலே இப்பகுதிகளைக் குறிப்பிட்டார். "மோயீசன் சட்டத்திலும், இறைவாக்குகளிலும், சங்கீதங்களிலும் என்னைக் குறித்துக் கூறியதெல்லாம் நிறைவேற வேண்டும்" (லூக். 24 : 44), வேதாகமத்தைக் கிரேக்க மொழியில் மொழிபெயர்த்தபோது, இன்னும் சில பகுதிகளையும் சேர்த்தார்கள். அவையாவன : தொபியாஸ், யூதித்.

தானியேல், எஸ்தேர் ஆகமத்திலும் சில புதிய பகுதிகள், ஞானாகமம், சர்வப்பிரசங்கியாகமம், பாருக், எரேமியாசின் கடிதம், என்பன. யெருசலேமில் இருந்த யூதர்கள் அப்புதிய பகுதிகளை ஒப்புக்கொள்ளவில்லை. ஆனால் பழங்காலத் திருச்சபை இவற்றையும் இறையூக்கத்தால் எழுதப்பட்ட நூல்களாகவே ஏற்றுக்கொண்டது. பின்பு திரிதெந்தீன் சங்கம் இதை உறுதிப்படுத்தி, திருச்சபையின் மறைநூல் தொகுதியில் 73 புத்தகங்கள் உள்ளன என்று அறிவித்தது சீர்திருத்த காலத்தின்போது, புரட்டஸ்தாந்து மதத்தினர் பழைய எபிரேய பைபிளில் இருந்த பகுதிகளை மட்டுமே, முழுப் புதிய ஏற்பாட்டுடன் தமது வேதாகமத்தில் வைத்துக்கொள்ளத் தீர்மானித்தனர்: இதுவே புரட்டஸ்தாந்து வேதாகமத்திற்கும் கத்தோலிக்க வேதாகமத்திற்கும் உள்ள வேறுபாட்டிற்குக் காரணம்: கத்தோலிக்க வேதாகமத்தில் காணப்படும் சில புத்தகங்கள் புரட்டஸதாந்தரின் வேதாகமத்தில் காணப்படுவதில்லை.

கத்தோலிக்க வேதாகமத்தில் பழைய ஏறபாடு பின்வருமாறு பிரிக்கப்பட்டிருக்கிறது:

1. பஞ்சாகமம் ... சட்டம். ... ஐ நூல்

2. வரலாற்று நூல்கள் ... யோசுவா, நீதிபதிகள், ரூத் 1, 2 அரசர், 1, 2 சாமுவேல், (3, 4 அரசர்), 1, 2 நாளாகமம், எஸ்திராஸ், நெகேமியாஸ், தொபியாஸ், யூதித், எஸ்தேர், 1, 2 மக்கபேயர்.

3. ஞானாகமங்கள் ... யோபு, தாவீது அரசர் சங்கீதங்கள், பழமொழி, சர்வப் பிரசங்கி, உன்னத சங்கீதம், ஞானாகமம், சங்கத் திருவுரையாகமம்.

4. தீர்க்கதரிசிகள் ... இசையாஸ், புலம்பல், பாருக், எரேமியாஸ், எசேக்கியேல், தானியேல் ஓசியாஸ், யோவேல், ஆமோஸ், அப்தியாஸ், யோனாஸ், மிக்கேயாஸ், நாகூம், அபகூக், சொபோனியாஸ், அக்கேயூஸ், சக்கரியாஸ், மலக்கியாஸ்.

★ ★ ★

# 2. இஸ்ராயேல் வரலாற்றின் மைல்கற்கள்

1. ஆரம்ப காலம் அல்லது வரலாற்றிற்கு முற்பட்ட காலம்: (ஆதி; 1-11)

படைப்பு, மனிதனின் வீழ்ச்சி, மீட்பரின் வாக்குறுதி, காயீனின் கொலை, சலப் பிரளயம், நோவாவின் உடன்படிக்கை, பாபேல் கோபுரம், மனுக்குலம் பிரிந்து பரவுதல்;

2. பிதாப்பிதாக்கள் காலம் : (ஆதி. 12-50, 1800 கி மு.)
ஆபிரகாம், ஈசாக், யாக்கோபு, யோசேப்பு இவர்களோடு இறைவன் செய்த உடன்படிக்கை;

3. மோயீசனின் காலம் : (யாத்திராகமம், எண்ணாகமம் 1200 கி. மு.) எகிப்திய அடிமைத்தனம், செங்கடற் பிரயாணம், பத்துக்கற்பனைகளும், உடன்படிக்கையும்.

4. நீதிபதிகள் காலம் : (கி. மு. 1200 – 1100) இது சுமார் 200 ஆண்டுகளை அடக்கியுள்ளது. டெபோறா, பாராக், அமெலேக், சாம்சன், ஒதோனியேல், ஜெதேயோன் ஜெப்தே (நீதிபதிகள் ஆகமம், ஜோசுவா ஆகமம்)

5. அரசர்கள் காலம் : 1, 2 சாமுவேல், 1, 2 அரசர், 1, 2 நாளாகமம் (1020 - 586)

| | | | |
|---|---|---|---|
| ... | ஒரு அரசு | : | 1020 – 930 |
| ... | இரு அரசுகள் | : | 930 – 722 |
| ... | யூதா தனி அரசு | : | 722 - 586 |

6. நாடுகடத்தப்பட்ட காலம் : பபிலோனியாவில் இஸ்ராயேலர்
நபுக்கொடனசார் (586-539)

7. இறைவாக்கினர் காலம் : (800 - 400 கி மு.)

| | |
|---|---|
| வட அரசு | ... ஆமோஸ், ஒசியாஸ், எலியாஸ், எலிசேயு. |
| தென் அரசு | ... இசையாஸ், எரேமியாஸ். |
| பபிலோனியா | ... எசேக்கியேல், தானியேல் |

8. பேசியரின் ஆதிக்க காலம் ... (538 - 333 கி. மு.) சிரூஸ், எஸ்திரா, நேகேமியா

9. கிரேக்கரின் ஆட்சிக் காலம் ...(333)- மகா அலெக்சாண்டர்
1, 2 மக்கபே ஆகமம்.

10. உரோமையரின் ஆட்சிக்காலம் ... (63 கி. மு.) பொம்பேயி

11. கிறிஸ்துவின் பிறப்பு.

# 3. பஞ்சாகமத்திற்கு முன்னுரை

வேதாகமத்தின் முதல் ஐந்து புத்தகங்களின் தொகுதிக்குப் பெயர் பஞ்சாகமம். பழங் காலத்தில் எபிரேயர் அதைத் தோரா, சட்டம் என்று அழைப்பர். ஏனெனில் அதில் முக்கியமாகச் சட்டப் பகுதிகள் வரலாற்று நிகழ்ச்சிகளுடன் சேர்த்துத் தரப்படுகின்றன. இவ் ஐந்து புத்தகங்களும் வேதாகமத்திற்கு உட்கரு போன்றவை. ஆதியாகமம் உலகப் படைப்பைப் பற்றியது. யாத்திராகமம் ... எபிரேயர் எகிப்தைவிட்டு வெளியேறியது பற்றியது. லேவியராகமம் பொது வழிபாடு, தனி வழிபாடுகளின் சடங்கு முறைகள் பற்றியது. எண்ணாகமம் ... பாலைவனத்தில் இஸ்ராயேலரின் வரலாறு ... உபாகமம் ... கடவுளுடைய கட்டளைகளை அனுசரித்து அவருக்கு விசுவாசமுள்ளவர்களாக இருக்கவேண்டும் என்று வற்புறுத்தும் போதனை, புத்திமதிகள் அடங்கிய நூல். மோயீசன் பஞ்சாகமத்தின் ஆசிரியர் என்பது மிகத் தொன்மை வாய்ந்த பரம்பரை. எனினும் அதை முற்றிலும் அவரே எழுதினார் என்று சொல்ல முடியாது. இன்றைய வேதாகம ஆராய்ச்சியின்படி, மோயீசன் எழுதிய மூலநூல் இஸ்ராயேலர் வரலாற்றில் பல நூற்றாண்டுகளாகப் படிப்படியாக மாற்றம் அடைந்து, புதுப்பகுதிகளை (லேவித்தர், உபாகமம்) ஏற்று, இன்று, பஞ்சாகமமாகக் காட்சி தருகிறது.

பஞ்சாகம ஆசிரியர்.

மோயீசனுடைய காலம் கி. மு. 1200 என்பர். பஞ்சாகமம் புத்தக வடிவு பெற்ற காலம் கி. மு. 500 – 400 வரை என ஆராய்ச்சி வழியாக அறிகின்றோம். மோயீசன் இறைவனிடம் பெற்ற கற்பனைகள், அவரது ஆணைப்படி அவர் செய்து தந்த சட்டங்கள்தான் பஞ்சாகமத்தின் உயிர் நாடி. இவையனைத்தும் மோயீசனால் எழுதப்பட்டவை அல்லது அவரால் கூறப்பட்டு, வழி வழி வந்து. பின் எழுதப்பட்டவையே; ஆகவே பஞ்சாகமம் மோயீசனால் எழுதப்பட்டது

எனக் கருதுவதில் குற்றம் இல்லை; பஞ்சாகமத்தை ஆசிரியர்கள் தொகுத்தபொழுது, அவர்களுக்கு நன்கு நினைவிலிருந்த நிகழ்ச்சி இஸ்ராயேல் மக்கள் எகிப்தில் பார்வோன் மன்னனின் அடிமைத்தனத்திலிருந்து வெளியேறி, பாலும் தேனும் பொழியும் பலஸ்தீனா நாட்டில் குடியேறியது. ஆகவே இதையொட்டிய நிகழ்ச்சிகளைச் சேகரித்து எழுதியபொழுது, இவ்விடுதலையின் ஆணிவேராயிருந்த மோயீசனைப் பாராட்டி அவர் பிறப்பு, வளர்ப்பு, செயல்பற்றி தாம் அறிந்ததை கேட்டதை, பரம்பரையாக செவி வழி வந்ததை எழுதி வைத்தனர். அத்தோடுமட்டும் நின்றுவிடாமல் அப்பால் சென்று, இஸ்ராயேலரின் பிதாவாகிய ஆபிரகாமின் காலத்திலிருந்து நடந்ததாகத் தாம் செவி வழி, நூல்வழியாக அறிந்ததையும் எழுதித் தந்தனர். மோயீசனுக்கு முன்னர் நடந்த சம்பவங்கள் ( ஆபிரகாம் கி. மு. 1850 ) அவர்கள் எழுதிய காலத்திற்கு எட்டாத தொலைவிலிருந்தாலும், தாங்கள் கேட்டதை, பாரம்பரியமாக வருவதை உள்ளபடியே எழுதினர். ஆபிரகாமுக்கு அப்பாலும் சென்று, மெய்யான இறைவனால் படைக்கப்பட்ட ஆதிமனிதனின் வழித்தோன்றல்தான் ஆபிரகாம் இனத்தினர் என்பதைக் கூறி, தங்கள் இனப் பெருமையையும், குலப் பெருமையையும் கூற விரும்பினர். ஆகவே இக்கோணத்தில்தான் நாம் ஆபிரகாமுக்கு முன் நடந்த நிகழ்ச்சிகளையும், உலக ஆரம்பத்தைப்பற்றிய பகுதிகளையும் நோக்கவேண்டும். அதாவது நடந்ததை அறிவிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் எழுதப்படவில்லை. ஆனால் அவர்கள் வாழ்வின் மையமாகிய இறைவன் அவர்களைத் தெரிந்து, போரிலே வெற்றியளித்து இஸ்ராயேலரை எவ்வளவு கருணையுடன் நடத்தினார் என்பதைக் காட்டவே எழுதினர். வரலாற்று நிகழ்ச்சிகளை சாதாரண நிகழ்ச்சிகளாக கருதாமல், அவற்றை இறைவன் தம் மக்களுடன் கொண்ட தொடர்பின் சின்னங்கள் எனக் கருதிய ஆழ்ந்த மதப் பற்றுடைய மனிதர்களால் எழுதப் பெற்றவை. மதச்சார்பின் அடிப்படையில் எழுதப்பட்டிருப்பதால் அது கூறும் வரலாற்றின் மதிப்புக் குறைந்துவிடவில்லை. மாறாக அதனை எழுதிய ஆசிரியர்கள் வரலாற்றினை எவ்வாறு புரிந்து கொண்டார்கள் என்பது புலனாகின்றது. ஆகவே ஆதியாகமம் இன்று நாம் சரித்திரம் என்று சொல்லும் பொருளில் சரித்திரப் புத்தகமன்று, இயற்கை வரலாறும் அன்று. உலகமும் மனித குலமும் தோன்றிய விதத்தைப்பற்றிய ஆராய்ச்சியை அதில் காணமுடியாது. முதன்முதல் மனிதனுக்கும், அவனைப் படைத்தவருக்கும் உள்ள தொடர்பை நிலைநாட்டும் வேதப் பாடங்களையே காணலாம்.

பஞ்சாகமம் பல நூல்களின் தொகுப்பு:-

படைப்பின் வரலாறு விவிலியத்தின் முதல் மூன்று அதிகாரங்களில் விபரிக்கப்படுகின்றது: முற்காலத்தில் வேதாகமம் கடவுளின் மெய்மொழியாகக் கருதப்பட்டது. மோயீசனே ஆதியாகமத்தின் ஆசிரியராகவும், ஆதியாகமம் தன் முதல் அதிகாரங்களில், இறைவனைத் தவிர வேறு எவராலும் அறியமுடியாத சில நிகழ்ச்சிகளை விளக்குகின்றதெனவும் கொண்டு, ஆதியாகமம் இன்றிருக்கும் இதே, வடிவில் மோயீசனுக்கு இறைவனால் வெளியிடப்பட்டிருக்க வேண்டும், என்றும் அவர்கள் முடிவு செய்துவிட்டனர். ஆகவே இவ்வதிகாரங்களைச் சொல்லுக்குச் சொல் அப்படியே இறைவன் சொல்லியது போல் ஏற்றுக்கொண்டு விளங்க முற்பட்டனர்: ஆனால் இன்று அது அப்படி எழுதப்பட்டதல்ல என்று நன்கறிவோம். அது இறைவனின் ஏவுதலால் எழுதப்பட்டது உண்மையே. ஆனால் அப்படியே இறைவனால் வார்த்தைக்கு வார்த்தையாகக் கூறப்பட்டது என்பது தவறு. மாறாக வேதாகம ஆசிரியர்களும் பிறரைப்போல எழுத்து வடிவாகவும், வாய்மொழியாகவும் தமக்குக் கிடைத்த பல மூலகங்களின் உதவியைக்கொண்டு தம் புத்தகங்களைத் தொகுத்தனர். இவர்களின் தொகுப்பில் அடங்கியுள்ள இறை வெளிபாட்டு உண்மைகளும் இப்பாரம்பரிய மூலங்களிலிருந்து வருகின்றன.

ஆதி. 1—3இல் காணப்படும் படைப்பின் வரலாற்றை கவனமாகப் படிக்கும் போது அங்கு இரண்டு வெளித்தோற்றத்தில் சற்று முரண்பாடான வரலாறுகளை நாம் அவதானிக்கின்றோம். படைப்பின் வரலாறு இருமுறை இடம்பெறுகிறது. முதல் அதிகாரத்தில் (1:1) கடவுள் வார்த்தையால் ஒளி, மண் தாவரம், விலங்கு முதலிவற்றை உண்டாக்கியபின், படைப்பின் நிறைவான மனிதனைக் கடவுள் தோற்றுவித்தார். இரண்டாம் (2:4) அதிகாரத்தில் நிலையான மனிதனை உருவாக்கி, அவனுக்குத் துணைசெய்ய யாவும் படைக்கப்படுகின்றன. ஒரு வரலாறு இருமுறை, இருவகையாக இரு மரபில் வர்ணிக்கப்பட்டுள்ளது.

இருவகையில் உலகம் உருவானது: முதலாவது கடவுள் நீர்த்திரளை வானவெளியால் பிரிக்கின்றார். மேலேயுள்ள நீரைப் பிரித்து வானத்தைப் படைத்தார். பின் கீழேயுள்ள நீரைப் பிரித்து பூமியைப் படைத்தார்; (1:6) மற்றது நில வளமும், நீர் வளமும் இல்லாத வரண்ட பூமி உண்டாக்கப்படுகிறது: மழையைப் பொழியச் செய்து, புற்பூண்டுகளை வளரச் செய்கிறார் (2:57), அதாவது படைப்பு நீரால் நிரம்பியும்:


வரண்டும் இருக்கின்றது. கடவுள் பெயரும் வேறுபடுகிறது ஒன்று கடவுளை 'எலோகிம்' (கடவுள்) என்றழைக்கின்றது மற்றது 'யாவே' (ஆண்டவராகிய கடவுள்) என்றழைக்கின்றது. இரு பெயர்களும் ஒரே பரம்பொருளை உணர்த்துகின்றன. இறையியலும வேறுபடுகின்றது. முதலதிகாரம் கற்பிக்கும், உண்மைகள் புலன்களைக் கடந்த, ஆவிக்கடுத்த சொற்றொடரில தரப்பட்டுள்ளன. அருவப் பொருளின் துணைக்கொண்டு. பொருளின் வார்த்தையியலையும், மனிதரது சிறப்பையும் வர்ணித்துள்ளார் ஆசிரியர். இரண்டாம் அதிகாரத்தில், இறையியல் மனித கலை வடிவம் பெறுகின்றது. பருப் பொருளின் துணையுடன் மனிதனின் தோற்றம் முடிவு, ஆண், பெண், உறவு, வீழ்ச்சி, அதன் விளைவு அனைத்தையும் அறிவிக்கின்றார்.

மேலும் ஆதாமின் சந்ததியினர் மரபுமுறை இருமுறை தரப்படுகிறது (ஆதி. 4:25-26:5:1-31) பெருவெள்ளம் பற்றி இரு விபரிப்பைக் காணலாம். (ஆதி. 6:5;9:18). ஆகார் இருமுறை வெளியனுப்பப்படுகிறாள். (ஆதி. 16;6: 21:24) மோயீசனை இருமுறை யாவே அழைக்கிறார். (யாத். 3:4) மன்னா பொழிதல் இருமுறை விவரிக்கப்படுகின்றது (யாத 16: எண்.17) சாராள் இருமுறை அன்னிய அரசால் கடத்தப்படுகிறாள். மோயீசனது மாமன் ஓர் இடத்தில் இரகுவேல் என்றும் (யாத். 2:18) மற்றொரு இடத்தில் யெத்திரோ (யாத். 3;1.18:1) என்றும் அழைக்கப்படுகிறார். யாத்திராகம மலை சீனாய் மலை என்றும், ஓரேபுமலை என்றும் அழைக்கப்படுகின்றது. சில பகுதிகள் எழுதப்பட்ட பாணி உயிர் உள்ளதாகவும், அழகாகவும், மனிதப் பண்புமிக்கதாகவும் இருக்க, மற்ற இடங்களில் வரட்சியாகவும் சலிப்பைத் தருவதாகவும் உள்ளன;

## நான்கு மரபுகள்

இவையெல்லாம் விவிலிய ஆராய்ச்சியாளர்களைச் சிந்திக்கச் செய்தன ஆய்வாளர்கள் பஞ்சாகமத்தை நுணுக்கமாக ஆராய்ந்தனர். ஆதி. 1-3 இல் காணப்படும் படைப்பின் வரலாற்றில் வெளித்தோற்றத்தில் சற்று முரண்பாடு உடைய இரு வரலாறுகள் உள்ளதை அவதானித்தனர். இரு வரலாற்றையும் ஒப்பீட்டுப் படித்த விவிலிய நிபுணர்கள், இப்பகுதியில் இரு மரபுகள் இருப்பதாக இயம்புகின்றனர். இதை 1678 இல் றிச்சேட் சைமன் என்பவரும், 1753 இல் ஜோண் அஸ்டரக் என்பவரும் அறிவித்தனர். தொடர்ந்து 1853 இல் கூப்பெல்ட் என்பவர் ஆதியாகமத்தில் மூன்று மரபுகள் உள்ளதென்பதைத் தெளிவாகக் காட்டினார். ஒரு வருடம் கழித்து, 1854 இல் ரெயிம் என்பவர் பஞ்சாகமத்தில் இன்னுமொரு, நான்காம் மரபும் உள்ளதெனக் கூறியுள்ளார். குயனென் (1870) வெல்காசன (1878) போன்ற விவிலிய நிபுணர்களின் அயரா உழைப்பின் பயனாக, இன்று தோரா நான்கு பாரம்பரியங்

களின் கலவை என்பது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. இவ்வேடுகள் வெவ்வேறு இடங்களில், வெவ்வேறு காலங்களில் தோன்றியவை. முதலில் யாவே ஏடு, எலோகிம் ஏடு என இரு பாரம்பரிய ஏடுகள் இருந்தன. யாவே ஏடு, கி. மு. 9ஆம் நூற்றாண்டில், யூதேயாவில் எழுத்து வடிவம் பெற்றது. சிறிது காலத்தின் பின், கி. மு. 8ஆம் நூற்றாண்டில், எலோகிம் ஏடு... வட அரசாகிய இஸ்ராயேலின் தலைநகராகிய சமாரியாவில் எழுதப்பட்டது. வட அரசின் அழிவுக்குப் பின் (722) இவ்விரு பாரம்பரிய ஏடுகளும் ஒன்றாக இணைக்கப்பட்டன. எசேக்கியாஸ் காலத்தில் யெருசலேமில் எழுதப்பட்ட உபாகம மரபு, ஜோசியாஸ் காலத்தில் (622) ஆலயத்தில் கண்டுபிடிக்கப்பட்டு, 6ஆம் நூற்றாண்டில் மற்றைய இருபாரம்பரியங்களுடனும் சேர்க்கப்பட்டது குருக்கள் பாரம்பரியம் பபிலோனியாவுக்கு நாடுகடத்தப்பட்ட காலத்தில் (475) எழுதப்பட்டு, நாடு திரும்பியபின் (420) ஏனைய மரபுகளுடன் இணைக்கப்பட்டது ஆகவே இன்று நாம் காணும் வடிவில் தோரா அல்லது ஐந்நூல் வெவ்வேறு பாரம்பரியங்களின் தொகுப்பாகும். எனவே ஐந்நூலை வாசித்து விளங்கிக் கொள்வதற்கு இப்பாரம்பரியங்களின் சிறப்பியல்புகளையும், அவை எழுதப்பட்ட பின்னணியையும் அறிந்து கொள்வது அவசியம்.



# 4 நான்கு மரபுகளும் அவற்றின் சிறப்பியல்புகளும்

யாவே பாரம்பரியம் : ( J மரபு ) - கி. மு. **850** )

இது ஞானத்தின் சிறந்த சாலமோன் அரசர் காலத்தில், அவரது சபையிலிருந்த அழகிய கவிபாடும் புலவர்களின் உருவாக்கம். இம்மரபு மனிதனின் மாட்சியையும், வீழ்ச்சியையும் நுணுக்கமாக அறிந்த காலத்துக் கவிஞனின் படைப்பு இப்பாரம்பரியம் படைப்பு முதல் இறைவனை 'யாவே' என்ற அவர் சொந்தப் பெயரால், அழைக்கின்றது. எனவே அப்பாரம்பரியம் 'யாவே பாரம்பரியம்' என அழைக்கப்படுகிறது இதை இஸ்ராயேல் மக்களின் பெரும் வீர காப்பியம் என்றும் அழைப்பர். இது யெருசலேம் வாழ் மக்களின் மரபு. ஏனெனில் அவர்களே கடவுளை யாவே என்றழைத்தனர். இலக்கியம் எளிய நடையிலுள்ளது. விண்ணக உண்மைகளை சாதாரண மக்களும் எளிதில் அறிய, மனக்கண்முன் உயிர்ச்சித்திரமாக உருவாக்கித் தன் கருத்தை விபரிக்கின்றார் ஆசிரியர். விண்ணக அருவப் பொருளை பருவப்பொருள் வாயிலாகக் கூறுகின்றார், சிறப்பான சொற்றொகுதிகள், உயிருள்ள தெளிவான, கவர்ச்சியுள்ள நடையழகு, சிறப்பான உரையாடல்கள், மனித நிலைகளை உணரும் ஆற்றலுள்ள உளவியல் நோக்கு முதலியன இப்பாரம்பரியத்தின் சிறப்பியல்களில் சில மனிதர்களையும், அவர்கள் பண்புகளையும், ஒழுக்க நெறிகளையும் சித்திரிப்பதில் அக்கறை காட்டுகின்றது. கதைகள், உரையாடல்கள், உருவங்கள், சித்திரங்கள் வழியாக ஆழ்ந்த சமயக் கருத்துக்களை எடுத்துக் கூறுகின்றது.

இப்பாரம்பரியம் ஆழ்ந்த இறைவியல் நோக்கு உள்ளது மனிதப் பண்புகள் இறைவனுக்குச் சாற்றிக் கூறப்படுகின்றன. கடவுள் மனிதனை உருவாக்குகின்றார். உயிர் மூச்சை ஊதுகின்றார். தோட்டம் அமைக்கின்றார் மனிதனோடு பேசுகின்றார். ஆடை செய்து கொடுக்கின்றார். சினம் கொள்கின்றார். வருந்துகிறார். அன்பு காட்டுகிறார் மனிதனை இறைவனோடு தொடர்பு படுத்தி அளிக்கின்றது. தேர்ந்தெடுத்தல், வாக்குறுதி, உடன்படிக்கை அடங்கிய இறைத்திட்டம் இவற்றைக் காண்கிறோம் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களுக்கென இறைவன் ஒரு திட்டத்தை வகுத்துள்ளார் என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. காரியங்கள் தொடங்கியது எவ்வாறு? ஏன்? என்ற வினாக்களுக்கு. சிறப்பாக உலகம், மனிதன்; பாவம், தீமை, துன்பம். மொழிகள் ஆகியவற்றின் காரணங்களைக் கூற முயல்கிறது. பாவத்தின் மத்தியிலும்

நம்பிக்கையைக் கொடுக்கின்றது. மெசியாவைப்பற்றிய இறை வாக்குகள் பெரும்பாலும் இப்பாரம்பரியத்தில் காணப்படுகின் றன. இளையமகன் சலுகைபெறும் கருத்தும் (இஸ்மாயிலைவிட ஈசாக்கும், ஈசோவைவிட யாக்கோபும்) தெளிவாகக் கூறப்படு கின்றது. இங்கு பெரும்பாலும் சட்டத்தொகுப்பே இல்லையென லாம்.

எலோகிம் பாரம்பரியம் (E மரபு) கி. மு. 800

இஸ்ராயேல் வட அரசு, தென் அரசு என இரு அரசு களாகப் பிரிந்து (922). வட அரசின் தலைநகராகச் சமாரியா இருந்த காலத்தில் இப்பாரம்பரியம் எழுதப்பட்டது. இங்கு இறை வன் எலோகிம் என்ற பொதுப்பெயரால் அழைக்கப்படுகின்றார். சாமாரியாவில்தான் இறைவனை எலோகிம் என அழைத்தனர். இப்பெயரிலிருந்து இப்பாரம்பரியம் எலோகிம் பாரம்பரியம் அல் லது 'E' மரபு என அழைக்கப்படுகின்றது. இப்பாரம்பரியத்தில் இறைவாக்குரைஞரின் பணி தெளிவாகக் காணப்படுவதால் இது இறைவாக்குரைஞரின் வேலைப்பாடாக இருக்க வேண்டும் எனக் கருதப்படுகின்றது. இங்கு சீனாய்மலை ஓரேபு மலை என்றும் கனேயர் அமோனியரென்றும் அழைக்கப்படுகின்றனர்.

இப்பாரம்பரியம் குறுகிய, மிக வரையறுக்கப்பட்ட நோக் கத்தை உடையது. இங்கு தொடக்க வரலாறு இல்லை. ஆபிர காமின் வாழ்க்கையோடு ஆரம்பமாகிறது. இறைவனுக்கு மனி தப் பண்புகளைச் சாற்றிக் கூறுவது தவிர்க்கப்படுகின்றது. இறை வனுக்கும் மனிதருக்குமிடையே நீண்ட இடைவெளி, இறைவன் மனிதனோடு நேரடியாகத் தொடர்பு கொள்வதில்லை. பொது வாக மேகங்களிலிருந்து, கனவில், தீயின் நடுவில், வானதூதர் வழியாக மனிதனோடு உறவாடுகிறார். அருஞ்செயல்களின வியத்தகு கருத்து அழுத்தமாகக் கூறப்படுகின்றது இறைவனுக்கு ஏற்காத பொது மக்களின், அன்னியரின் சமயப் பழக்க வழக்கங் களை எதிர்க்கும் மனப்போக்கும், பாவம் பற்றிய ஆழ்ந்த உணர்வும் காணப்படுகின்றது. யாத்திரைக் காலமும், வாக்களிக் கப்பட்ட நாட்டைக் கைப்பற்றிய காலமும், இப்பாரம்பரியத் தில் உன்னத காலங்களாகும். சீனாய் மலை உடன்படிக்கை இதன் உச்ச நிலையாகும், பாலைவன வாழ்வு உன்னதமானதாக, விரும்பத்தக்கதாகக் காட்டப்படுகின்றது. இப்பாரம்பரியம் வட அரசின் புனித இடங்களை மையமாகக் கொண்டுள்ளது நல்ல சிறப்பான இலக்கிய நடையும், போதிக்கும் தன்மையும்உண்டு. மனிதர் மட்டில்லாமல், நிகழ்ச்சிகள் மட்டிலும் மிகுந்த கவனம் செலுத்தப்படுகின்றது.

வட அரசு அசீரியரால் அழிக்கப்பட்டபின் (721), அகதிகள் யெருசலேமுக்கு வழிபடச் சென்றபோது எலோகிம் பாரம்பரியத்தையும் எடுத்துச் சென்றனர். எல்லா இஸ்ராயேலரையும் யாவேயின் வழிபாட்டுக்கு யெருசலேமுக்குக் கொண்டுவர, யூதாவை ஆண்ட எசெக்கியாஸ், யாவே பாரம்பரியத்தையும், எலோகிம் பாரம்பரியத்தையும் ஒன்றாக இணைத்து வழிபாட்டில் பயன்படுத்தினான். இதன் விளைவாக எலோகிம் பாரம்பரியம் ஒரு துணைப் பாரம்பரியமாகி, சிறிது பழுதுபட்டது.

**உபாகமப் பாரம்பரியம் (D-மரபு) - (கி. மு. 620)**

பஞ்சாசமத்தின் கடைசி நூலாகிய உபாகமத்தில் தான் இப்பாரம்பரியம் மிகுந்து காணப்படுகின்றது. எனவே இதை உபாகமப் பாரம்பரியம் என அழைப்பர். இப்பாரம்பரியத்தின் சட்டம், பழக்க வழக்கங்களின் உட்கரு வட அரசில் தோன்றியிருக்கவேண்டும். ஏனெனில் இதில் காணப்படும் அழுத்தம் எலோகிம் பாரம்பரியத்தை ஒத்ததாக இருக்கிறது. ஆசிரியர் காலத்துப் பின்னணி இம்மரபில் காணப்படுகின்றது. வட அரசைச் சேர்ந்த குருக்கள், லேவியர் ஏற்கனவேயிருந்த சட்டங்களைத் தொகுத்து, மோயீசனுடைய அறிவுரைப் பகுதிக்குட்புகுத்தி, அதற்கு ஒரு வரலாற்றுப் பின்னணி அளித்தனர். வட அரசு அழிந்த போது, அகதிகளால் தென்னரசுக்குக் கொண்டுவரப்பட்டது. இங்கு இச்சட்டங்களும், பழக்க வழக்கங்களும் வரையறுக்கப்பட்டு, ஒழுங்கு செய்யப்பட்டு, எசெக்கியாஸ் அரசன் காலத்தில் இப்பாரம்பரியம் நூல் வடிவம் எடுத்தது. 7 ஆம் நூற்றாண்டில் ஜோசியாஸ் யெருசலேம் ஆலயத்தைத் திரும்பக்கட்டிய போது இந்நூல் கண்டுபிடிக்கப்பட்டது. பபிலோனுக்கு நாடு கடத்தப்பட்ட காலத்தில் இன்னும் பல செய்திகள் சேர்க்கப்பட்டு, அங்குதான் இப்பாரம்பரியம் இறுதி வடிவம் எடுத்திருக்கவேண்டும்.

இப்பாரம்பரியத்தின் குறிக்கோள் வரலாற்று நிகழ்ச்களையோ இறைவன் தந்த எண்ணற்ற சட்டங்களையோ குறித்துச் சொல்வது மட்டுமல்ல, மாறாக அவற்றைக் கூறி, மக்களிடையே மனமாற்றத்தை ஏற்படுத்தி, அவர்கள் இறை பற்றும் நம்பிக்கையும் கொண்டொழுகக் கற்பிப்பதாகும். எனவே '' இஸ்ராயேலே கேள் '' '' கர்த்தரின் குரலைக் கேள் '' '' கர்த்தர், உன் கடவுள் கூறுகிறார் '' என்ற சொற்றொடர்கள் திரும்பத் திரும்ப வருகின்றன. ஆசிரியர் தன் சொற்றிறனைப் பயன்படுத்தி மக்களைப் புனித வாழ்வுக்கு அழைத்துச் செல்ல முயலுவதை இந்நூலின் ஒவ்வொரு

பக்கத்திலும் பார்க்கலாம்; முழு நூலும் மூன்று சொல்வன்மைமிக்க மறைமொழிவாக அமைந்திருக்கின்றது. அதன் நடையில் செறிந்த சொற்றிறம் வாய்ந்த சொற்பொழிவுத் தன்மையும், உபதேசத்தன்மையும், ஒழுக்கமுறைப் பணியும், சட்டத்தன்மையும், செவிமடுப்போரைத் தூண்டும் தன்மையும் காணப்படுகின்றன. இப்பாரம்பரியம் உடன்படிக்கையை இறைவன் இஸ்ராயேலை அன்போடு தேர்ந்தெடுத்ததாகவும், சட்டத்தை இத்தேர்வுக்கு இஸ்ராயேல் அளிக்கும் பிரமாணிக்கமுள்ள பதிலாகவும் கருதுகிறது. இவை இப்பாரம்பரியத்தின் அடிப்படை இறையியல் கருத்துக்கள். உடன்படிக்கைச் சட்டத்தைப் பிரமாணிக்கமாக அனுசரிப்பதாலும் யெருசலேமின் ஒரே புனித இடத்தில் இறைவனுக்கு அளிக்கப்படும் தூயவழிபாட்டுக்குத் திரும்பி வருவதாலும் தான் மீட்பு அடையமுடியும். யெருசலேமைத் தவிர்ந்த பிற புனித இடங்கள், சிறப்பாக வட அரசைச் சேர்ந்த புனித இடங்கள் விலக்கி ஒதுக்கப்படுகின்றன.

குருக்கள் பாரம்பரியம் எழுதப்படமுன் ஜோசியாஸ் அரசனது காலத்தில் ஏறக்குறைய கி. மு. 600 இல் இது 'யாவே' 'எலோகிம்' பாரம்பரியங்களுடன் இணைந்தது.

குருக்கள் பாரம்பரியம் : (P - மரபு) - கி. மு. 475

இது யூத குருக்களின் மரபு யெருசலேம் குருக்கள் இப்பாரம்பரியத்தை எழுதியதாகக் கூறப்படுகின்றது. கி. மு. 586 இல் பபிலோனியர் யெருசலேமைக் கைப்பற்றி மக்களை அடிமைகளாகப் பபிலோனுக்குக் கொண்டு சென்றனர். இங்குதான் இப்பாரம்பரியம் ஒரு தனிப்பட்ட நூலாக இறுதி வடிவம் பெற்றது;

நாடுகடத்தப்பட்ட காலத்தில் பபிலோனிய மக்களின் சமய, சமூகத் தேவைகள் மாறின பல இஸ்ராயேலர் 'யாவேயை' மறந்து, சட்டங்களைக் கைவிட்டு, பபிலோனியரின் மதத்தைத் தழுவினர். எனவே யூதமதத்தையும், இனத்தையும், சட்டங்களையும் காக்கவேண்டிய சூழ்நிலை கடமைகள்பற்றி குருக்களால் கற்பிக்கப்பட யாவேயை வழிபட, செபக்கூடங்களை ஆரம்பித்து ஒன்றுகூடினர் இக்கூட்டங்களில் பரிசுத்த வரலாறு அவர்களுக்கு மீண்டும் எடுத்துச் சொல்லப்பட்டது. குருக்கள் தங்கள் சூழ்நிலைக்கும் மனப்போக்குக்கும் ஒத்தவிதத்தில், இஸ்ராயேலரின் வாழ்க்கையை ஒட்டி, ஆழ்ந்த வழிபாட்டு அடிப்படையில், பபிலோனிய மரபில் வரலாற்றை எடுத்துக் கூறினர். கடந்தகால அன்பு

உடன்படிக்கைகளின் தொடர்கதையாக எடுத்துக் கூறினர். அதில் ஆரோனுக்குச் சிறப்பிடம் கொடுத்து, அவர் வழித் தோன்றல்களான குருக்களை மக்கள் தலைவர்களாக ஏற்றுக் கொண்டனர். வழிபடுதல் இஸ்ராயேல் வாழ்வின் மையமாக விளங்கியது.

இப்பாரம்பரியம் நீண்ட முன் வரலாற்றைக் கொண்டது. இதில் மிகப்பழமைமிக்க கருத்துக்களைக் காணலாம். 'யாவே' பாரம்பரியத்திற்கு மாறான தன்மை உடையது. நடை மெய்யியல் போன்றது. ஆள்த்தன்மையற்றது, சுவையற்றது, வரட்சியுடையது. வாக்கியங்கள் குறுகியவை. பொருள் செறிந்தவை. நடையில் கடுகடுப்பாகவும், ஆய்வில் புலமையும் உள்ளவை. வாய்ப்பாட்டுத் தன்மையும், மீண்டும் மீண்டும் கூறும் தன்மையும் கொண்டவை. ஆனால் கலைத் தன்மை இல்லை. உருவகவண்ணம் இல்லை. மாறாக இதில் நிழல்தன்மை மிளிர்கிறது. கருத்து துல்லியமாக இருக்க முயல்கிறது. கலைச்சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. மரபு வரிசைகளிலும், காலவரையறை செய்வதிலும், வழிபாட்டுச் சடங்குகளிலும், கணக்கிடுதலிலும் அக்கறை எடுக்கின்றது. இப்பாரம்பரியம் கொள்கைகள் நிறைந்ததும் திட்டவட்டமான இறையியல் சிந்தனையுள்ளதாயும் காணப்படுகின்றது. கடவுள்பற்றியும், கடவுள் மனிதன் தொடர்புபற்றியும் அறிவுரையும், அறவுரையும் வழங்குவதைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. அருவப் பொருள் அதிகமாகத் தோன்றுகிறது. மனிதப்பண்புகளை இறைவனுக்குப்பொருத்திக் கூறுவதை மிகக்கவனமாகத் தவிர்க்கின்றது. இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையேயுள்ள தூரம் வலியுறுத்தப்படுகிறது. இறைவன் முழுவதும் தூய்மையானவர் வெகுதூரத்திலுள்ளவர். மனிதன் அவரை அணுக முடியாது ஆயினும் அவன் அவரைப் போல இருக்க வேண்டும்.

இறைவன் மனிதனுக்குத் தம்மை வெளிப்படுத்தியதைச் சுட்டிக்காட்டுகின்றது இப்பாரம்பரியம். சீனாய் மலையில் இறைவன் மனிதனோடு செய்துகொண்ட உடன்படிக்கையில் இறை வெளிப்பாட்டில் உச்சநிலையடைகிறது. யாத்திராகமத்தின் பிற்பகுதியும், லேவியராகமம் முழுவதும், எண்ணாகமத்தின் பெரும்பகுதியும் குருக்கள் பாரம்பரியத்தைச் சேர்ந்தவையாகும். பபிலோனியாவிலிருந்து யெருசலேமுக்குத் திருப்பி வந்தபின், இப்பாரம்பரியம் மற்றைய பாரம்பரியங்களுடன் இணைக்கப்பட்டது. ஐந்நூலை அமைப்பதின் இறுதிப் பங்கு குருக்கள் பாரம்பரியத்தைச் சேர்ந்தது. எஸ்திராஸ் காலத்தில் ஐந்நூல் ஒரு தனி நூலாக உருவெடுத்தது.

# 5 ஆரம்ப காலம் அல்லது வரலாற்றிற்கு முற்பட்ட காலம்

(ஆதி. 1 - 11)

இஸ்ராயேலரின் சரித்திரம் பிதாப்பிதாவாகிய ஆபிரகாம் இறைவனால் அழைக்கப்பட்டதிலிருந்து ஆரம்பமாகின்றது. அதற்கு முற்பட்ட காலத்தை வரலாற்றிற்கு முற்பட்ட காலம் என்றழைப்பர். இதை நாம் ஆதியாகமத்தின் முதல் பதினாறு அதிகாரங்களிலும் வாசிக்கின்றோம். இவை பஞ்சாகமத்தின் மற்றைய வரலாற்று நிகழ்ச்சிகளுக்கு, எபிரேயரின் புனித வரலாற்று நிகழ்ச்சிகளுக்கு ஒரு முன்னுரையாக அமைந்துள்ளது. ஆகவே இப்பகுதிகளை நாம் சாதாரண வரலாறு போல் படிக்கமுடியாது. இவ்வதிகாரங்கள் கதைகளை அல்ல, உண்மை நிகழ்ச்சிகளையும், புராணங்களையல்ல, சில அடிப்படைத் தத்துவங்களையே விளக்க முயலுகின்றன. என்ற முறையில் இவை வரலாறுதான். ஆனால் இவ்வரலாறு மத அடிப்படையில் எழுந்தது. மனிதனுக்கும், அவனைப் படைத்தவருக்கும் உள்ள தொடர்பை நிலைநாட்டும் பொருட்செறிவும், ஆழ்ந்த கருத்துக்களும் நிறைந்திருக்கின்றன.
இவ்வுலகைப் படைத்தவர் கடவுள். அவர் இவ்வுலகத்தினின்றும் வேறானவர். எல்லாப் பொருள்களும் காலத்தின் தொடக்கத்தில் இறைவனால் உண்டாக்கப்பட்டன. உலகம் தன்னியல்பிலேயே நல்லது. படைப்பின் குறிக்கோள் கடவுளின் அமைதி. இறைவனுடைய பராமரிப்பால் தனிப்பட்ட முறையில் படைக்கப்பட்டவன் மனிதன். மண்ணிலிருந்து உருவாக்கப்பட்டவன். ஆனால் வாழ்வுக்குரிய உயிரைப் பெற்றவன. கடவுளுடன் நட்புக் கொண்டு வாழவேண்டியவன் ஆயினும் கடவுள் அவனுக்குரிய சுய உரிமை அளித்தார். மனித குலத்தின் ஒற்றுமை, ஆதி மனிதனின் பாக்கியநிலை, சென்ம பாவத்தால் அதை இழந்தது, மீட்பின் வாக்குறுதி, முதல் தீவினை, பொறாமையின் விளைவு, தீமை பரவுதல், கடவுள் மனிதனைத் தண்டித்துச் சுத்திகரித்தல், முதல் உடன்படிக்கை, அதை மறந்தபொழுது கடவுளின் தண்டனை போன்றவைகளும், இன்னும் இறைவனின் வெளியீட்டை அடிப்படையாகக் கொண்ட பல மதக் கோட்பாடுகளும் இங்கு கதை வடிவாகக் கோர்வையாகக் கூறப்பட்டுள்ளன. இவையெல்லாம் கற்பனை செறிந்த கவிநடையிலும், பலவித அணிகளிலும் எழுதப்பட்டுள்ளன.

இப்பகுதி முதற் படைப்பு, முதல் மனிதன், முதல் மனைவி, முதல் திருமணம், முதற் பாவம், முதல் தண்டனை முதல் மீட்பின் வாக்குறுதி, முதற் கொலை, முதற் சாவு என்பன பற்றிப் பேசுவதால் இதை ஆரம்ப காலம் என்றும் அழைப்பர்.

ஆதியாகமத்தின் முதல் மூன்று அதிகாரங்களில் படைப்பைப்பற்றி இரு வரலாறுகள் காணக்கிடக்கின்றன. முதல் வரலாறு ஆதி. 1:1 - 2:3 இலும், இரண்டாம் வரலாறு ஆதி. 2:4 - 3:24 இலும் காணக்கிடக்கின்றது.

### 5.1 படைப்பின் முதல் வரலாறு— குரு மரபில் படைப்பு (ஆதி. 1-2:3)

இந்த வரலாறு சட்டப்புத்தகத்தின் முன்னுரையாக யெருசலேமில் வாழ்ந்து வந்த ஒரு குருவினால் கி. மு. 5 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டதென்று விவிலிய வல்லுநர் இன்று ஏற்றுக் கொள்ளுகின்றார்கள். இது P-மரபில் (குரு மரபில்) எழுதப்பட்டுள்ளது. பபிலோனியரின் புராண இலக்கியத்தைத் தழுவி, இஸ்ராயேல் வாழ்க்கையையொட்டி வரலாறு எழுதப்பட்டுள்ளது. இஸ்ராயேலர் ஆறு நாட்கள் வேலை செய்வர். ஏழாம் நாள் ஒய்வு எடுப்பர். அதுபோலக் கடவுளும் ஆறு நாட்கள் வேலை செய்து, ஏழாம் நாள் ஒய்வுபெற்றதாக எழுதப்பட்டுள்ளது. பழங்கால மக்கள் உலகைக் கவிழ்த்து வைத்த கோப்பை வடிவில் கண்டனர். அடிக்கடி மழை பெய்வதால் மேலே தண்ணீர் உள்ளது, வானத்திலுள்ள சாளரங்களைத் திறந்து கடவுள் மழை பொழியச் செய்கிறார் என்று அவர்கள் கருதினர். விண்மீன்கள் வானத்தில் தொங்கிக் கொண்டிருக்கின்றன என்பது மறைநூல் எழுதப்பட்ட காலத்தில் ஏனைய மதத்தினர் கொண்டிருந்த கருத்து, இக்கருத்தையும் பகிர்ந்துகொண்டனர் இஸ்ராயேல் மக்கள். இந்தப் பாரம்பரியங்களைப் பயன்படுத்தி ஆசிரியர் அறிவுரையும், அறவுரையும் கூறுகின்றார்.

ஆசிரியர் தன்னைச் சுற்றியுள்ளோர் பயன்படுத்திய சொற்றொடர்களையும், பாரம்பரியங்களையும் பயன்படுத்தினாலும், அவர் கூற விரும்பிய உண்மைகள் ஏனையோர் கூறியதற்கு முற்றிலும் மாறானது. இஸ்ராயேலைச் சூழ்ந்துள்ள நாடுகளில் வாழ்ந்த மக்கள் பல தெய்வங்களை வணங்கினர். இயற்கையானது கடவுளாகக் கருதப்பட்டது. இயற்கை நிகழ்ச்சிகளான இடியும், மின்னலும், கடலும், விண்ணும், மண்ணும் சூரியன், சந்திரன் எல்லாம் கடவுளாக்கப்பட்டன. ஆனால்

ஆசிரியர் இங்கு கடவுள் ஒருவரே இவ்வுலகைப் படைத்தார்: அவர் ஆதிகாரணர், அவர் நித்தியமானவர், தற்செயலாக உலகி லிருந்து தோன்றியவரல்லர். உலகிற்கு அப்பாற்பட்டவர். அவரே உயிரளிப்பவர், அறிவும் ஆற்றலும் மிக்கவர். சர்வ வல்லமையுள்ளவர். அவர் எண்ணினால் போதும் எண்ணிலா உலகம் உருவாகும். ஒரு சொல்லால் எல்லாவற்றையும் அடக்கி ஆள்பவர். ஞாயிறும், திங்களும் அவரது ஆணையால் ஆக்கப் பட்டனவென்று தெளிவாகக் கூறுகின்றார். பபிலோனியருடைய புராணத்தின்படி கடவுளால் அடைத்துவைக்கப்பட்டிருந்த கொடிய விலங்குகளிலிருந்து வெளிவந்தவைதான் உலகப் பொருள்கள் எனவே அவை நல்லவையாக இருக்க முடியாது. ஆனால் ஆதியாகம ஆசிரியர் இவ்வுலகப் பொருள்கள் மீது உயர்ந்த கண்ணோட்டம் வைத்திருந்தார். எல்லாம் நன்மையானவையாகத் தென்பட்டன. இது யூதமதத் திற்கே உரித்தானது. புராணங்களில் கடவுள் ஆதிசக்தியுடன் போர் புரிந்து, மிகவும் கஷ்டப்பட்டு, முன்னேயிருந்த பொருள் களைக் கொண்டு உண்டாக்க வேண்டியிருந்தது: ஆனால் இங்கு கடவுள் எந்தவித கஷ்டமுமில்லாது. ஒன்றுமில்லாமையில் இருந்து உலகத்தைப் படைக்கிறார். இதை வலியுறுத்த ஒவ்வொரு பொருளின் படைப்பிலும் 'இறைவன் உண்டாகட்டும்' என் றார், 'அது உடனே உண்டானது' எனக் கூறுகின்றார் ஆசிரி யர்.

மேலும் ஆசிரியர் (குரு) பாமர மக்கள் மனதில் ஓய்வு நாளின் சிறப்பைப் பதியச் செய்து, ஓய்வுநாளை அனுசரிப்பதை வலியுறுத்த விரும்பினார்; ஆகவே படைப்பை ஏழு நாட்களா கப் பிரித்து, ஏழாம் நாள் கடவுளே ஓய்வு எடுப்பதாகக் கூறு கின்றார். ஏழு யூத மக்களுக்கு நிறைவின் குறி, மூன்றும் நிறைவின் குறி. ஆறு நாட்களை இரண்டாகப் பிரித்து, படைப் புக்கு மூன்று நாட்களும், அவைகளின் அணிகலன்களுக்கு மூன்று நாட்களுமாக அமைக்கின்றார்.

உருவ அமைப்பு

1. பகல் இரவு, பிரிவு-ஒளி
2. மேல் கீழ் நீரின் பிரிவு - வானவெளி
3. தரை, கடல், பிரிவு - தாவரங்கள்

அணிகலன் அமைப்பு

4. பகல், இரவு ஆகியவற்றின் அணிகலன்கள் விண்மீன்கள்.
5. கடல், வானம், ஆகியவைகளின் அணிகலன்கள் - மீன்கள், பறவைகள்.
6. தரையின் அணிகலன்கள் - விலங்குகள் மனிதர்.

இந்த ஆறு நாள் திட்டம் அறிவியல் முறையில் நாம் அறிந்துள்ள உலகின் தோற்றத்தை அசட்டை செய்கின்றதாக உள்ளது. இது வெறும் மேற்பூச்சே. இதில் காலத்தையோ. ஒழுங்குக் கிரமத்தைப்பற்றியோ கவலையில்லை. மேலும் ஆகாயப் பட்சிகளும், நீர் வாழ் பிராணிகளும் தொடர்புடையதாகக் கருதப்பட்டு, ஒரே நாளில் படைக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. அக்காலத்தில் அவர்கள் ஆகாயப் பட்சிகள் கடலில் வாழ்வதாகவே எண்ணினர். ஆகவே ஆசிரியர் ஓய்வு நாளை அனுசரிக்க மக்களைத் தூண்டவே படைப்பை ஏழு நாட்களாகப் பிரிக்கின்றார்.

மனித மாண்பு:-

மேலும் மனிதனின் மாண்பை விளக்குவதும் இம் முதல் அதிகாரத்தின் குறிக்கோள். ஆகவே எல்லாப் படைப்பையும் கூறிவிட்டு, மனித படைப்பைக் கூறுகின்றார். எல்லாவற்றையும் ஆயத்தம் செய்து அலங்கரித்துவிட்டு, மனிதனை நிறுத்துகின்றார். இறைவன் மனிதனைப் படைக்குமுன் ஆலோசனை செய்வது போல் சித்தரிக்கின்றார். மனிதனுடைய ஆளுமை. அனைத்தையும் ஆளும் உரிமை வலியுறுத்தப்படுகின்றது. கடவுளின் ஆளும் வல்லமையில்... அவர் சாயலில் பங்கு எடுக்கின்றார். எல்லாப் படைப்புக்களிலும் மனிதன் மேலானவன் என்பதைக் காட்ட மிகவும் நல்லதென அவர் படைப்பின் பின் கூறுகின்றார். ஆகவே மனிதன் படைப்புக்களின் சிகரமாகவும், அரசனாகவும் காட்சியளிக்கின்றான். கடவுள் மனிதனை ஆணும், பெண்ணுமாகப் படைக்கிறார். இருவரும் சம உரிமையுள்ளவர்கள். கடவுளுடன் கொண்டுள்ள தொடர்பு, சாயல் ஆகியவற்றைப் பொறுத்தவகையில் இருவரும் சரிசமமாக இருக்கிறார்கள். இருவகை பாலிய அமைப்பு கடவுளின் படைப்பே. மிக நல்லவை எனக் கடவுள் கண்டார். கடவுளே முதல் திருமணத்தை ஏற்பாடு செய்து வைக்கிறார். மனிதனுக்கும் மற்றைய படைப்புகளுக்கும் அடிப்படையான வேற்றுமையுண்டு. இறைவன் சாயல், பாவனை இவை மனிதன் பெற்றுள்ள பகுத்தறிவு, சுய மறை ஆளுமை போன்ற ஆன்மீக சக்திகளைக் குறிக்கின்றது.

5. 2 படைப்பின் இரண்டாம் வரலாறு - யாவே மரபில் படைப்பு (ஆதி. 2:4 – 25)

இங்கு படைப்பின் வரலாறு யெ. மரபில் எழுதப்பட்டிருக்கிறது. விண்ணக உண்மைகளை, சாதாரண மக்கள் விளங்கிக் கொள்ளக் கூடிய முறையில், பருப்பொருள் வழியாகக் கூறு

கிறார் ஆசிரியர். உயிரினங்களைப் பெயர் சொல்லி அழைத்தல், ஆதாம் விலாவிலிருந்து ஏவாள் உருவாகுதல் போன்ற சொற்றொடர்களைக் கொண்டு கூறுகின்றார். நிலவளமும் நீர்வளமும் இல்லாத வரண்ட பூமி முதல் உருவாக்கப்படுகின்றது. கடவுள் யாவே என்றழைக்கப்படுகின்றார். முதலில் மனிதன் படைக்கப்பட்டு அவனுக்குப்பணிபுரிய மற்ற அனைத்தும் படைக்கப்பட்டிருக்கின்றன. மனிதன் தரையின் தூசியிலிருந்து படைக்கப்பட்டாலும் இறைவனின் தனிப்பட்ட செயலினால் உயிர் பெறுகின்றான் இது மனிதனின் மாட்சியைக் காட்டுகின்றது. ஆணுக்கும் பெண்ணுக்குமுள்ள தனிப்பட்ட தொடர்பும், உறவும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. பெண். ஆணுடைய சதையிலும், எலும்பிலும் நின்று உருவாக்கப்படுகின்றாள். பெண் ஆணிலும் குறைந்தவள் என்ற ஆதிகாலமக்களின் தவறான கருத்தை வேரறுக்க முனைகின்றார். ஆணும் பெண்ணும் சமமானவர்கள், ஒரே எலும்பு, ஒரே சதை, ஒரே மாமிசம் எனக் கூறித் திருமணத்தின் ஒற்றுமையையும், முறிக்கவியலா உறுதியையும் காண்பிக்கிறார். ஆதாம், ஏவாளைக் கண்டவுடன் இயல்பாகவே அவனுக்கு எல்லாவற்றிலும் மேலான பாசம் ஏற்படுவதைக் காண்பித்து, ஆண் பெண் பாசமும், சேர்க்கையும் இறைவனால் ஏற்படுத்தப்பட்டது, ஆசீர்வதிக்கப்பட்டது என்பதை வலியுறுத்துகின்றார். சிங்காரத் தோட்டம் ஒரு குறிப்பிட்ட இடத்தையல்ல, மனிதன் பாவமில்லாத, பரிசுத்த நிலையில், மற்றவற்றிற்கெல்லாம் மேலான நிலையில் உண்டாக்கப்பட்டதைக் குறிக்கின்றது. கடவுள் களிமண்ணை எடுத்து ஆதாமை உருவாக்கினார் என்ற பகுதியில் அரிமேய, எகிப்திய, பபிலோனிய புராணங்களின் வாடை அடிபடுகின்றது. இப்புராணக் கதை வழியாக ஒரே இறைவனிடமிருந்தே அனைத்தும் தோன்றின. மனிதனும் அவரது கரத்தினின்று அவரது ஒப்பற்ற வல்லமையால் உருவானவனே என்பதைக் கூறுகின்றார். அவர்கள் நிர்வாணமாக. இருந்தாலும், வெட்கம் என்பதை அறியார்கள் என்ற சொற்றொடர் அவர்களுக்கு துர் இச்சையும் ஆபாசமும் இருக்கவில்லை என்பதைக் குறிக்கின்றது.

இந்தப் படைப்பு வரலாறு பரிணாமக் கொள்கையை ஏற்றுக்கொள்ளவோ, தள்ளிவைக்கவோயில்லை. இரண்டுக்கும் பயன்படுத்தலாம். ஆனால் ஆசிரியர் இந்த ஆராய்ச்சியில் இறங்கவில்லை. இதை ஏற்றுக்கொள்ளவோ, தள்ளிவைக்கவோ பயன்படுத்துவது தவறு. ஆனால் கடவுள் அவனுக்குத் தம் மூச்சை அளித்து, அழியாத ஆன்மாவை நேரடியாக

அளித்து, அவனை உண்டாக்கினார். மனிதனின் உடல் மண்ணிலிருந்து வந்தாலும், உயிர், ஆன்மா நேரடியாக இறைவனால் படைக்கப்பட்டது. மேலும் இப்படைப்பு வரலாறு ஒரு குடி இனப்பெருக்கத்தையோ, பல குடி இனப்பெருக்கத்தையோ (பலவிடங்களில் ஒரே சமயத்தில் மனிதர்கள் தோன்றி இனவிருத்தி செய்தல்) சுட்டிக்காட்டவில்லை ஆனால் மனித குலம் ஒன்று என்பது பெண் ஆணிலிருந்து உருவாக்கப் படுவதால் வலியுறுத்தப்படுகிறது.

ஏதேன் தோட்டம் - இணையில்லா வாழ்வைக் குறிக்கிறது. தோட்டத்தில் நடுவிலுள்ள வாழ்வளிக்கும் மரம்-கடவுள் அவர்களுக்கு அளித்த முக்கிய வரம் சாகாவரம் என்பதைக் காட்டுகிறது. நன்மை, தீமை அறியும் மரம் - இச்சொற்றொடர் முழுமையைக் குறிக்கிறது. 'அறிதல்' விவிலியத்தில் அனுபவத்தைக் குறிக்கிறது. ஆகவே நன்மை தீமை அறிவிக்கும் மரத்தின் கனியை உண்ணுதல் எல்லாவகையான அனுபவத்திற்கும், நல்லதோ, கெட்டதோ தன்னை ஆளாக்கல், அதாவது எவ்வித கட்டுப்பாடும் இன்றி யாருக்கும் அமையாமல் தன் விருப்பம் போல் எதையும் செய்யவிளையும் ஆற்றலைக் குறிக்கிறது. கடவுள் அவனுக்கு ஒரு கட்டளையைக் கொடுக்கின்றார். மனிதன் அதற்குப் பணியவோ, அதை மீறவோ சுதந்திரம் இருக்கின்றது. இது மனிதனின் சுதந்திரத்தையும் அதிகாரத்தையும் எடுத்துரைக்கின்றது. ஆதிமனிதனின் பண்பை அறிய ஒரு தேர்வு நடக்கிறது. அவன் இறைவனுக்குப் பணிந்து வாழ்வானா? பணிய மறுத்தால் சாவாய் என்று கடவுள் கூறுகின்றார். ஆகவே கடவுள் கட்டளை கொடுத்தல், மனிதன் அதை மீறுதல் என்பனதான் இவ்வதிகாரத்தில் முக்கியம்.

## 5. 3. ஆதியாகமம் III மனிதனின் விழ்ச்சி, பாவம் தண்டனை வாக்குறுதி

இந்த அதிகாரத்தில் ஆசிரியர், யாவே மரபில் பருப்பொருளைப் பயன்படுத்தி, மனிதனின் முதற்பாவம், இறைவனின் தண்டனை, மீட்பின் வாக்குறுதி போன்றவற்றை எமக்கு எடுத்துக் கூறுகின்றார். பெண் பாம்பினால் சோதிக்கப்படுகிறாள், பாம்பின் குறியை ஒரு குறிப்பிட்ட குறிக்கோளை அடையப் பயன்படுத்துகிறார், அக்காலத்தில் பாம்பைக் கடவுளாக வழிபட்ட மக்கள் யூத இனத்தைச் சுற்றி வாழ்ந்தனர். பாம்பு உருவக் கடவுள் உற்பத்திக் கடவுளாக இனப்பெருக்கக் கடவுளாக எண்ணப்பட்டார். ஆகவே இக்கட

வுள் வணக்கத்தில் பல பாவச் செயல்கள் இடம் பெற்றன. மேலும் படைக்கப்பட்ட பிராணியான பாம்பைத் தெய்வமாக் கினர். இது உண்மையான கடவுளை வழிபட்ட யூத இனத் துக்கு வெறுப்பை மூட்டி, வேதனையைக் கொடுத்தது. இப் பாம்பு உண்மைக் கடவுளின் எதிரி, அருவருப்புக்குரியவன், பொய்யும் வஞ்சனையும் நிறைந்தவன என்று கருதினார்கள். இதை வலியுறுத்தி, தம் இன மக்களை அப்பொல்லாத பாம்பு வழிபாட்டிலிருந்து பாதுகாக்க, தீய சக்தியை, சாத்தானை, பாம்பு உருவில் சித்திரிக்கின்றார். ஆனால் அப்பாம்பு பசா சைக் குறிப்பதாக யூதரும், கிறிஸ்தவர்களும் இன்று ஏற்றுக் கொள்கின்றனர்.

## முதற் பாவம்

சோதனை நிகழ்ச்சி ஓர் ஓவியமாகத் தீட்டப்பட்டுள் ளது. பெண்ணுக்குப் பாம்பு கூறிய சொற்களில் வஞ்சனையும் சூழ்ச்சியும் தொனிக்கிறது. பெண்ணுக்குக் கடவுள் மேல் சந் தேகத்தை உண்டாக்குகிறது. அவள் எளிதாக ஏமாற்றப்படு கிறாள். கடவுளாக அவள் விரும்புகிறாள் கடவுள் கட்டளை யைத் தானும் மீறிக் கணவனையும் மீறச் செய்கின்றாள். சிலர் அவர்கள் செய்தது மோக பாவம் என்றும், வேறு சிலர் பேருண் டிப் பிரியம் என்றும் கூறுகின்றனர். அது தவறு. ஏனெனில் பாலு றவு நன்மையானது. ஒரு கனியை உண்ட காரணத்தால் உலகம் முழுவதையும் கடவுள் சபித்திருக்கமாட்டார். ஆனால் விலக் கப்பட்ட செயலைச் செய்து கடவுள் கட்டளையை மீறினார் கள் என்பது உண்மை. கடவுளுக்குப் பணிய மறுத்து, கடவு ளைப் போலாக முயற்சித்தார்கள். பாவத்தின் விளைவு உடனே மனிதனைப் பாதிக்கின்றது. பரிசுத்ததனத்தை இழந்து, ஆசாபா சத்துக்கு அடிமையாகி இறைவனது பகைவனாய் மாறி, இறை வனுக்குப் பயப்படுகின்றான். கடவுள் குரலில் கோபம் தொனிக் கிறது.

## முதல் மீட்பரின் வாக்குறுதி

கடவுள் பாம்பைச் சபிக்கிறார்: அதாவது பாம்பு குறிக் கும் சாத்தானைச் சபிக்கின்றார்: வயிற்றால் நகர்ந்து, நாவி னால் மண்ணை உண்ணல் என்பன இழிவைக் குறிக்கும் தொடர்கள். அத்தோடு நின்றுவிடாது, சாத்தானின் தலை நசுக்கப்படும். அதாவது மீட்பர் ஒருவரை வாக்களிக்கிறார். அவர் பாவத்தை வெல்லுவார், பசாசைத் தோற்கடிப்பார், மக்களை மீட்பார் என்பது உணர்த்தப்பகிறது. இது தான் கட வுள் ஆதாமோடு செய்துகொண்ட உடன்படிக்கை, "உனக்கும் பெண்ணுக்கும் உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகையை உண் டாக்குவோம். அவள் உன் தலையை நசுக்குவாள்." பெண்ணும்

சபிக்கப்படுகிறாள். பெண்ணின் தனிப்பண்பு கணவனுக்கு அடங்கியிருத்தலும், குழந்தைகளைப் பெற்றெடுப்பதும் ஆகும் இதிலும் அவள் சபிக்கப்படுகிறாள், ''வேதனைகளுக்கிடையில் நீ பிள்ளைகளைப் பெறுவாய். மனிதனின் அதிகாரத்துக்கு நீ அடங்கியிருப்பாய்'' மனிதனும் சபிக்கப்பட்டான் அவனது முக்கிய கடமை . வேலை செய்து குடும்பத்தைக் காப்பாற்றுதல். பாவத்திற்குப்பின் அது பெரும் வேதனையாக இருக்கும். அவன் சாக வேண்டும். அவன் தோட்டத்தினின்றும் துரத்தப்படுகின்றான், இன்பமே ஈந்து வந்த இயற்கை துன்பமும், துயரமுமாக மாறுகிறது. அவர்களைத் துரத்தினாலும், இறைவன் மனுக்குலத்தைத் தயவுடன் நோக்குவதை நிறுத்தவில்லை. தோல் உடையை உண்டாக்கி அவர்களை உடுத்தினார்.

## 5.4 ஆதியாகமம் *1 — 3* இல் காணப்படும் மறை உண்மைகள்

கடவுள் : இறைவன் ஒருவரே, அவரே சகலத்தையும் படைத்தார். அவர் உலகிற்கு அப்பாற்பட்டவர் நித்தியமானவர் அவர் ஆற்றலும் அறிவும் மிக்கவர். சர்வ வல்லமையுள்ளவர். அவர் நீதியுள்ளவர், இரக்கமுள்ளவர், அனைத்தையும் ஆண்டு பராமரித்து வருபவர், உலகம் உண்டாகும் முன்னே அவர் இருந்தார், உயிரளிப்பவர்

மனிதன் ; மனிதன் கடவுளால் அவரது சாயலாகப் படைக்கப்பட்டவன். மற்றப் படைப்புகளெல்லாம் அவனுக்காக, அவனுக்குப் பணிபுரிய, அவனால் ஆளப்பட உண்டாக்கப்பட்டன. அவனே படைப்புகளின் சிகரம், அவன் பகுத்தறிவுள்ளவன். அவனது ஆன்மா நேரடியாக இறைவனால் படைக்கப்பட்டது. அழியக்கூடிய உடலும், அழியாத ஆன்மாவும் உடையவன். படைப்புகள் மீது அதிகாரம் கொண்டவன். அதேவேளையில் கடவுளுக்கு முற்றும் சொந்தமானவன். அவருக்குப் பணிந்து உலகை விருத்தி செய்ய அவரோடு ஒத்துழைக்க வேண்டியவன். கடவுளை வழிபட வேண்டியவன். அவன் பாவமில்லாத பரிசுத்த நிலையில் படைக்கப்பட்டவன். அவன் ஆணும் பெண்ணுமாகப் படைக்கப்பட்டவன். இருவரும் சுபாவத்தில், இறைவனோடு கொண்டுள்ள உறவில் சமமானவர்கள். ஒருவர் ஒருவருக்கு ஒத்த துணையாகப் படைக்கப்பட்டவர்கள். பாலுறவு நல்லது இயல்பானது. திருமணம் கடவுளால் உண்டாக்கப்பட்டது. திருமணத்தில் கணவனுக்கும், மனைவிக்குமிடையில் மிக நெருங்கிய உறவு ஏற்படுகின்றது. திருமணத்தின் ஒருமை, கட்டவிழாமை போன்ற பண்புகள் வலியுறுத்தப்படுகின்றன. அவர்கள் தம் இனத்தைப் பெருக்கி, அனைத்தையும் விருத்தி செய்து,

இன்பமாக வாழப் படைக்கப்பட்டவர்கள்: மனுக்குலத்தில் ஒற்றுமை. தொழில் மனிதனுக்கு இயல்பானது, பாவத்தின் விளைவல்ல.

மீட்பு : மனிதன் சுதந்திரமாக வாழப் படைக்கப்பட்டவன் அவன் இறைவனுக்குப் பணிந்து, அவரோடு ஒத்துழைத்து சந்தோசமாக வாழ உண்டாக்கப்பட்டவன். சாத்தானால் சோதிக்கப்பட்ட மனிதன் கடவுளைச் சந்தேகிக்கின்றான் தான் இறைவனைப்போல் வாழ, தன்னை இறைவனாக்க விரும்புகின்றான் பொறாமை, அகங்காரம் என்பவற்றால் இறைவன் கட்டளையைமீறிப் பாவம் செய்கின்றான். பாவத்தின் விளைவால் இறைவனுக்குப் பகைவனாய் மாறி, பயந்து வாழ்கின்றான்: ஆசாபாசங்களுக்கு அடிமையாகின்றான். கடவுளால் தண்டிக்கப்படுகின்றான் சாவு, துன்பம், சஷ்டத்தைத் தன் இனத்திற்கும் தேடிக்கொள்கிறான். பாவம் பரவுகின்றது. மனிதன் கடவுளின் கோபத்தையும், தண்டனையையும் தேடிக்கொண்டாலும், அவர் இரக்கத்தையும் பெறுகிறான். கடவுள் ஒரு மீட்பரை வாக்களிக்கின்றார் ஏவாளின் கீழ்ப்படியாமைக்குப் பரிகாரம் செய்ய புதிய ஏவாள் மரியாளும். ஆதாமின் கீழ்ப்படியாமைக்குப் பரிகாரம் செய்ய புதிய ஆதாம் கிறிஸ்துவும் அலகையின் ஆட்சியை முறியடிப்பார்களென வாக்களிகின்றார்.

இந்த மறை உண்மைகளைத் தான் ஆசிரியர் இருவேறு இலக்கிய மரபில், புராணக் கதைகளைப் பயன்படுத்தி, முதல் மூன்று அதிகாரத்தில் எமக்குத் தருகின்றார்

**5.5** ஆதியாகமம் *4 – 11* (காயீன் ஆபேல், தலைமுறை, பெருவெள்ளம், நோவாவுடன் உடன்படிக்கை, பாபேல் கோபுரம்)

முதல் மனிதன் கட்டிக்கொண்ட பாவமும், அதன் விளைவாக அவன் பெற்றுக்கொண்ட கடவுளுடைய சாபமும் அவன் சந்ததியையும், மனுக்குலத்தையுமே பாதிக்கிறது எனக்காட்டவே இவ்வாதிகாரங்கள் எழுதப்பட்டன. பாவம் பெருகி வருகின்றது என்ற கருத்தை உணர்த்துவதே ஆசிரியரின் நோக்கம். ஆதாம், ஏவாளின் பாவம் மனுக்குலத்தின் சொத்தாகிவிட்டது. முதல் 11 அதிகாரங்களும் வரலாற்றிற்கு முற்பட்ட காலத்தில் நடந்ததை விபரிக்கின்றன. ஆகவே இந்நிகழ்ச்சிகள் உண்மையாகவே நிகழ்ந்தவையா என்பதைப்பற்றி ஆசிரியருக்கு அக்கறையில்லை இரட்சணியத்துக்கு ஏதுவான சில உண்மைகளை எடுத்துக் கூறவே விரும்புகின்றார்.

காயீன் ஆபேல் : 4 ஆம் அதிகாரத்தின்படி ஆதாம் ஏவாள், காயீன் ஆபேலைப் பெற்றனர். காயீன் நிலத்தைப் பயிரிடுபவன், ஆபேல் ஆடு மேய்ப்பவன். ஆபேலின் காணிக்கையை ஆண்டவர் ஏற்றார். காயீனின் காணிக்கையை ஏறெடுத்தும் பார்க்கவில்லை எரிச்சல் கொண்ட காயீன், ஆபேலைக் கொன்றான் கடவுள் தோன்றிக் காயீனிடம் கணக்குக் கேட்டார். காயீனைக் கடிந்து கொண்டார் அந்தத் தண்டனையின் பயனாகப் பூமி பயனளிக்காது, அவன் அலைந்து திரிவான் என்றார். அப்பொழுது அவன் "மற்றவர்கள் என்னைக் கொன்று போடுவார்களே" என்று பயந்து கெஞ்சியதால், காயீனைக் கொல்லும் எவர் மீதும் பழி சுமரும் என்று கடவுள் கூறினார் காயீன் மணந்து பல பிள்ளைகளைப் பெற்றான். இந் நிகழ்ச்சிகளைக் கவனமாகப் படித்தால் அவை எவ்வளவுக்கு உண்மை என்று விளங்கும். காயீன் பயிர் செய்பவனாகவும், ஆபேல் ஆடு மேய்ப்பவனாகவும் சித்திரிக்கப்படுகிறார்கள். ஆனால் ஆராய்ச்சியின்படி முதல் மனிதன் நாடோடியாகத் திரிந்து வேட்டையாடி, காட்டுக் கனிகளைத் தின்றதாகத் தெரிகின்றது. நோவா முதல் தோட்டக்காரன் என்று (ஆதி.9:20) கூறுகிறது மேலும் காயீன் மற்றவர்களுக்குப் பயப்படுகிறான். ஆனால் அப்பொழுது ஆதாம் ஏவாளைத் தவிர வேறு எவரும் வாழவில்லை. காயீன் திருமணமும் செய்ததாகக் கூறப்படுகின்றது. ஆகவே ஆசிரியர் பிற்காலத்தில் நடந்த நிகழ்ச்சியை இங்கு புகுத்தி ஒரு கருத்தை விளக்க முயன்றார் ஆதாமில் உண்டான பாவம் அவனது சந்ததியினரிடையே வேர்விட்டு வளர்ந்ததென நிரூபிக்கவே எழுதுகின்றார். காயீன் ஆபேல் சண்டை நடந்திருக்கலாம். பாரம்பரியமாக வழங்கப்பட்டிருக்கலாம். பாவத்தின் பயனாக சமுதாயத்தில் கோபம், வஞ்சகம், பொறாமை, கொலை ஆகிய அனைத்தும் தலைகாட்டின என்பதை விளக்க இந்தக் கதையை நல்லதாகக் கண்டார் ஆசிரியர். ஆதாமின் வீழ்ச்சிக்கும் காயீனுடைய கொலைக்கும் இடையில் உள்ள தொடர்பைக் காட்டி, காயீனை ஆதாமின் முதல் குமாரன் என்று குறிப்பிட்டார். "காயீனைக் கொல்பவன் ஏழு மடங்கு பழி சுமப்பான்" என்று கடவுள் கூறுவது பிற்காலத்தில் மக்கள் மத்தியில் ஒருவன் செய்த குற்றத்திற்காகப் பலர் கொல்லப்படும் வழக்கத்தைக் கூறுவதாகத் தோன்றுகின்றது. இது அடுத்துவரும் லாமேக்குடைய கதையிலும் தொனிக்கின்றது.

தலைமுறை : அதைத் தொடர்ந்து 4 ஆம் அதிகாரத்தில்

காயீன் வழியாக ஆதாமின் தலைமுறைகள் தரப்படுகின்றன. 5 ஆம் அதிகாரத்தில் சேத் வழியாக பத்துத் தலைமுறைகள் தரப்படுகின்றன. ஆதி. 10 இல் சலப் பிரளயம் நடந்தபின் நோவாவின் தலைமுறை ஆபிரகாம் மட்டும் பத்தாகத் தரப்பட்டுள்ளது. பத்து வரம்பற்ற நிறைவைக் குறிக்கின்றது. தரப்பட்டுள்ள ஆதாமின் இரண்டு தலைமுறைகளையும் வாசிக்கும் பொழுது பெயர்களில் ஒருவித ஒற்றுமையைக் காண்கின்றோம். பெயர்கள் எபிரேய மொழிப் பெயராக உள்ளன. எபிரேய மொழி மிகப் பழமை வாய்ந்தது என்று சொல்ல முடியாது. ஆசிரியர் தங்கள் காலத்துப் பெயர்களை ஆதாமின் பிள்ளைகளுக்குச் சூட்டியிருப்பதுபிற்காலத்தில் இருந்த பரம்பரை புகுத்தப்பட்டிருப்பதைக் காட்டுகிறது. அவர்களின் வயதுகளும் வெள்ளப் பெருக்குக்கு முன் அதிகமாகவும், பின்பு குறைவாகவும் காணப்படுகின்றது. நீண்ட ஆண்டுகள் வாழ்வது இறைவனின் கொடை. ஆனால் பாவம் அதிகரிக்க ஆயுள் குறைகிறது. ஆகவே படிப்படியாக ஆயுளைக் குறைத்து பாவம் பரம்பியதைச் சுட்டிக் காட்டுகிறார் ஆசிரியர். ஆனால் நோவா நீதிமானானபடியால் அவரது ஆயுள் கூடுவதை நாம் காணலாம்.

ஆனால் ஆறாம் அதிகாரத்தில் நிலை கேவலமடைகிறது. தேவர்களுக்கும் மானிடப் பெண்களுக்கும் பல அரக்கர்கள் பிறந்ததாகக் கூறும் கிரேக்க புராணக் கதைகளைப் பயன்படுத்தி, சேத்தினுடைய மக்களும் (நல்லவர்கள்) காயீனுடைய மக்களும் (தீயவர்கள்) மிகவும் கேவலமான முறையில் கலந்தனர் எனக்கூறி, இதையிட்டு மனம் வருந்திய இறைவன் பெருவெள்ளத்தை அனுப்பினார் என்று கூறுகிறார்.

பெரு வெள்ளம்

பெரு வெள்ளத்தைப் பற்றிய வரலாறு வேதாகமத்தில் மட்டுமல்ல, பல்வேறு கிழக்குத் தேசத்துப் புராணங்களிலும் காணக்கிடக்கின்றது. பபிலோனியரிடையே வழங்கும் வரலாறு வேதாகம வரலாற்றிற்கு முழுவதும் ஒத்ததாக இருக்கிறது. (கில்கிமெஸ்). பபிலோனியா, மெசபொத்தேமியா முதலிய பகுதிகளில் அடிக்கடி வெள்ளம் வருவதுண்டு. இதை அக்கால இலக்கியங்களில் காண்கிறோம். இந்த வெள்ளம் உலகம் முழுவதையும் அழிக்கவில்லை என்பது உண்மை; மனித இனத்தை வேரோடு அறுத்ததெனக் கூற முடியாது. ஆசிரியர் இயற்கை வரலாற்றைப் பற்றியல்ல, வேதாகமத்தைப் பற்றியே எழுதுகின்றார். இப் பெருவெள்ள வரலாறு ஓர் உண்மையாகவோ, அடையாளமாகக் கூறப்பட்ட கதையாகவோ இருக்கலாம்.

வெள்ளப் பெருக்கு மனிதருடைய பாவத்திற்குத் தண்டனையெனவும், நோவாவின் நேர்மைக்காகக் கடவுள் அவரைக் காப்பாற்றினார் எனவும் ஆசிரியர் கூற முனைகின்றார். ஆதாமோடு கடவுள் ஒப்பந்தம் செய்து, மனிதனோடு ஆரம்பித்த தொடர்பு அவன் பாவத்தினால் அறுக்கப்பட்டது. நோவாவுடன் கடவுள் மற்றொரு ஒப்பந்தம் செய்து, மனிதனோடு திரும்பவும் தொடர்பை ஏற்படுத்துகிறார். ஆகவே ஒரு யுகத்தின் முடிவையும், மறுயுகத்தின் ஆரம்பத்தையும் குறிக்க வெள்ளப் பெருக்கைப் பயன்படுத்துகிறார் ஆசிரியர். இறைவனின் கோபத்தையும், தண்டனையையும், அதே வேளையில் அவர் இரக்கத்தையும் காட்ட இந்தப் பாரம்பரியம் தகுந்ததாக இருந்தது.

வெள்ளப் பெருக்கைப் பற்றிக் கூறும் 6ஆம், 7ஆம் அதிகாரங்களைக் கவனமாகப் படிக்கும் போது பல செய்திகள் இருமுறை கூறப்பட்டிருப்பதையும் காண்கிறோம். இரு வேறு பாரம்பரியங்களை இணைத்து எழுதியதன் விளைவு இது ஒரு அதிகாரத்திலேயே ஒரு வரி ஒரு பாரம்பரியமாகவும், அடுத்த வரி வேறு பாரம்பரியமாகவும் இருக்கிறது. உ. ம். இருமுறை இறைவன் மக்களின் சீர்கேட்டைக் கண்டார். (6 : 5; 6 : 13) இருமுறை வெள்ளத்தின் விளைவைக் குறிப்பிடுகின்றார், (6 : 13, 7 : 4) இருமுறை வெள்ளம் தொடங்குகிறது. (7 : 15; 7 : 11 அத்தோடு ஒரு சில முரண்பாடுகளும் காணப்படுகின்றன, ஓரிடத்தில் 40 நாள் மழை பெய்து, பின் தண்ணீர் வடிந்து தரை தென்பட 61 நாட்களாயின இன்னொரு இடத்தில் தண்ணீர் 150 நாட்களாகப் பூமியை மூடின. 7 : 12, 7 : 24, 6 : 20, 7 : 3) ஓர் இடத்தில் ஒவ்வொரு இனப்பிராணியிலும் ஒரு சோடி. மறு இடத்தில் 7 சோடிகள். இம்முரண்பாடுகள் அடுத்தடுத்து வருவதால் இதை ஆசிரியர் அறிந்திருப்பார். ஆனால் அதைபற்றிக் கவலைப்படவில்லை. ஏனெனில் அவர் இந்தச் செய்தி வழியாகக் கடவுள் பாவம் செ'த மனிதனைத் தண்டிக்க விரும்பினாரென்றும், நேர்மையுள்ளவர்களைக் காப்பாற்ற விரும்னாரென்றும் கூற விழைந்தார். வெள்ளங்கள் பல ஏற்பட்டது என்பது உண்மை.ம ஆனால் எப்போது, எங்கு நடந்தது என்பதைப்பற்றி ஆசிரியர் கவலைப்படவில்லை; இஸ்ராயேல் மக்கள் எல்லாம் கடவுளது வேலை என்றே கருதினர்.

பெருவெள்ளத்திற்குப் பின் ஒரு பெரும் உண்மையைத் தெளிவாக விளக்குகின்றார். ஆசிரியர். நோவாவும், அவரது குடும்பத்தினரும் கடவுளுக்குப் பலி ஒப்புக்கொடுத்தனர். புதிய யுகம் ஆரம்பமாகிறது. கடவுள் அவர்களை, ஆதாமை ஆசீர்வதித்

ததுபோல ஆசீர்வதித்து அவர்களோடு ஓர் உடன்படிக்கையை செய்து, புதிய உறவு, தொடர்பு கொள்கிறார். ''நாம் இனி மனிதன் பொருட்டு பூமியை ஒருபோதும் அழிக்கமாட்டோம் ஏனென்றால் மனிதனுடைய இதய சிந்தனைகள் இளமை முதல் தீமையின் மீதே நாட்டம் கொண்டுள்ளன. ஆதலால் இப்பொழுது செய்ததுபோல, இனி நாம் உயிரினங்கள் யாவையும் மறுமுறை அழிக்க மாட்டோம். '' (ஆதி. 9 ). இதுதான் நோவாவுடன் செய்த உடன்படிக்கை, இதற்கு அடையாளமாக வானகத்திலேயே ஒரு வில்லை வைக்கின்றார். இங்கு கடவுள் இரக்கத்தைக் காண்கிறோம்.

பாபேல் கோபுரம் : வெள்ளத்திற்குப் பின் வரும் வம்ச வரிசைகள் ஆபிரகாமைக் கண்முன் வைத்து அமைக்கப்பட்டவை. ஆபிரகாம் தோன்றிய பின்னணியை வர்ணிக்கும் முன்னுரையாக உள்ளது. நோவாவின் மக்கள் மூவரின் வம்ச வரிசையைக் கூறி, ஆபிரகாம் காலத்தில் வாழ்ந்த மூன்றுவித மக்களைக் கூறுகின்றார். ஆபிரகாமின் முன்னோர்கள் ஆண்டவரால் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் ஆனால் தங்களைச் சுற்றி வாழ்ந்த கனனேயர், பிலிஸ்தியர் தமது பகைவர் என்பதையும் அவர்கள் தீயவர்கள் என்பதையும் காட்ட அவர்கள் முன்னோர்களாக காமு அல்லது கானான் போன்றவர்களைப் படைத்து, அவர்கள் பாவிகள் என்பதையும் காட்டுகின்றார். (9:20).

பாபேல் கோபுரக் கதை மெசெபொத்தேமியாவிலிருந்து வந்தது என்பதில் சந்தேகமில்லை இங்கு இதுபோன்ற பல கட்டிடங்களை, புதை பொருள் ஆராட்சியாளர் அகழ்ந்து எடுத்திருக்கின்றனர். இது பலர் ஒன்று சேர்ந்து கடவுளுக்குக் கட்டும் கோவிலாகும். ஒரே இனமாக வாழ்ந்த மக்கள் இடநெருக்கடியால் பல இடங்களுக்கும் பிரிந்து சென்றனர். அவர்களின் ஒரு கூட்டமே ஆபிரகாமின் முன்னோர்கள் இவ்வினம் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட இனம். இதை உணர்த்த பாபேல் கோபுரக் கதை பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும் பெரு வெள்ளத்தின் பின்னும் மக்கள் பாவ வழியைவிட்டு நீங்காமல், கடவுளுக்கெதிராகக் கலகம் செய்து, தானென்ற தலைக்கனம் மிகுந்தும் திரிந்தனர். ஆனால் இறைவனுக்கு எதிரான எச்செயலும் பயனளிக்காது என்பதும் வலியுறுத்தப்படுகின்றது. பழங்காலத்தில் ஓர் இன மக்கள பல மொழி பேசுவதை விளங்காது, இது எங்ஙனம் ஆகியது என்பதை விளக்க எழுந்த கதை தான் பாபேல் கோபுரக் கதை. இதை நம் ஆசிரியர் பயன்படுத்தி, இறைவனை எதிர்க்கக்கூடியவன் எவனுமில்லை, எத்தனை நாட்டு மக்கள் கூடி எதிர்த்தாலும் அவர்களை இறைவன் ஒரு நொடியில் அழித்துவிடுவார் என்பதைப் போதிக்கிறார்.

ஆதி. 1-11 இல் கூறப்பட்டுள்ள மெய்மறை உண்மைகள் சிலவே. ஒரே இறைவன் என்ற உண்மையையும், ஒரு சொல்லால் உலகைப் படைத்தவர் கடவுள் என்ற உயர்ந்த தத்துவமே இங்கு கூறப்பட்டுள்ளது. மனிதன் பாவம் செய்யு முன் வாழ்ந்த பரிசுத்த வாழ்வும், பாவத்தின் பின் அவன் பரிதாப வாழ்வும், பாவத்தைப் பகைத்து, பாவியைத் தண்டிக்கும் இறைவன் இரக்கமுள்ளவர், நல்லவர்களைக் காப்பாற்றுகிறார் என்ற உண்மைகள் வலியுறுத்தப்பட்டிருக்கின்றன. மனிதரை மீட்க வரவிருக்கும் மீட்பர் ஆபிரகாம் இனத்தில் தோன்றுவார். அந்த ஆபிரகாமை அறிமுகப்படுத்தும் நோக்கத்துடன் முதல் 11 அதிகாரங்கள் எழுதப்பட்டன.

## 6. பிதாப்பிதாக்கள் காலம் (ஆதி. 12 - 50)

பிதாப்பிதா என்னும் சொல் ஒரு சாதியாரின் தந்தையைக் குறிக்கின்றது. இங்கு யூத இனத்தின் தந்தையாகிய ஆபிரகாம், ஈசாக், யாக்கோபு, யோசேப்பு, மோயீசன் என்பவர்களைக் குறிக்கிறது. பிதாப்பிதாக்களின் நீடிய வரிசையில் ஆபிரகாம் முதல்வராவர். கிறிஸ்தவர்கள், யூதர்கள், முஸ்லிம்கள் ஆபிரகாமைத் தங்கள் தந்தையாகக் கருதுவது குறிப்பிடத்தக்கது. மோயீசன் கடைசிப் பிதாப்பிதாவாகத் திகழ்கின்றார்.

### 6.1 ஆபிரகாம் : கி. மு. 1900 -1 800 (ஆதி. 12 - 25)

ஆதி. 1 - 11 இல் கூறப்பட்டுள்ளவற்றைக் கணிப்பது போல ஆபிரகாம் வாழ்க்கை நிகழ்ச்சிகளைக் கணிக்கக்கூடாது அவை வரலாற்றிற்கு முற்பட்டவை. ஆனால் ஆபிரகாம் வரலாற்றில் வாழ்ந்தவர். அவர் தொடர்பு கொண்ட மக்களும், நாடும் வரலாறு அறிந்த உண்மை. கி. மு 2000 ஆண்டுகளுக்கு முன் இருந்த நாடுகள், அரசர்கள் பற்றி ஆராய்ச்சியாளர் ஆதாரமாகக் கூறுபவை அனைத்தும் பைபிளில் கூறப்படுவதற்குப் பொருத்தமாகவேயுள்ளன. எனவே ஆபிரகாம் பற்றிய செய்திகள் அனைத்தும் அவருக்குப் பிந்திய அடுத்த தலைமுறைகளில் பரம்பரையில் இடம் பெற்று சுமார் 1000 ஆண்டுகளாகச் செவிவழிச் செய்தியாகக் கூறப்பட்டு வந்திருக்க வேண்டும். கி. மு. 500 இல் ஆசிரியர் இவற்றையெல்லாம் சேர்த்து அவற்றிற்கு எழுத்து வடிவம் கொடுத்தார். இது பரம்பரை வரலாறு என்ற மட்டில் பிற்சேர்க்கைகள் அதிகம் புக இடமில்லை. ஆகவே இங்கு கூறப்படுபவை வரலாற்றுடன் நெருங்கியதொடர்புடையவை என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். தலைவர்களைப் பற்றிக் கூறும்பொழுது அதிகம் அவர்கள் செயலை மிகைப்படுத்தியே அன்று கூறினர் என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது.

ஆபிரகாம் கடவுளால் நேரடியாக அழைக்கப்பட்டு, வாக்குறுதிகள் பல கொடுக்கப் பெற்றவர். இவர் தான் இஸ்ராயேல் மக்களின் தந்தை. 'விசுவாசத்தின் தந்தை' என்று உலகம் இவரை அழைக்கிறது. கடவுளுடன் கொண்ட நெருங்கிய உறவின் நிமித்தம் கடவுள் ''தந்தை ஆபிரகாமின் கடவுள்'' என்றழைக்கப்பட்டார், ஆ பி ர கா ம் (கி. மு. 1900—1800) மொசேப்பத்தேமியாவில் உள்ள ஊர் பட்டணத்தில் பிறந்து வளர்ந்தவர். அவர் தந்தை பெயர் தேரா. மனைவி பெயர் சாராள், இவர்கள் செமடிக் இனத்தவர்; நாடோடிகள். ஆடு மாடுகள் மேய்த்து சீவனம் செய்தவர்கள். ஊர் நகரம் வீழ்ச்சியுற்றது. போருக்கும், பூசல்களுக்கும் நிலைக்களனாயிற்று

இக்கட்டத்தில் தேரா, தன் மகன் ஆபிராம், அவர் மனைவி சாராயி, தன் மகன் ஆராணின் மகன் லோத்தையும் அழைத்துக் கொண்டு ஊரிலிருந்து வெளியேறி, கானான் தேசம் நோக்கிப் புறப்பட்டு, ஆரான் நாட்டில் குடியேறினார். இங்கு தேரா இறந்தார். பபிலோனிய ஆட்சி இங்கும் பரவியது. வாழ்க்கையும் கஷ்டமானது. இக்காலத்தில் ஆபிராம் இறைவனால் அழைக்கப்பட்டார். ஆபிராம் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருக்கையில், இறைவனின் அழைப்பு வருகிறது. '' நீ உன் நாட்டையும், உன் இனத்தையும், உன் தந்தையின் இல்லத்தையும் விட்டு, நாம் காட்டும் நாட்டுக்குச் செல்வாயாக?' உடனே ஆபிராம் தன் மனைவி சாராயியையும், தன் சகோதரன் மகன் லோத்தையும் அழைத்துக் கொண்டு, தன் உடமைகளையும், சொந்த ஊரையும் விட்டு, இறைவன் காட்டிய, தான் முன் பின் அறியாத நாட்டுக்குப் புறப்பட்டார். (12:1)

இக்கூட்டம் தங்கள் சுமேரிய, பபிலோனிய பழக்க வழக்கங்களை, அவர்களின் குல தெய்வங்களை, பபிலோனிய அரச சட்டங்களை தங்களுடன் எடுத்துச் சென்றது, பழைய பழக்கவழக்கங்களிலும், சமுதாயப் பின்னணியிலும் ஊறிய வராகவே ஆபிரகாம் வெளியேறினார். இப்படியாக ஓர் அஞ்ஞானி பல தெய்வங்களை வழிபடுபவரைத்தான் இறைவன் அழைத்து, ஒரே கடவுள் என்ற உண்மையை அறியச் செய்து, படிப்படியாக ஒரு புது மறையை அளித்தார். சிறிது சிறிதாக அவர்களது பழைய பின்னணியிலிருந்து பிரித்து, பக்குவமுள்ளவராக்கினார். ஆகவே ஆரம்பத்தில் ஆபிரகாமின் கூட்டத்தில் பல ஒழுக்கக் குறைவு, தவறுகளைக் காணலாம். பொய், வஞ்சகம், கொலை, பல மனைவிகளை மணத்தல் ஆகிய குறைகள் காணப்படுகின்றன. ஆனால் காலப்போக்கில் உயர்ந்தவராயினர்.

ஆண்டவரால் நடத்தப்பட்ட ஆபிராம், கனேனய நாட்டை அடைந்து, அங்கு சில ஆண்டுகள் வாழ்ந்தார். ஆனால் அங்கு பஞ்சம் ஏற்படவே, அவர்கள் வளம் கொழிக்கும் எகிப்து நாட்டுக்குச் சென்றார்கள். அங்கு வாழ்ந்தகாலத்தில் நடந்த சம்பவம் ஒன்று வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிறது (12;11-20) சாறாயி பார்வோனால் தூக்கிச் செல்லப்பட்டது. ஆபிராம் தம் இனத்துடன் கானானுக்கு மீண்டும் திரும்பி வந்து அங்கு குடியேறினார். அங்கு ஆபிராமின் மந்தை மேய்ப்பவர்களுக்கும் லோத்தின் மந்தை மேய்ப்பவர்களுக்குமிடையே பிணக்குகள், இடநெருக்கமும் ஏற்பட, லோத்தும் ஆபிராமும் பிரிகிறார்கள். லோத் செழிப்பான யோர்தான் பள்ளத்தாக்கைத் தெரிந்தெடுத்து அங்கு சென்று, பின்னர் சோதோம் நகரில் குடியேறினான். (13:8) சோதோம் மக்கள் மிகக் கொடியவர்களும் பாவிகளுமாயிருந்தார்கள். ஆபிராம் கானான் நாட்டில், எபிறோனில் உள்ள மாம்பிறே பள்ளத்தாக்கில் குடியேறினார். இங்கு இறைவன் ஆபிராமின் சந்ததியை பூமியின் புழுதிபோல் பெருகச் செய்து கானான் நாடு முழுவதையும் அவர்களுக்கு அளிக்கப்போவதாக வாக்களித்தார் (13:14)

எலாமித்தாரின் அரசன் கொதொல் கோமோர், சொதோம், கொமோரா நாடுகளைக்கைப்பற்றி, அங்கு வாழ்ந்த லோத்தையும், அவன் சொத்துக்களையும் கைப்பற்றிச் சென்றார். (14:11) இதைக் கேள்வியுற்ற ஆபிராம் கோமோருக்கு எதிராகப் போர்த்தொடுத்து, இரவில் பகைவரைவெட்டி துரத்தி லோத்தையும், சொத்துக்களையும் மீட்டார். மேலும் ஒருநாள் இறைவன் ஆபிரகாமை அழைத்து, புதல்வன் ஒருவனையும், விண்மீனிலும் அதிகமான சந்ததியையும் வாக்களித்து, அவர்களது 400 ஆண்டு அடிமைத்தனத்தையும், அவர்கள் விடுதலையடைந்து இந்நாட்டுக்குத் திரும்புவார்கள் என்றும் உறுதி கூறினார். ஆபிராம் கடவுளை விசுவசித்தார் இறைவன் தாம் கொடுத்த வாக்கை ஓர் உடன் படிக்கையினால் உறுதி செய்தார். (15:7) ஆபிராமின் மனைவி சாராயிக்கு இன்னும் பிள்ளைகள் இல்லாமலிருக்க, அவள் தன் வேலைக்காரி ஆகாரை அவருக்கு மனைவியாகக் கொடுத்தாள் அவள் வழியாக ஆபிராமுக்கு ஒரு மகன் இஸ்மாயில் பிறந்தான். திரும்பவும் கடவுள் ஆபிராமுக்குப் பெரிய சந்ததியையும், கானான் நாட்டையும் வாக்களித்து, ஆபிராம் என்ற பெயரை ஆபிரகாம் என மாற்றி ... தாம் ஆபிரகாமுக்கும் அவரது சந்ததிக்கும் கடவுளாயிருக்கப் போவதாகக் கூறி அவரோடு உடன்படிக்கை செய்து கொண்டார். (17:1) கடவுள்

ஆபிரகாமின் மனைவி சாறாயின் பெயரையும் ''சாறாள்'' என மாற்றி, அவள் ஒரு புதல்வனைப் பெறுவாள் என்று கூறி அவளை ஆசிர்வதித்தார். இந்த உடன்படிக்கைக்கு அடையாளமாக விருத்தசேதனத்தைக் கட்டளையிட்டார். ஆபிரகாம் அதனை விசுவசித்து கட்டளைப்படி தனக்கும், தன் மகன் இஸ்மாயிலுக்கும், மற்றும் தன் குடும்பத்தைச் சேர்ந்த எல்லா ஆண்களுக்கும் விருத்தசேதனம் செய்தார்.

### ஆபிரகாமுக்கு இறைவன் கொடுத்த வாக்குறுதி

வெவ்வேறு சந்தர்ப்பங்களில் இறைவன் ஆபிரகாமுக்குக் கொடுத்த வாக்குறுதியில் நாம் மூன்று அம்சங்களை அவதானிக்கிறோம் இறைவன் ஆபிரகாமுக்கும், அவர் சந்ததிக்கும் கானான் நாடு முழுவதையும் தருவதாகவும் அவருக்குப் பெரும் சந்ததியைத் தருவதாகவும், மேலும் பூமியிலுள்ள இனமெல்லாம் ஆபிரகாம் வழியாக ஆசீர்வதிக்கப்படுமெனவும் வாக்குறுதி கொடுத்தார். நாட்டைப்பற்றியும், சந்ததியைப் பற்றியும், மீட்பரைப் பற்றியும் வாக்குறுதி கொடுக்கிறார்.

''நீ கண்களை ஏறெடுத்து, நீ இருக்கிற இடத்திலிருந்து, வடக்கு, தெற்கு, கிழக்கு மேற்கு ஆகிய நான்கு திசைகளையும் நோக்கிப் பார், நீ காண்கிற இந்த பூமி முழுவதையும், நாம் உனக்கும், உம் சந்ததிக்கும் என்றென்றும் இருக்கும் படி கொடுப்போம்'' ''எகிப்தின் நதி முதல் யுப்பிறட்டிஸ் மாநதிவரையிலுமுள்ள இந்த நாட்டை உன் சந்ததியாருக்கும் தருவோம்''

''அன்றியும் உன் சந்ததியைப் பூமியின் புழுதிபோல் பெருகச் செய்வோம்'' நீ வானத்தை அண்ணாந்து பார் கூடுமாயின் விண்மீன்கள் எத்தனையென்று எண்ணிப்பார். உன் சந்ததி அவ்வாறே இருக்கும்''

''பூமியிலுள்ள இனமெல்லாம் உன் வழியாய் ஆசீர்வதிக்கப்படும்''

### விசுவாசம் சோதிக்கப்படல்

ஆபிரகாமுக்கு நூறு வயது நடக்கிற போது சாராள், ஈசாக் என்ற புதல்வனைப்பெற்றெடுத்தாள். (21:2) அவன் சிறுவனாய் இருக்கும்பொழுதே, அவனுக்கும் இஸ்மாயிலுக்கும் பிரச்சினை ஏற்படவே, ஆபிரகாம் சாராளின் வேண்டுகோளின்

படி, தங்கள் பபிலோனிய ஒழுங்கின்படி ஆகாரையும், மகன் இஸ்மாயிலையும் வெளியே அனுப்பிவிட்டார். இந்த இஸ்மாயில் வழிவந்தோரே அரேபியர் என்ற பரம்பரையினர். ஈசாக் இளைஞனாக இருந்தபொழுது கடவுள் ஈசாக்கைத் தனக்குப் பலியிடும்படி ஆபிரகாமைப் பணித்தார். (22:1) இது கடவுள் ஆபிரகாமுக்குக் கொடுத்த வாக்குறுதிக்கு முரணாகத் தென் பட்டது. எனினும் ஆண்டவரில் அசையாத நம்பிக்கை கொண்ட ஆபிரகாம், தன் மகனை அழைத்துச் சென்று அவனைப் பலியிட ஆயத்தம் செய்தார். இறைவன் அவ்வேளையில் ஆபிரகாமைத் தடுத்து, அவர் விசுவாசத்தை மெச்சி, அவர் இனத்தை ஆசிர்வதித்தார்.

ஆபிரகாமின் மனைவி சாராள் இறந்தபொழுது அவளை அடக்கம் செய்யச் சொந்த நிலம் இல்லை. ஆபிரகாம் எபிரோன் என்பவரிடம் பணம் கொடுத்து, ஒரு சிறு துண்டு நிலம் வாங்கி அடக்கம் செய்தார், ஒரு துண்டு காணிகூடச் சொந்தமாகக் கிடையாத ஆபிரகாம் இன்னும் அந்நாடு முழுவதையும் தனக்கும், தன் சந்ததிக் கும் இறைவன் சொந்தமாகத் தருவாரென விசுவசித்தார். ஆபிரகாம் தன் மகன் ஈசாக்குக்கு தன் சகோதரன் நாக் கோரின் மகன் பத்துவேலின் மகளாகிய இரெபேக்காளை மணம் செய்து வைத்தார். ஆபிரகாம் வேறொரு பெண் செத்துராளை மணம்செய்து, வேறு புதல்வர்களையும் பெற்று, தனது 175 ஆம் வயதில் இறந்து, அவர் மனைவி சாராளுடன் அடக்கம் செய்யப்பட்டார்.

ஆபிரகாமின் முக்கிய பண்புகள் : ஆபிரகாம், ஈசாக், என்ற பிதாப்பிதாக்கள் வாழ்க் கையில் எத்தனையோ அரிய நிகழ்ச்சிகள் நிகழ்ந்தன. அத்தனையும் வேதநூலில் இடம் பெறவில்லை. ஒவ்வொரு பிதாப்பிதாவும் ஒரு குறிப்பிட்ட பண்பிற்கு உரித்தானவர். இப்பண்புகளை விளக்கும் செய்தி களையே ஆசிரியர் தொகுத்துத் தந்திருக்கிறார்

### 1. ஆபிரகாமின் அசைக்க முடியாத விசுவாசம், கீழ்ப் படிதல், பிரமாணிக்கம் :

ஆபிரகாம் விசுவாசத்தின் தந்தையென எல்லாராலும் போற்றப்படுகின்றார் புனித சின்னப்பர் இவரது விசுவாசத் தைப் புகழ்ந்து, எமக்கு ஒரு முன்மாதிரியாகத் தருகின்றார். அவர் இறைவன்மேல் கொண்ட உறுதியான விசுவாசத்தையும், அதிலிருந்து பிறக்கும் கீழ்ப்படிதலையும், பிரமாணிக்கத்தையும் உணர்த்தும் சம்பவங்கள் மறைநூலில் எமக்குத் தொகுத்துத் தரப்பட்டிருக்கின்றன.

அ ஆதி. 12:1-3 : இறைவன் ஆபிரகாமை அழைத்து " நீ உன் நாட்டையும், உன் இனத்தையும் உன் தந்தையின் வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நாம் உனக்குக் காட்ட விருக்கும் நாட்டிற்குப் போகக்கடவாய்" என்று கட்டளை யிட, உடனே, ஆபிரகாம் அதை விசுவசித்து, முன் பின் அறியாத நாட்டிற்குக் கீழ்ப்படிந்து சென்றார்.

ஆ. ஆதி. 13:14-17 : ஆண்டவர் ஆபிரகாமை நோக்கி "நீ காண்கிற இந்தப் பூமி முழுவதையும் நாம் உனக்கும், உன் சந்ததிக்கும் "தருவோம். மீளவும் (15;5-11) கூடு மாயின் விண்மீன்கள் எத்தனை என்று எண்ணிப் பார். உன் சந்ததி அவ்வளவு இருக்கும்" (திரும்பவும் 17:15) "நாம் சாறாயியை ஆசீர்வதிப்போம். அவள் வழியாக நாம் உனக்குத் தரவிருக்கிற புதல்வனை ஆசீர்வதிப்போம்." ஆபிரகாமுக்கு நூறு வயதாகிவிட்டது. அவரின் மனைவி சாராளுக்கு 90 வயதாகிவிட்டது. இவ்வயோதிப காலத் தில் எப்படி அவள் பிள்ளை பெறுவாள். முடியாத காரிய மாக இருந்தாலும், ஆபிரகாம் கடவுள்மேல் கொண்டுள்ள விசுவாசம் தளரவில்லை முதல்முறை எலிசேயரால் வரும் சந்ததி என நினைத்தார். மறுமுறை இஸ்மாயி லால் வரும் சந்ததியென நினைத்தார். சாராள் பிள்ளை பெறுவாள் எனச் சொன்னபோது மிக ஆச்சரியப்பட் டாள். ஆபிரகாம் அதை ஏற்று கடவுளின் கட்டளைக் குப் பணிந்து விருத்தசேதனம் செய்து கொண்டார்.

இ ஆதி 22:1-2 : கடைசியாகத் தன் வயோதிபத்தில் பெற்றெடுத்த, தன் ஒரே வாரிசான மகன் ஈசாக்கைக் கடவுள் பலி செலுத்தக் கேட்டபோது. அவர் தயங்க வில்லை. கீழ்ப்படிகின்றார். ஈசாக் வழியாகத்தான் சந்த தியை எதிர்பார்த்தார் அவனையே இறைவன் பலி செய்யக் கேட்டபோது அவர் விசுவாசம் தளரவில்லை. இறைவனால் அவர் விசுவாசம் சோதிக்கப்பட்ட போதும் அவர் பிரமாணிக்கமாயிருந்தார்.

ஈ. ஆதி. 23:12-16 : சாராள் இறந்தபோது, அவளை அடக் கம் செய்ய ஒரு துண்டு காணி சொந்தமாக இல்லாது, எபிரோனிடம் நானூறு சீக்கல் வெள்ளிக் காசுக்கு நிலம் வாங்கினார். இருந்தும் " நீ காண்கிற இப்பூமியை உமக்குக் கொடுப்போம்" என்ற இறைவனது சொல்லை அவர் சந்தேகிக்கவில்லை.


இவ்வாறு அவர் வாழ்க்கையில் அவரது அசையாத விசு வாசத்தையும் பிரமாணிக்கத்தையும், கீழ்ப்படிதலையும் காண்கின்றோம். இதைத்தான் இறைவனும் ஆபிரகாமை

அழைத்தபோது அவரிடமிருந்து எதிர்பார்த்தார். இறைவன் அவர் விசுவாசத்தை மெச்சினார்.

2. ஆபிரகாமின் பெருந்தன்மை : ஆபிரகாமின் வாழ்க்கையில் அவரது பெருந்தன்மையை நாம் காணக் கூடியதாக இருக்கிறது.

அ: ஆதி. 3:8-12 : ஆபிரகாமும் லோத்தும் பிரிந்து வாழவேண்டிய காலம் வந்த பொழுது ஆபிரகாம் நடந்து கொண்டவிதம் அவரது பெருந்தன்மையைக் காட்டுகிறது. ஆபிரகாம் பெரியவராக இருந்தபோதிலும், தனக்கு விருப்பமான பகுதியைத் தான் தெரிந்தெடுக்காது, முதன் முதல் லோத்தைத் தெரிந்து கொள்ளச் சொல்கிறார். நல்ல பகுதியை லோத்துக்குக் கொடுத்து விட்டு, மற்றப் பகுதியைத் தான் எடுத்துக் கொள்கிறார்.

## ஆபிரகாமின் பயணம்



ஆ. ஆதி. 14: 13 - 24 சோதோம் நகரைக் கைப்பற்றி, லோத்தையும் எல்லாச் சொத்துக்களையும் மொசேப்பத்தேமிய அரசர்கள் கொண்டுபோவதைக் கேள்விப்பட்ட ஆபிரகாம், லோத்தை விடுதலையாக்க உடனே முன் வருகிறார்; ஆபிரகாம் மீட்டுக்கொண்டுவந்த சோதோம் நகர மக்களது பொருட்களை, சோதோம் அரசன் எடுத்துச் செல்லும்படி சொன்னபோது, ஆபிரகாம் தனக்கு எதுவும் வேண்டாமென, மறுத்துவிட்டார். இவை ஆபிரகாமின் பெருந்தன்மையைக் காட்டுகின்றன.

இ. ஆதி. 18: 1 - 8 தன் கூடாரத்திற்கு முன்னால் வந்த மூன்று வழிப்போக்கரையும் அழைத்து உபசரித்ததில் அவர் பெருந்தன்மை வெளிப்படுகிறது.

ஈ. ஆதி. 18 : 22 சோதோம் கொமொறா மக்களை இறைவன் அழிக்கச் செல்லும்போது அவர்களுக்காகப் பரிந்து பேசுகிறார். அவர்கள் பாவிகளாக இருந்தபோதும் அவர்களைக்காப்பாற்ற இறைவனிடம் கெஞ்சுகிறார். லோத்தையும் குடும்பத்தையும் காப்பாற்ற வழிதேடுகின்றார். ஆபிரகாமின் நிமித்தம் இறைவன் லோத்தைக் காப்பாற்றுகிறார்.

உ. இஸ்மாயில் அடிமையின் மகனாக இருந்தபோதிலும் அவனுக்காக இறைவனிடம் விண்ணப்பிக்கின்றார். ( 17:18 ) இஸ்மாயிலைச் சாராள் இழிவாகப் பேசியபோது கவலைப்பட்டார். ( 21 : 11 )

ஊ. சாராளை அடக்கம் செய்ய எபிரோன் இனாமாகக் காணியைக் கொடுத்தபோதிலும், அவர் அதை ஏற்க மறுத்து 400 வெள்ளிக் காசுகளைக் கொடுக்கிறார்.

3. **ஆபிரகாம் இறைவனின் நண்பர்** : அ. ஆபிரகாம் அஞ்ஞானியாக இருந்தபொழுதும் இறைவன் அருளால் தேர்ந்தெடுக்கப்படுகிறார். இறைவன் அவரை ஆசீர்வதித்து, அவரோடு உடன்படிக்கை செய்கிறார். ஆபிரகாமுக்குத் தனிச்சலுகை ( 15 : 7-21 ) காட்டப்படுகிறது. இறைவன் மட்டும் நெருப்பு வடிவில் பலி செய்யப்பட்ட மிருகங்களிடையே நடந்து செல்கிறார். அதாவது அவர் தாமாகவே உடன்படிக்கை செய்கிறார்.

ஆ. ஆதி. 18 : 22 : லோத்தைக் காப்பாற்ற ஆபிரகாம் இறைவனோடு பேரம் பேசியமுறை அவர் இறைவனுடன் எவ்வளவு நெருங்கிய நண்பனாக இருந்தார் என்பதை காட்டுகிறது. ஆண்டவரும் ஆபிரகாமின் நிமித்தம் ( 19 : 21 ) லோத்தைக் காப்பாற்றுகிறார்.

## ஆபிரகாமின் வாழ்நாட்களில் காணப்பட்ட சில முறைகேடுகள்

ஆபிரகாம் ஓர் அஞ்ஞானியாக இருந்தவர். இறைவன் அவரை அழைத்தபோது, அவ்வழைத்தலை ஏற்று, கனனேய நாட்டுக்கு வந்தார். சொந்த நாட்டை விட்டு வெளியேறினாலும் அவர் அங்கு பழகிய சுமேரிய, பபிலோனிய பழக்கங்கள், அவர்களது குல தெய்வங்கள், பபிலோனிய அரசர்களின் சட்டங்கள் இவற்றையும் தம்முடன் எடுத்து வந்தார். ஆகவே அழைத்தலை ஏற்றபோது முற்றிலும் மாறியவராக அல்ல, பழைய பழக்க வழக்கங்களிலும், சமுதாயப் பின்னணியிலும் ஊறியவராகவே வெளி வந்தார். இறைவன் படிப்படியாகவே இவரையும், இவரது இனத்தையும் பக்குவப்படுத்தினார். ஆகவே பொய், வஞ்சம், கொலை, பல மனைவிகளை மணத்தல் போன்ற குறைகள் ஆபிரகாம் இனத்தவர்களிடையே நிகழ்வதை நாம் காண்கிறோம். அதே சமயம் ஆபிரகாமின் வாழ்க்கையையும், அவர் நடந்த முறையையும், இன்றைய நம் கிறிஸ்தவ தரத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தல் கூடாது. அக்காலத்துப் பழக்க வழக்கங்களை மனதிற்கொண்டு நோக்க வேண்டும். ஆசிரியர் ஆபிரகாமின் பிழைகளை ஒரு நோக்குடன் படம் பிடித்துக் காட்டுகிறார். ஆபிரகாமின் அழைத்தல், இறைவனின் தனிப்பட்ட சலுகை, அவர் இரக்கச் செயல், ஆபிரகாம் அந்த அழைத்தலுக்குத் தகுதியற்றவர். இருந்தும் இறைவன் அவரைத் தெரிந்தெடுத்து, திருத்தி அவர் இனத்தின் வழியாக மீட்பரின் வருகைக்கு ஆயத்தம் செய்தார்

அ. ஆதி. 12 : 10 அவர் எகிப்தில் வாழ்ந்தபோது, அங்கே மரணத்திலிருந்து தப்பவும், சிறைப்படாமல் இருக்கவும், சாராள் தன் சகோதரி என்று பொய் சொல்லுகின்றார். திரும்பவும் 20 : 1 இல். ஜெராரா நாட்டில் அப்படிப் பொய் சொல்லுகிறார்.

ஆ. ஆதி. 16 : 4 : தன் மனைவி சாராளது வேலைக்காரியைத் தன் இரண்டாவது மனைவியாக எற்றுக்கொள்கிறார். ஒருவனுக்கு ஒருத்தி என்ற அடிப்படையில்தான் திருமணம் தொடக்கத்தில் இருந்தது. ஆனால் இஸ்ராயேலரின் பிதாப்பிதாக்கள் இதற்கு மாறாக நடந்ததைப் பரம்பரை கூறுகின்றது.

இ. ஆதி. 21 : 9 : சாராளின் எரிச்சல் : ஆகாரையும் இஸ்மாயிலையும் துரத்திவிட விரும்புகிறார்

ஈ ஆதி. 19 ; 30 : லோத்தின் மனைவி கல்லாக மாறியதால், அவனது இருபெண்களும் தகப்பனுடன்கூடி, மோவாப், ஆமோன் என்ற இரு பிள்ளைகளைப் பெற்றனர் என்ற

அநாகரிகச் செயலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவை இஸ்ராயேலரின் பகைவர்களாகிய மோவாப்பித்தர்களையும், ஆமோனித்தர்களையும் இழிவுபடுத்த இங்கு புகுத்தப்பட்டிருக்கின்றது. இப்படி அநாகரிகச் செயல் நடக்கவில்லை.

6.2 ஈசாக்கு : ஆபிரகாமின் மகன் ஈசாக்கைப்பற்றி பைபிள் அதிகம் கூறவில்லை. ஆபிரகாம் அவரைப் பலி செய்ய ஆயத்தம் செய்த பொழுது, ஆண்டவரே தடுத்தார் என வாசிக்கின்றோம். அடுத்தபடியாக அவர் இரெபேக்காளை மணந்ததைக் காண்கின்றோம். இரெபேக்காள் பல ஆண்டுகள் குழந்தை இல்லாதிருந்து இறைவனை மன்றாடி, இரட்டைப் பிள்ளைகளைப் பெற்றெடுத்தாள். அவர்கள் ஈசோ, யாக்கோபு. இதன்பின் யாக்கோபுவின் வரலாறு முக்கியத்துவம் பெறுகிறது. ஆபிரகாமின் மகன் ஈசாக் விவிலிய நூலில் ஒரு வலிமை பொருந்திய குணசிலனாகச் சித்திரிக்கப்படவில்லை ஆபிரகாம் தனது ஊழியனை மொசப்பத்தேமியாவிற்கு அனுப்பி, பத்துவேலின் மகள் இரெபேக்காளை வரவழைத்து ஈசாக்குக்கு மணம் செய்து வைத்தார் விவாகத்தின்பின் இரெபேக்காள் தனது குணசீலங்களாலும், தந்திரங்களினாலும் வேதாகமத்தில் முக்கிய இடம் பெறுகிறாள். ஆயினும் இறைவனால் தெரிந்து கொள்ளப்பட்ட மக்களின் ஒரு முக்கிய கோர்வையாக ஈசாக் இரட்சணிய வரலாற்றில் இடம் பெறுகின்றார். இறைவன் ஓர் இரவில் அவருக்குத் தோன்றி (ஆதி. 26 : 24 - 25) அவரை ஆசீர்வதித்து (ஆபிரகாம் பொருட்டு அவரை ஆசீர்வதித்து) அவர் சந்ததியைப் பெருகச் செய்வதாக வாக்களித்து உடன்படிக்கையைப் புதுப்பிக்கிறார்.

6.3 யாக்கோபு : இரெபேக்காளுக்கு ஈசாக் வழியாக இரட்டைப் பிள்ளைகள் பிறந்தனர். ஈசோவும் யாக்கோபும் தாயின் வயிற்றில் இருக்கும்போதே இருவரும் போர்புரியத் தொடங்கி விட்டார்கள். இறைவன் ஒரு குடியை மற்றொரு, குடி மேற்கொள்ளும் என்றும் மூத்தவன் இளையவனுக்குப் பணிந்திருப்பான் என்றும் முன்னறிவித்தார், ஈசோ மூத்தவன், அடர்ந்த உரோமம் உடலில் உள்ளவன். உடல் பலமுள்ளவன். ஈசாக்கின் செல்லப்பிள்ளை. யாக்கோபு இளையவன், அழகானவன். மனப்பலமுள்ளவன் இரெபேக்காளின் அன்பு மகன்.

ஒருநாள் யாக்கோபு தன் தாயார் செய்த உணவைக் களைத்துப்போய் வந்த ஈசோவுக்குக் கொடுத்து, தந்திரமாக அவனிடமிருந்து மூத்தவனுக்குரிய பிறப்புரிமையை வாங்கிக்

கொண்டான். ஈசோ அற்ப உணவுக்காகத் தன்னிடமிருந்த பெரிய உரிமையை இழக்கத் தயாரானான் இச்சம்பவத்தின் வழியாக இன்று அற்ப ஆதாயத்திற்காக, நிலையற்ற இன்பத் திற்காக இறைவனின் அரிய கொடையை இழப்பவர்களைக் காணக்கூடியதாயுள்ளது அத்தோடு யாக்கோபு இறைவனின் அன்புக்குப் பாத்திரவானாவதையும் ஆசிரியர் நமக்குக் கூறுகி றார். ஈசோ இரு அன்னியப் பெண்களை (யூதித், பசெமாத்). மணம் செய்து தன் பெற்றோர் மனதை நோகச் செய்கி றான். தன் முதுமையில் கண்பார்வை மங்கியிருந்த ஈசாக், தன் ஆசை மகன் ஈசோவை ஆசீர்வதிக்க ஆயத்தப்படுத்திய போது, யாக்கோபு தன் தாயின சூழ்ச்சியால் தந்திரமாகப் பொய்கள் பலகூறித் தந்தையின் ஆசீரைப் பெறுகின்றான். இவ்வாறு யாக்கோபு ஈசோவின் வாரிசு உரிமையையும், தந் தையின் ஆசீரையும் பெற்றான். யாக்கோபின் நடத்தையை யும், தாய் இரெபேக்காளின் தந்திரத்தையும் ஆசிரியர் புகழ வில்லை. ஆனால் எவ்வாறு இறைவன், மக்கள் செய்யும் தீமைகளைப் பயன்படுத்தி தான் நினைத்ததை நிறைவே றச் செய்கின்றார் எனபதைக் காட்டுகிறார். தீமையினின்று நன்மை விளையச் செய்பவர் கடவுள் மேலும் இறைவன் வாக்குறுதி தலைமுறை தலைமுறையாகவல்ல, ஆனால் அவ ரின் தனிப்பட்ட தெரிவிலிருந்து நிறைவேறுவதையும் காண் கிறோம்.

தன் பிறப்புரிமையையும், வாரிசு உரிமையையும், ஆசீர்வாதத்தையும் யாக்கோபு பற்றிக்கொண்டதை உணர்ந்த ஈசோ அவனைக் கொல்லத் திட்டமிடுகின்றான். இதை யறிந்த இரெபேக்காள் யாக்கோபுவை, ஈசோவின் கோபம் தணியும்வரை, மொசெபத்தேமியாவுக்குத் தன் அண்ணன் லாபானிடம் அனுப்பி வைக்கிறாள். யாக்கோபும் ஈசோவைப் போல அன்னிய பெண்களை மணக்காமல் தங்கள் இனத்த வருள் ஒருவளை மணக்கவேண்டும் என்பதுதான் ஈசாக்கி னதும், இரெபேக்காளதும் விருப்பமாகும். எனவே ஈசாக்கும் மகனை ஆசீர்வதித்து, லாபானின் மக்களில் ஒருவளை மணம் செய்து வருமாறு அனுப்புகிறார்.

மொசபொத்தேமிய பயணம்

ஆதி. 28:10 மொசப்பத்தேமியாவை நோக்கி யாக் கோபு நடந்து கொண்டிருக்கையில் ஒரு முக்கிய சம்பவம் நடைபெற்றது இச்சம்பவம் யாக்கோபுவின்மேல் இறைவனது சிறந்த பராமரிப்பை வலியுறுத்துகின்றது அவன் ஒரு மாலைப் பொழுது இளைப்பாற ஒரு கல்லைத் தலையணையாகப் பாவித்துப் படுத்து நித்திரை செய்தான். அப்போது அவன

ஒரு கனவு கண்டான். ஓர் ஏணி சாத்தப்பட்டிருந்தது. அதன் ஒரு முனை பூமியைத் தொட்டது மறுமுனை வானத்தைத்தொட்டது. அதன்மேல் தேவதூதர் ஏறுவதும் இறங்குவதுமாக இருந்தனர். ஏணியின் மேல்முனையில் இறைவன் அமர்ந்திருந்தார். அப்போது இறைவன் யாக்கோபுவை நோக்கி, ''நாம் உன் தந்தை ஆபிரகாமின் கடவுளும், ஈசாக்கின் கடவுளுமாகிய ஆண்டவர்; நீ தங்கியிருக்கும் இப்பூமியை உனக்கும் உன் சந்ததிக்கும் தருவோம். உன் சந்ததியோ நிலப் புழுதிக்கு ஒக்கும். உனக்கு நாம் காவலாயிருந்து, இந்நாட்டிற்கு உன்னைத் திருப்பி வரச் செய்வோம். உனைக் கைவிடமாட்டோம்'' என்றார்.

இந்நிகழ்ச்சி யாக்கோபுவின் வரலாற்றில் முக்கியமானது இறைவன் அவருக்கு அருகில் இருப்பதை உணர்த்தியது இக்கனவு. ஆபிரகாமையும், ஈசாக்கையும் காத்து நடத்தியவர், தன்னையும் காத்து நடத்துவதாக வாக்களிக்கின்றார். இறைவனுக்கும், தனக்கும் உள்ள நெருங்கிய தொடர்பை அறிகிறார். இறைவனோடு மக்கள் எளிதில் தொடர்பு கொள்ளலாம் என்பதையும் உணர்கிறார் எம் வேண்டுதலை இறைவனிடம் எடுத்துச் செல்வதும், நமக்கு வேண்டிய வரங்களை அவரிடமிருந்து வாங்கி வருவதும் வானதூதரின் பணி என்பதை நமக்கு கூறுகின்றது.

யாக்கோபின் திருமணம்

யாக்கோபு தொடர்ந்து தன் பிரயாணத்தை மேற்கொண்டு, தன் மாமன் லாபனுடைய வீட்டையடைந்தார். லாபன் அவரைச் சந்தோஷத்துடன் வரவேற்றான். லாபனுக்கு இரு புதல்விகள் இருந்தார்கள். மூத்தவள் பெயர் லீயாள் பீளைக் கண்ணுடையவள். இளையவள் பெயர் இராக்கேல் வடிவழகும், முக எழிலும் உள்ளவள். யாக்கோபு இவளையே விரும்பினார். லாபானும் அவளை முடித்துத்தருவதாகக் கூறினான். யாக்கோபு அவளைப் பெறுவதற்காக ஏழாண்டுகள் லாபானிடம் வேலைசெய்தார். ஆனால் லாபான் கடைசி நேரத்தில், தந்திரமாக மூத்தவளையே அவனுக்கு முடித்து வைத்தான். (29:22) ஏமாற்றமடைந்த யாக்கோபு இன்னும் இராக்கேலை அதிகம் விரும்பியபடியால், அவளையும் கட்டித் தரச் சொல்லி, அவளுக்காக ஏழாண்டுகள் வேலை செய்தார். யாக்கோபு லீயாள் வழியாக ரூபன், சிமியோன், லேவி, யூதா என்ற நான்கு பிள்ளைகளைப் பெற்றார். இராக்கேல் மலடியாக இருந்தாள். அவள் லீயாள்மேல் பொறாமை கொண்டு தனக்குப் பிள்ளைப்பெற தன் வேலைக்காரி பாவாளை யாக்கோபுவுக்கு மனைவியாகக் கொடுத்தாள. பாவாள் வழியாக தான், நெப்தலி என இரு பிள்ளைகள் பிறந்தன. லீயாள்

தன் பிள்ளைப்பேறு நின்றுவிட்டதைக் கண்டு, தன் வேலைக்காரி ஜெல்பாளை யாக்கோபுவுக்கு மனைவியாகக் கொடுத்தாள் அவள் வழியாக காத், ஆசேர், என்னும் பிள்ளைகள் பிறந்தன. திரும்பவும் லீயாள் இசக்கார், சாபுலோன் என்னும் புதல்வர்களையும், தீனாள் என்னும் புதல்வியையும் பெற்றாள். கடைசியாக இறைவனின் கருணையால் இராக்கேல், சூசை என்றொரு மகனைப் பெற்றாள்.

இந்த நிகழ்ச்சிகளிலும் மொசப்போத்தேமிய பழக்க வழக்கங்களைப் பார்க்கிறோம். ஒழுக்கத்தில் இஸ்ராயேலர் இன்னும் உயரவில்லை என்பதையே அறிகிறோம்.

### தாயகம் திரும்புதல்

யாக்கோபு தம் மனைவியர் மக்களுடன் தாயகம் திரும்புமுன், தனக்கென உடைமைகளைத் தந்திரமாகச் சேகரித்தார். ஆண்டவர் அவரைத் தாயகம் திரும்ப வேண்டுமென அழைத்தார். கட்டளைக்குப் பணிந்து யாக்கோபு தன் குடும்பத்தவருடன் ஒருவருக்கும் தெரியாது புறப்பட்டார். ஏனென்றால் அவரது உடைமைகளை அபகரிக்க லாபானும் அவனது பிள்ளைகளும் திட்டமிட்டிருந்தனர். இதையறிந்த லாபானும் பிள்ளைகளும் அவரைப் பின்தொடர்ந்து வந்தனர். யாக்கோபுவுக்கு எதிராக எதுவும் செய்யாதே என இறைவன் லாபானை எச்சரித்தார் (34:24) யாக்கோபு தன் சொந்த நாட்டை நெருங்கியபோது, தன் தமையன் ஈசோ பழைய பகையை மறந்து விட்டானோ என அறியத் தூதர்களைப் பரிசுடன் அனுப்பினார். ஈசோவும் மனம் மாறியிருந்து, விரைந்து வந்து தம்பியைக் கட்டித் தழுவி வரவேற்றான். யாக்கோபு தாயகம் திரும்பிச் செல்லும் வழியில் ஒரு சம்பவம் நிகழ்ந்தது - இனம் தெரியாத ஒருவருடன் போராடிய நிகழ்ச்சி. அவன் தன்னாலே யாக்கோபுவை வெல்ல முடியாதென்று கண்டு, யாக்கோபுவின் தொடை நரம்பைத் தொடவே, அது மரத்துடபோய் விட்டது. போராடியவர் ''நீ தேவனோடு போராடி மேற்கொண்டாய். ஆகவே இனி இஸ்ராயேல் என்று அழைக்கப்படுவாய்'' என்று கூறி, ஆசீர்வதித்தார். இச்சம்பவம் யாக்கோபு மனிதருடன் நல்ல தொடர்புகொள்வார் என்பதையும், அவர் இறைவனால் ஆசீர்வதிக்கப்பட்டவர் என்பதையும் விளக்குகின்றது.

யாக்கோபு தன் பிரயாணத்தைத் தொடர்ந்து மேற்கொண்டு, பெத்லகேமை நோக்கிச் சென்றார். செல்லும்வழியில் இராக்கேல் யாக்கோபின் பன்னிரண்டாவது மகன் பெஞ்

சமீனைப் பெற்று, பிரசவத்தில் இறந்தாள், யாக்கோபு மாம்பிறே சென்று, தன் தந்தை ஈசாக்கின் கடைசி நேரத்தில் உதவி செய்து, அவர் இறந்தபோது, யாக்கோபும், ஈசோவும் அவரை நல்லடக்கம் செய்தார்கள்.

## யாக்கோபின் வாழ்க்கையின் முக்கிய பண்புகள்

1. இறை பராமரிப்பு : அ. 28:10 — யாக்கோபு மெசபத்தேமியாவை நோக்கிப் பயணம் செய்கையில் அவர் கண்ட கனவில், இறைவன் கொடுத்த வாக்குறுதியின் வழியாக இறை பராமரிப்பைக் காண்கிறோம். ''நீ எவ்விடம் போனாலும், உனக்கு நாம் காவலாயிருந்து... உன்னைக் கைவிடமாட்டோம்'' வாக்குறுதியை புதுப்பிக்கிறார்.

ஆ. 30:27 யாக்கோபு லாபனோடு இருந்த காலத்தில், லாபனுடைய சொத்து, ஆடுமாடுகள் தொகை அதிகரித்தன. யாக்கோபின் பொருட்டே ஆண்டவர் தன்னை ஆசீர்வதித்ததை லாபன் உணர்கிறான். இறைபராமரிப்பு யாக்கோபுக்கு அவரது உழைப்பிலிருந்தது, யாக்கோபுவும் செல்வந்தனானார்.

இ 31:24 யாக்கோபுவைத் தாக்குவதற்காக லாபனும் இரு மக்களும் சென்றபொழுது, கடவுள் லாபனுக்குத் தோன்றி ''நீ யாக்கோபிடம் கடுமையாக ஒன்றும் பேசவேண்டாமென்று'' எச்சரிக்கை செய்து அவரைக் காப்பாற்றுகிறார்.

ஈ. 32:22 ... யாக்கோபு தன் மனைவி மக்களுடன் மாம்பிறேக்குத் திரும்பியபோது வழியில் அவர் இனம் தெரியாத மனிதனோடு போராடிய சம்பவத்தில் இறை பராமரிப்பைக் காண்கின்றோம். இறைவன் யாக்கோபுவின் பெயரை மாற்றி, அவரைத் தமக்குச் சொந்தமாக்குகிறார்.

உ. 34:24 ... யாக்கோபு சிக்கிமரை அழித்து, தம் இனத்தைப் பாதுகாக்கிறார்.

ஊ. 35:20 ... கடவுள் மீளவும் யாக்கோபின் பெயரை மாற்றி, அவரையும் அவரது சந்ததியையும் ஆசீர்வதித்தார்.

2. தந்திரம், கபடம் : அ. 25:29 ... தமையனின் பிறப்புரிமையைத் தந்திரமாகப் பெறுகிறார்.

ஆ. 27;30-40 ... தந்தையின் இறுதி ஆசீரையும் சூழ்ச்சியால் பெறுகிறார்.

இ. *30:37-43* ... லாபனோடு இருக்கை
யில் தந்திரமாகத் தன் செல்வங்க
ளைப் பெருக்கினார்.

ஈ. *32:13* - தமயனுக்குப் பரிசுகள்
அனுப்பி, அன்பைப் பெறுகிறார்.

விசேட குறிப்பு: ஆபிரகாமுக்குப் பின் இரட்சணிய வரலாற்றில் முக்கிய இடம் பெறுபவர் யாக்கோபு மூத்த மகன் ஈசோவை விட்டு இறைவன் இளைய யாக்கோபுவைத் தெரிந்தெடுத்து. இவர் வழியாகத் தம் வாக்கை நிறைவேற்றுகிறார். உடன்படிக்கை தலைமுறை தலைமுறையாகவல்ல, இறைவன் தாம் விரும்பியவர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களோடு தமது வாக்குறுதிகளைப் புதுப்பிப்பதை நாம் காண்கிறோம். ஆபிரகாமையும், ஈசாக்கையும் தெரிந்தெடுத்துக் காத்து வழிநடத்தியவர், யாக்கோபையும் தெரிந்தெடுத்துக் காத்து நடத்துகிறார், இறைவனுடைய பராமரிப்பை நாம் யாக்கோபுவின் வரலாற்றில் அதிகமாகக் காண்கிறோம். இதை இறைவன் உறுதிப்படுத்துகின்றார். நடைபெற்ற ஒழுங்கீனங்களைப் பயன்படுத்தி, யாக்கோப்பில் தன் திட்டங்களை நிறைவேற்றுகிறார். யாக்கோப்பின் வாழ்க்கையில் அவருடைய தந்திரங்களை அதிகமாகக் காண்கிறோம் இறைவன் அவரைத் தண்டித்துத் திருத்துகின்றார்.. (29:22). இஸ்ராயேலர் இன்னும் ஒழுக்கத்தில் உயரவில்லை பல தாரங்கள், தந்திரங்கள், பிள்ளைகளின் அட்டூழியங்கள், பல மனைவி கொள்ளுதல் தவறு என்பதை மனைவிகளுக்குள் ஏற்பட்ட போராட்டங்கள் பிள்ளைகளுக்குள் ஏற்பட்ட தகராறுகள் என்பன இதைச் சுட்டிக்காட்டுகின்றன. இறைவன் பிதாப்பிதாக்கள் வழியாகத் தம் இனத்தைப் பாதுகாத்து. உருவாக்குகின்றார் என்பதை உணர்த்தும் சம்பவங்கள் எமக்குத் தரப்பட்டுள்ளன.

6.4 யோசேப்பு: (சூசை) (ஆதி. 37-50) எல்லாப் பிதாப்பிதாக்களிலும் பார்க்க இவரது வாழ்க்கை மிகவும் விரிவாக எழுதப்பட்டுள்ளது. காரணம் மற்றவர்களைவிட இவர்தான் சமீபத்தில் வாழ்ந்தவர். ஒருவிதத்தில் இஸ்ராயேல் வரலாறு இவரது வாழ்கையோடு நெருங்கி இணைக்கப்பட்டிருக்கிறது. இவரால் தான் இஸ்ராயேலர் எகிப்துக்கு வந்தனர் அங்கு அவர்கள் தாம் ஓர் தனி இனம் என்ற உணர்வைப் பெற்றனர். அங்கிருந்து மீட்கப்பட்ட மக்களாக வெளியேறினர். யோசேப்பின் காலம் ஈடேற்ற வரலாற்றுக்கு ஒரு முன்னுரையாக அமைகின்றது. இவர் வழியாக இஸ்ராயேலர் உலக வரலாற்றில் இடம் பெறுகிறார்கள். ஏனைய பிதாப்பிதாக்கள் வாழ்க்கையில்

நிகழ்ந்ததுபோல, யோசேப்பின் வரலாற்றிலும் இறைவனது விசேட பராமரிப்பைக் காண்கிறோம். இறைவன் தீமையை நன்மையாக மாற்றி யோசேப்பையும் இஸ்ராயேலரையும் பாதுகாக்கின்றார் இறைவன் தமது வாக்கில் பிரமாணிக்க மாய் இருப்பதை மீண்டும் மீண்டும் காண்கிறோம். இஸ்ரா யேலர் பஞ்சத்தால் மடியும்போது, இறைவன் யோசேப்பு வழியாக அவர்களைக் காப்பாற்றுகின்றார். யோசேப்பு உயர்ந்த பதவி வகிக்கின்றார் அவரது ஆட்சித்திறனைப் பற்றி அதிகம் சொல்லப்படுகிறது. உயர் பதவியிலும் ஒழுக் கம் குன்றாதவர்; அன்பும் அடக்கமும் உடையவர். எதார்த்த குணமுடையவர்; தீமையைத் தீமையால் எதிர்க்காதவர். எவரும் எவ்வளவோ வஞ்சனையும், துரோகமும் செய்திருப் பினும், மன்னித்து மறப்பவர். குழந்தைகளாகிய இஸ்ராயேல் இனத்தாரின் பாதுகாவலராகத் திகழ்கின்றார்.

### யோசேப்பு விற்கப்படல்

யாக்கோபுவின் அன்பு மனைவி இராக்கேலின் உரு வெனத் திகழ்ந்தபடியால் யாக்கோபால் மிகவும் நேசிக்கப் பட்டார். இதனிமித்தம் யாக்கோபுவின் ஏனைய புதல்வர் கள் யோசேப்புவின்மேல் பொறாமை கொண்டனர். யோசேப் பின் செயல்களும் இதை அதிகரித்தன அவர் கண்ட கனவு கள் இந்தப் பகைக்கு எண்ணெய் ஊற்றியதுபோலிருந்தது. யோசேப்பு தன் சகோதரரின் அரிக்கட்டுகள் தன் அரிக்கட்டை வணங்குவது போலவும், சூரியனும், சந்திரனும் 11 விண்மீன் களும் தன்னை வணங்குவதுபோலவும் கனவுகண்டார் இக் கனவுகள் சகோதரரின் கோபத்தையும் பொறாமையையும் அதி கரித்தன. ஒரு நாள் சிக்கேமில் மந்தைகளை மேய்த்துக் கொண் டிருந்த சகோதரர்களைப் பார்த்து வரும்படி யாக்கோபு தன் அன்பு மகன் யோசேப்புவை அனுப்பினார். யோசேப்பு தனியே வருவதைக் கண்ட சகோதரர்கள் அவன்மேல் உள்ள கோபத் தைத் தீர்த்து, அவனைக் கொல்லத் திட்டமிட்டனர். மூத்த சகோதரன் ரூபனுடைய தலையீட்டால் தங்கள் திட்டத்தை மாற்றி, பாழ்கிணற்றில் தள்ளிவிட்டனர். பின்பு யூதாவின் ஆலோசனைப்படி அவ்வழியால் வந்த இஸ்ராயேலியராகிய வியாபாரிகளுக்கு இருபது வெள்ளிக்காசுக்கு விற்றனர். சூசையினுடைய அங்கியை எடுத்து, வெள்ளாட்டுக் குட்டியின் இரத்தத்தில் தோய்த்து, அதைத் தங்கள் தந்தையிடம் காட்டி, விலங்குகள் தின்றுவிட்டதாகக் கூறினார்கள். தந் தையும் அதை நம்பி, பல நாட்களாகக் கவலைப்பட்டார்.

### எகிப்தில் யோசேப்பு

யோசேப்பை விலைக்கு வாங்கிச் சென்ற வியாபாரிகள்

அவனைப் பார்வோனின் சேனாதிபதி புத்திபாருக்கு விற்றனர். யோசேப்பு புத்திபாருடைய வீட்டுக்கு வந்ததுமுதல், புத்திபார் எடுத்த காரியங்களில் எல்லாம் அவருக்கு வெற்றி கிட்டியது. ஆகவே ஆண்டவர் சூசையோடு இருக்கிறார் என்பதை உணர்ந்து, புத்திபார் அவரைத் தன் வீட்டில் எல்லாவற்றிற்கும் மேற்பார்வையாளனாக ஏற்படுத்தினார். புத்திபாரின் மனைவி, யோசேப்புவின் அழகில் மயங்கி, அவரை மயக்க முயன்றபோது, யோசேப்பு அதற்கு இடம் கொடாதபடியால், அவர் தன்னைக் கெடுக்க முயன்றார் என்று பொய்க்குற்றம் சுமத்தி, யோசேப்பை சிறையில் அடைப்பித்தாள். ஆனால் ஆண்டவர் அவருடன் இருந்தார். இதை உணர்ந்த சிறைக்கூடத்தலைவனின் தயவு அவருக்குக் கிடைத்தது. சிறைக் கைதிகளைக் கண்காணிக்கும் பொறுப்பு அவரிடம் ஒப்படைக்கப்பட்டது யோசேப்பு கனாக்கள் காண்பதிலும், அவற்றிற்கு விளக்கங்கள் கூறுவதிலும் தேர்ந்தவராகக் காணப்பட்டார். எகிப்தியர் கனவில் அதிக நம்பிக்கையுடையவர்கள்; சிறையில் இரு கைதிகள் கனவு காண்கிறார்கள்; அதற்கு யோசேப்பு விளக்கம் கூறியதுபோல் ஒருவன் விடுதலையடைந்தான்; மற்றவன் தூக்கிலிடப்பட்டான்.

பார்வோன் மன்னனும் ஒருநாள் கனவுகள் கண்டார். எவரும் அதற்கு விளக்கம் கொடுக்கமுடியாமல் விழித்தனர். விடுதலையடைந்த கைதியின் வழியாக யோசேப்பைப் பற்றி அறிந்த பார்வோன் அவரை அழைப்பித்தான். யோசேப்பு அவரின் கனவுக்கு விளக்கம் கூறி, ஏழுவருட வளமான காலமும், அதைத் தொடர்ந்து ஏழு வருட பஞ்சமும் ஏற்படும் என்று கூறினார். அதனால் புத்திக்கூர்மையும், அரசியல் அறிவுமுள்ள ஒரு மனிதனை நாட்டுக்கு அதிபதியாக்கி, வளமான காலத்தில் தானியங்களைக் களஞ்சியத்தில் சேர்த்து வைப்பதே சிறந்தது எனப் புத்திமதியும் கூறினார். எனவே பார்வோன் யோசேப்பையே நாட்டுக்கு அதிபதியாக்கி, அவருக்கு எல்லா அதிகாரமும் கொடுத்தான்; குரு குலத்தைச் சேர்ந்த ஆஸ்னேட்டை அவருக்கு மணம் செய்தும் வைத்தான். அவள் வழியாக அவருக்கு மனாசே, எபிராயிம் என இரு புதல்வர்கள் பிறந்தார்கள். யோசேப்பு வளமான காலத்தில் தானியங்களைக் களஞ்சியத்தில் சேர்க்கச் செய்தார். அடுத்து எங்கும் ஏழு வருட பஞ்சம் ஏற்பட்டது. உணவு தேடி அலைந்து பார்வோனிடம் வந்த மக்களை அவன் சூசையிடம் அனுப்பி வைத்தான். எகிப்தில் ஏராளமான தானியங்கள் கிடைத்தன. பிறநாட்டாரும் தானியம் வாங்க சூசையிடம் வந்தார்கள்.

இஸ்ரயேலர் எகிப்தில் குடியேறல்,

கனேனய நாட்டிலும் பஞ்சம் ஏற்படவே, யாக்கோபு தன் மக்களை உணவு வாங்க எகிப்துக்கு அனுப்பினார். சூசையின் சொந்தத் தம்பி பெஞ்சமீனை அனுப்பவில்லை. அவர்களும் தானியம் வாங்க எகிப்துக்கு வந்து, சூசையை வணங்கினார்கள். சூசை தன் சகோதரர்களை அறிந்து கொண்டார். ஆனால் அவர்களோ சூசை தாம் வியாபாரிகளுக்கு விற்ற தம் சகோதரன் என்பதை அடையாளம் கண்டு கொள்ளவில்லை. சூசை அவர்களைச் சோதிக்க விரும்பி, அவர்கள் ஒற்றர்கள் எனக் குற்றம் சாட்டினார். திருப்பிச் சென்று மற்றச் சகோதரன் பெஞ்சமீனை அழைத்துவரக் கட்டளையிட்டார். பெஞ்சமீனின் மூடையில் வெள்ளிக் கிண்ணத்தை மறைத்து வைத்து, தம் சகோதரரைக் கலங்கவைத்து, அவர்கள் பிழையை உணர்த்தினார். அவர்களும் முன்பு தாம் செய்த குற்றத்திற்காகக் கடவுள் தங்களைத் தண்டிக்கிறார் என உணர்ந்து தங்கள் வாழ்க்கைச் சரித்திரத்தைக் கூறினார்கள். இவ்வாறு சூசை அவர்கள் செய்த அக்கிரமத்தை அவர்கள் உணருமபடி செய்கின்றார். பின் தம்மை யாரென அவர்களுக்கு அறிமுகப்படுத்தி, அவர்களைத் தேற்றினார் ''பயப்படாதேயுங்கள். நான் இந்த நாட்டுக்கு வந்து சேருமாறு, நீங்கள் என்னை விற்றுவிட்டது குறித்து மனம் கலங்கவேண்டாம்; ஏனெனில் உங்கள் உயிரைக் காப்பாற்றும் பொருட்டே கடவுள் உங்களுக்கு முன் என்னை எகிப்துக்கு அனுப்பியருளினார். உங்கள் திட்டத்தால் அல்ல, கடவுளின் திருவுளத்தாலே நான் இவ்விடத்திற்கு அனுப்பப்பட்டேன்'' என்றார். பின் தந்தையை அழைத்துவர, பல பரிசுகளும் கொடுத்து, வண்டிகளையும் அனுப்பி வைத்தார்.

சூசை இன்னும் உயிருடன் இருக்கிறார் என்பதை அறிந்த யாக்கோபு தன் குடும்பத்துடனும், உடமைகளுடனும் எகிப்துக்குச் சென்றார். செல்கின்ற வழியில் கடவுள் அவருக்குத்தோன்றி, ''எகிப்தில் உங்களைப் பெருங்குடியாக வளரச் செய்வோம். நாம் உன்னோடு அவ்விடம் வருவோம், நாம் அவ்விடத்தில் இருந்து திரும்பிவரும்போது உன்னைக் கூட்டி வருவோம்,'' என வாக்களித்தார். அவர்களெல்லோரும் யேசேன் நாட்டில் குடியேறினார்கள். யாக்கோபின் அந்திய நேரம் நெருங்கியது. யோசேப்பின் இரு மக்களையும் அழைத்து ஆசீர்வதித்தார். தன் மற்றைய மக்களையும் ஆசீர்வதித்தார்; நான்காவது மகனான யூதாவுக்கே முதல் ஆசீர் வழங்கப்பட்டது. கடைசியாகத் தன் உடலைக் கானான் ஊரிலே மாம்பிறே பள்ளத்தாக்கில் உள்ள ஆபிரகாம், சாறாள், ஈசாக், இறெபேக்காள், லீயாள் அடக்கம்

செய்யப்பட்ட இடத்தில் தன்னையும் அடக்கம் செய்யக் கேட்டுக் கொண்டார். அப்படியே யோசேப்பும், அரசன் அனுமதியுடன் அங்கே அடக்கம் செய்துவிட்டு, எல்லோரும் திரும்பி எகிப்துக்கு வந்தனர். யோசேப்பின் இறுதிக்காலம் வந்தது. அவர் தம் மக்களையும், சுற்றத்தாரையும் கூட்டி, "கடவுள் உங்களை ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபுக்கு வாக்களித்திருக்கும் நாட்டிற்குக் கூட்டிச் செல்வார். "நீங்கள் போகும்போது என் எலும்புகளையும் எடுத்துச் செல்லுங்கள்" என்று ஆணையிட்டுக் கூறினார். அவர் இறக்கும்போது அவருக்கு வயது 110

யோசேப்பின் வாழ்க்கையில் இறை பராமரிப்பு :

1. 37 : 18 - 28 ... சகோதரரின் தீய திட்டத்திலிருந்து காப்பாற்றுகிறார்.

2. 39 : 2 - 6 ... புத்திபார் எடுத்த காரியங்கள எல்லாம் வெற்றியில் முடிந்தன. செல்வங்கள் எல்லாம பெருகின.

3. 39 : 21 ... சிறைச்சாலையிலும், சிறைத் தலைவன் சூசையோடு கடவுள் இருப்பதை உணர்ந்தான். அவனது தயவு சூசைக்குக் கிடைத்தது.

4. 45 : 5 - 6 ... இறை பராமரிப்பு யோசேப்புக்கு மட்டுமல்ல, யோசேப்பு வழியாக அவர் தந்தைக்கும், சகோதரருக்கும், எல்லோருக்கும் கிடைத்தது. பஞ்ச காலத்தில் எல்லோரும் காப்பாற்றப்பட்டார்கள்.

விசேட குறிப்புகள் : ஆதியாகமத்தில் யோசேப்பின் உயர் பதவியைப் பற்றியும் அவர் ஆட்சித் திறன் பற்றியும், ஒழுக்கத்தைப்பற்றியும் எடுத்துக் கூறப்படுகின்றது. விசேடவிதமாக அவர் வாழ்க்கையில் இறை பராமரிப்பையும், அவர் வழியாக இஸ்ராயேல் மக்களை இறைவன் பராமரித்து வழிநடத்துவதையும் காண்கிறோம். மனிதர் செய்யும் தீமைகளை எவ்விதம் இறைவன் பயன்படுத்தி, தம் திட்டங்களை நிறைவேற்றுகிறார் என்பதையும் பார்க்கின்றோம். (ஆதி. 39: 1; 39:22; 41:40) சகோதரர்களால் விற்கப்பட்ட யோசேப்பு வழியாக இறைவன் அவர்களையும், அவர்கள் இனத்தையுமே காப்பாற்றுகின்றார். புத்திபார் யோசேப்பிடம் இறைவன் இருந்து வழிநடத்துவதைக் காண்கிறார்; சிறை அதிகாரியும் அவ்வாறே உணருகிறார். இறைவனின் மீட்புத் திட்டத்தில் யோசேப்பு முக்கிய பங்கெடுக்

கின்றார்: இவரின் காரணமாக இஸ்ராயேல் மக்கள் எகிப்தில் குடியேறிப் பெருகுகின்றார்கள் பஞ்சத்திலிருந்து பாதுகாக்கப் படுகின்றார்கள்; பிற்காலத்தில் எகிப்தியரால் துன்புறுத்தப் பட்டபோது, மீட்பு வேண்டி இறைவனை நோக்கிக் கதறினார்கள். இறைவனும் அதிசயமான முறையில் அவர்களை மீட்கின்றார்.

**7** மோயீசன் காலம் : கி. மு. 1200 (யாத்திராகமம், எண்ணாகமம், உபாகமம்.)

ஆதியாகமத்தின் கடைசிப் பகுதி, யோசேப்பின் இறுதி வார்த்தைகள் ''கடவுள் உங்களை ஆபிரகாம், ஈசாக, யாக்கோபுக்கு வாக்களித்த நாட்டிற்குக் கூட்டிச் செல்வார்.''

இவ்வார்த்தைகள் மோயீசன் காலத்திற்கு, யாத்திராகமத்திற்கு முன்னுரையாக அமைகின்றது. இறைவனால் வாக்களித்தபடி 450 ஆண்டுகளுக்குப்பின் எகிப்திலிருந்து மீட்கப் பட்ட இஸ்ராயேலர் கானான் தேசத்திற்குச் செய்த பிரயாணம், மோயீசன் காலத்தில், இஸ்ராயேலர் வரலாற்றில் முக்கிய சம்பவமாகத் திகழ்கிறது. இந்தப் பயணம் எமக்கு யாத்திராகமத்திலும், எண்ணாகமத்திலும் தரப்பட்டிருக்கிறது. யாத்திராகமம் ஒரு பயண நூலாக இருக்கின்றது. ஆனால் ஆசிரியர் இன்றைய பயண நூல்கள்போல் உள்ளதை உள்ள படியே கூறாமல், உள்ளதைத் தான் உணர்ந்தபடி, பழங்கால இலக்கிய மரபுகளைப் பயன்படுத்திக் கூறுகின்றார் இந்த நூல் எழுதப்பட்ட முறையும், குறிக்கோளும் வேறு. மோயீசனே இந்நூலின் உயிர்நாடி, அவரைச் சுற்றியே அனைத்து நிகழ்ச்சிகளும் அமைந்திருந்தன. எகிப்து, சீனாய் மலை, அங்குள்ள மக்களின் வாழ்வு போன்றவற்றைப்பற்றி நாம் அறியாததை அறியத்தரும் நோக்குடன் இந்நூல் எழுதப்படவில்லை. இந்நூலின் குறிக்கோள் இஸ்ராயேல் மக்கள் மட்டில் இறைவன் காட்டிய தனி அன்பை எடுத்துக்காட்டுவதேயாகும். யூதமக்களின் வரலாற்றில் மிக முக்கியமான நிகழ்ச்சி, எகிப்திய அடிமைத்தனத்தினின்று விடுதலை பெற்று, செங்கடல் ஊடாகப் பிரயாணம் செய்து, கானான் நாட்டில் யூத அரசாட்சியை ஏற்படுத்தியதாகும். இந்த விடுதலையைப் பெருவிழாவாகப் பாஸ்கா விழாவாகக் கொண்டாடி, மோயீசன் தலைமையில் நடந்த விடுதலைப் போராட்டத்தையும், வெற்றியையும், குடும்பத் தலைவன் மக்களுக்கு எடுத்துக்கூற வேண்டுமென்பது யூத சட்டம், ஆரம்பத்தில் வாய்ப்பாடமாகக் கூறிய விடுதலைநிகழ்ச்சி, பின் எழுதி வாசிக்கப்பட்டது. இவ்வாசகத்தின் நோக்கம் இறைவனின் அன்பையும், ஆற்றலையும் எடுத்துக் கூறி, மக்கள்

உள்ளத்தில் நன்றி உணர்ச்சியை எழுப்புவதே. இவ்வுணர்ச்சியை எழுப்பக்கூடிய நிகழ்ச்சிகள், வெவ்வேறு மரபுகளில் இருந்து தொகுக்கப்பட்டு, யாத்திராகமத்தில் தரப்பட்டிருக்கின்றன யாத்திராகமத்தின் முக்கிய கருத்துக்கள் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையும், சீனாய்மலையில் உடன்படிக்கை வழியாக இறைவன் இஸ்ராயேலரை, தன் சொந்த மக்களாக மாற்றிக்கொண்டதுமாகும். இந்நூலில் மூன்று பாரம்பரியங்கள் காணப்படுகின்றன. (பி. யெ. இ.) இஸ்ராயேல் விடுதலைப் போராட்டத்தின் கதாநாயகன் மோயீசன்: இவர்தான் இஸ்ராயேலரை ஒரு இனமாக, கடவுள் மக்களாக உருவாக்கியவர். இஸ்ராயேலருக்கு உயிரும் உற்சாகமும் அளித்தவர். அவர்களின் மதத்தலைவன், சட்டம் வகுத்தவர், நீதிபதி, வழிகாட்டி.

## மோயீசன் வரலாறு

எகிப்தில் யோசேப்பு அதிகாரியாக இருந்த காலத்தில் அங்கு ஹிக்கோஸ் என்ற வேற்று நாட்டவரே ஆட்சி செய்தனர். நாளடைவில் இவர்கள் ஆட்சி நலிவுற, எகிப்திய மக்கள் ஆட்சியைக் கைப்பற்றி, பாரோ மன்னர் பரம்பரை ஆட்சிக்கு வந்தது. அந்நிய நாட்டவரான இஸ்ராயேலரை வெறுத்து, அடிமைகளாக்கிக் கொடுமைப்படுத்தினர். நாட்டைக் காப்பதற்குக் கோட்டைகள் கட்ட இவர்களைப் பயன்படுத்தினர், இவர்கள் இனம் மேலும் பலுகாதிருக்க, இவர்களுக்குப் பிறக்கும் ஆண் குழந்தைகள் அனைத்தையும், ஆற்றில் எறிந்து கொல்லும்படி பார்வோன் அரசன் கட்டளையிட்டான்.

### பிறப்பும், வளர்ப்பும்

இச்சூழ்நிலையில் லேவி கோத்திரத்தில் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. தாய் இக்குழந்தையை மூன்று மாதம் வீட்டிலேயே மறைத்து வைத்து, வளர்த்து வந்தாள். பின்பு குழந்தையை ஒளித்து வைக்கமுடியாமல், ஒரு கூடையில் வைத்து ஆற்றுத்துறையில் வைத்தாள். ஆற்றில் நீராட வந்த பார்வோனின் மகள் குழந்தையைக் கண்டெடுத்தாள். தானே வளர்க்க ஆசைப்பட்டாள். இதைக் கவனித்துக் கொண்டிருந்த குழந்தையின் சகோதரி, பார்வோனின் மகளின் அனுமதியுடன், குழந்தையை வளர்த்துக் கொடுக்க ஓர் தாதிப் பெண்ணை, குழந்தையின் தாயை அழைத்து வந்தாள். இளவரசி அக்குழந்தையை வளர்த்துத்தரும்படியாக அத்தாதிப் பெண்ணிடம் ஒப்படைத்தாள். பாலப் பருவம் கடந்தபின் அக்குழந்தை இளவரசியிடம் ஒப்படைக்கப்பட்டு, அரண்மனையில் வளர்ந்து வந்தது. இளவரசி அக்குழந்தையைத் தண்ணீரில் எடுத்தபடியால், மோயீசன் எனப் பெயரிட்டாள். மோயீசன் பிறப்பும், வளர்ப்பும் அக்காலத்தில் மத்திய ஆசியாவில் வீரர்களுக்குரிய பிறப்பைப் பற்றிய பாரம்பரியங்களை ஒட்டியது.

மோயீசன் அரண்மனையில் வளர்ந்தாலும், தம் இனத்தவர்கள் படும் கஷ்டங்களை அவரால் சகிக்க முடியவில்லை. ஒருநாள் எகிப்தியன் ஒருவன் எபிரேயத் தொழிலாளி ஒருவனை அடித்துத் துன்புறுத்துவதைக் கண்டு வேதனையும் கோபமும் கொண்டு, அந்த எகிப்தியனைக் கொன்று, மண்ணில் புதைத்து விட்டார். இச்செய்தி பார்வோனுக்கு எட்டவே மோயீசனைக் கொல்ல வழி தேடினான். உடனே மோயீசன் அங்கிருந்து மதியானுக்கு ஓடிப்போனார். அங்கு அவர் ராகுவேல் என்ற யெத்றோவின் மகளாகிய செப்போறாளை மணந்து, அவருடைய மந்தைகளை மேய்த்து வந்தார். ஆண்டுகள் பல கழிந்தன. பார்வோன் அரசனும் இறந்தான். புதிய அரசன் ஆட்சிக்கு வந்தான். ஆனால் இஸ்ராயேலரின் கஷ்டத்துக்கு முடிவில்லை. அவர்கள் புலம்பலைக் கடவுள் கேட்டு, தாம் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களோடு செய்து கொண்ட உடன்படிக்கையை நினைவுகூர்ந்தார்.

### இறை அழைப்பு

மோயீசன் ஒரு நாள் ஓரேபு மலைப்பகுதியில் மந்தை மேய்த்துக்கொண்டிருக்கையில், கடவுள் எரியும் முட்செடி நடுவே காட்சி கொடுத்தார் (யாத். 3:1). நெருப்பு, பழைய ஏற்பாட்டில் கடவுள் வெளிப்பாட்டையும் அவர் சந்நிதானத்தையும் குறிக்கின்றது கடவுள் தம்மை ஆபிரகாமின் கடவுள் ஈசாக்கின் கடவுள், யாக்கோபின் கடவுள் என அறிமுகப்படுத்தி, இஸ்ராயேலர் மக்களை எகிப்திய அடிமைத்தனத்தினின்று மீட்க மோயீசனை அனுப்புவதாகக் கூறினார், தான் அப்பணிக்குத் தகுதியற்றவரென மோயீசன் கூறியபொழுது, தான் அவரோடு இருந்து, உதவி செய்வதாகக் கடவுள் கூறினார். தானே " என்றும் இருக்கும் இறைவன்" என அறிமுகப்படுத்தி. புதுமை செய்யும் வரத்தை அவருக்கு அளித்து, மோயீசனின் சகோதரன் ஆரோனையும் அவருக்குத் துணையாக அனுப்பினார். இறைவனின் அழைப்பையும், மோயீசனின் உளமாற்றத்தையும், அவர் தன் பணியை உணர்ந்து அதற்குத் தம்மை முழுவதும் அர்ப்பணித்து செயல்பட்டதையும் இச்சம்பவம் வழியாக ஆசிரியர் விபரிக்கின்றார். இறைவன் கட்டளைப்படி மோயீசன் எகிப்துக்குச் சென்றார்

### பார்வோனோடு வாதாடல்

பார்வோனின் அரண்மனையை அடைந்து, மோயீசன் அரசனிடம் இஸ்ராயேலரின் கடவுளாகிய ஆண்டவர் பாலைவனத்திலே தனக்குப் பலி செலுத்தத் தம் மக்களை அனுப்பும்படி கேட்கின்றார் என்று கூற, அதற்கு அரசன் மறுத்த

தால், ஆண்டவரின் ஆற்றலை அவன் அறியும்படி செய்ய பத்துக் கொள்ளை நோய்களை அடுத்தடுத்து வரச் செய்தார். 1. நைல் நீர் இரத்தமாக மாறுதல். 2. தவளைகள் பெருக்கம். 3. கொசுக்கள் கூட்டம் 4. ஈக்கள் 5. கால்நடைகளுக்கு வந்த நோய் 6. கொப்புளங்கள் 7. ஆலங்கட்டி மழை 8. வெட்டுக்கிளி 9. இருட்டு 10. தலைச்சன் பிள்ளைகள் கொல்லப்படுதல். தலைச்சன் பிள்ளைகள் கொல்லப்படுவதைத் தவிர ஏனையவையெல்லாம் இயற்கையாகவே எகிப்தில் நிகழக்கூடிய நிகழ்ச்சிகளாகும். ஆனாலும் முன்னறிவித்தலுடன் அடுத்தடுத்து நடந்த முறைகள். அவைகளின் அகோர விளைவு, யாவேயின் கரத்தைக் காட்டுகின்றன. ஆசிரியர் இந்த இயற்கைப் புதுமைகளை, பிற்கால மக்கள் மனதில் இறைவனின் செயலை ஆழமாகப் பதிக்க, மக்கள் மனதில் என்றும் சிந்திக்க அந்நிகழ்ச்சிகளைத் திரட்டி, நிரல்படுத்தி, மிகைப்படுத்தி, நாடகக் கவிதைப்போக்கில் எழுதி வைத்திருக்கின்றார். பல செயல்களைத் திரட்டி, நிரல்படுத்தி எழுதி, எப்படிப் படிப்படியாகப் பார்வோனின் மனம் மாறியதென்று காண்பிக்கிறார்.

| | கொள்ளை நோய் | விளைவு | கூறியது |
|---|---|---|---|
| 1.7:14 | நைல் நீர் இரத்தமானது | இதயம் கடினமாகியது | முதுகைத் திருப்பினான் |
| 2.8:5 | தவளைகள் பெருக்கம் | மனம் கடினமாகியது | பலி செலுத்த விடுவேன் |
| 3.8:16 | கொசுக்கள் கூட்டம் | இதயம் கடினமாகியது | செவி கொடுக்கவில்லை |
| 4.8:20 | ஈக்கள் கூட்டம் | மனக்கடினம் | இங்கே பலி செலுத்துங்கள். போக விடுவேன். ஆனால் அதிக தூரம் போக வேண்டாம் |
| 5.9:2 | மிருக கொள்ளை நோய் | மனக் கடினம் | போகவிடவில்லை. |
| 6 9:8 | கொப்புளங்கள் | மனக் கடினம் | செவிகொடுக்கவில்லை |
| 7.9:16 | கல் மழை | அதிக கடினம் | போக விடுவேன் |
| 8.10:1 | வெட்டுக் கிளிகள் | நெஞ்சு கடினமாயிற்று | போய்ப் பலியிடுங்கள். பெயரைச் சொல்லிவிட்டுப் போங்கள். நீங்கள் மட்டும் போங்கள் |

| | | | |
|---|---|---|---|
| 9:10:21 | காரிருள் | நெஞ்சு கடினமாயிற்று | நீங்கள் போங்கள் ஆடு, மாடு நிற்கட்டும். |
| 10.11;1 | தலைச்சன் பிளளைகள் கொல்லப் படுதல். | என்னை ஆசீர் வதித்து விட்டு விரைவாகப் போங்கள். | நீங்கள் போங்கள் ஆடு மாடுகளையும் கொண்டு போங்கள். |

## முதற் பாஸ்கா

கடைசிக் கொள்ளைநோயாகிய எகிப்தியரின் தலைச்சன் பிள்ளைகளும், கால்நடைகளின் முதல் ஈற்றும் கொல்லப்படுதலே இஸ்ராயேலரின் முடிவான விடுதலைக்குக் காரணம் (12:1). அதையொட்டி ஏற்படுத்தப்பட்ட பாஸ்கா விழா, இஸ்ராயேலர் வாழ்க்கையில் முக்கியமானதாகும். கடவுளின் கட்டளைப் படி இஸ்ராயேலர் ஒவ்வொரு வீட்டாரும் ஒரு குறிப்பிட்ட மாலைவேளையில் ஒரு ஆட்டுக் குட்டியைக் கொன்று அதன் இரத்தத்தை வீட்டின் நிலைக்கால் இரண்டிலும், மேல் சட்டத்திலும் பூசவேண்டும். ஆட்டுக்குட்டியை அடுப்பிலிட்டுச் சுட்டு, புளியாத அப்பத்துடனும் காட்டுக் கீரையுடனும் அன்றிரவு உண்ண வேண்டும். இடுப்பிலே கச்சை கட்டி, உண்ண வேண்டும் என்பது ஆண்டவரின் கட்டளை. அன்றிரவு தேவன் இரத்தக் குறி இருந்த வீடுகளைக் கடந்து சென்று மற்றைய எகிப்திய குடும்பங்களின் தலைச்சன் பிள்ளைகளை எல்லாம் கொன்றார். இஸ்ராயேல் வீட்டாரைத் தேவன் கடந்து சென்றமையால் அந்த நாளை அவர்கள் 'கடத்தல்' அல்லது 'பாஸ்கா' என நினைவு கொள்வர் பார்வோனுடைய தலைச்சன் பிள்ளையும் கொலையுண்டது. இதுவரை மனம்மாறாத பார்வோன் இஸ்ராயேலரை உடனே ஊரைவிட்டு அகலும்படி கேட்டுக்கொண்டான். (12:31) இஸ்ராயேலரின் அடிமைத்தளையை அறுத்த நிகழ்ச்சி இன்றும் பாஸ்கா விழாவாக முதலாம் மாதத்தின் ( நிசான் ) 14 ஆம் நாள் கொண்டாடப்படுகின்றது. இத்தினத்தில்தான் கிறிஸ்துவும் புதிய பாஸ்காவை, நாம் பாவத்தில் நின்று கடந்த விழாவை ஏற்படுத்தினார். முதலாம் பாஸ்கு நாளன்று தலைச்சன் பிள்ளைகளும், கால் நடைகளின் ஆண் ஈற்றும் ஆண்டவரால் காக்கப்பட்டபடியால் அவருக்கே சொந்தம். ஆகவே தலைச்சன் பிள்ளைகள் இறைவனுக்குக் காணிக்கையாக்கப்பட்டு, மீட்கப்பட வேண்டுமென்று ஆண்டவர் கட்டளையிட்டார்.

## விடுதலைப் பயணம்

எகிப்திலிருந்து வெளியேறிய இஸ்ராயேலரை இறைவனே வழிநடத்திச் சென்றார். இதை வலியுறுத்தவே

பகலில் மேகத் தூணும், இரவில் ஒளிப் பிழம்பும் அவர்கள் முன் சென்றதென ஆசிரியர் கூறுகின்றார். பார்வோன் அவர்களைப் போக அனுமதித்தாலும், அடிமை வேலைக்கு ஆட்கள் இல்லையே என்ற ஆத்திரத்தில் பெருஞ் சேனையுடன் அவர்களைப் பின்தொடர்ந்தான். முன்னால் செங்கடல், பின்னால் பார்வோனின் படைகள். இஸ்ராயேலர் அஞ்சி தங்களை அங்கு அழைத்து வந்த மோயீசனை ஏசித் திட்டினர். கடவுள் அவர்களைக் கைவிடவில்லை. (14:1) கடல் இரண்டாகப்பிரிநது வழிவிட்டது. முன்னிருந்த கருமேகம் பின்வந்து, இவர்களை எதிரிகளிடமிருந்து மறைத்தது. எகிப்தியர் இருட்டில் வழி தெரியாது தவிக்க, இஸ்ராயேலர் அக்கரையை அடைந்தார்கள். தொடர்ந்து எகிப்தியர் கடலிலிறங்க, பிரிந்திருந்த கடல் திரும்பவும் மூடவே அவர்கள் அழிந்து போயினர். இயற்கையை ஆண்டு நடத்தும் ஆண்டவர், கடல் வற்றும், பெருகும் இயற்கை நிகழ்ச்சியை இஸ்ராயேலருக்குச் சாதகமாகவும், எகிப்தியருக்குப் பாதகமாகவும் பயன்படுத்தினார் இந்நிகழ்ச்சியில் இறைவன் கரத்தைக் கண்ட இஸ்ராயேலர் அவருக்குத் துதி பாடினர்.

பயணம் தொடர்ந்து நடைபெற்றது. பஞ்சம் வந்தபோது, குடிக்கத் தண்ணீர் இல்லாத போதெல்லாம், இஸ்ராயேலர் மோயீசனைக் குறைகூறி முணுமுணுத்தனர். இறைவன் அவர்களுக்கு மன்னா அளித்தார். காடைகளின் இறைச்சியை அளித்து, பாறையினின்று நீரளித்து அவர்களைப் போஷித்து வழி நடத்தினார். இவைகளெல்லாம் சீனாய்மலையில் இயற்கையாய் நடைபெறும் சம்பவங்கள். ஆனால் ஆண்டவர் இவ்வியற்கைப் பொருட்களை அதிகமாகக் கொடுத்து அற்புதமாக உணவளித்தார். மன்னா என்பது அப்பகுதிகளில் இருந்து வடியும் ஒருவகைப் பிசின் உணவு. ஆபிரிக்காவிலிருந்து செங்கடலைத் தாண்டி, ஐரோப்பாவுக்குப் பறந்து போகும் காடைகள் அங்கு களைத்துத் தங்குவதுண்டு; இஸ்ராயேலர் இதில் புதுமையைக் கண்டார்கள்.

**சீனாய் உடன்படிக்கை**


இஸ்ராயேல் மக்கள் சீனாய் மலையை அடைந்து அங்கு தங்கினார்கள். சீனாய்மலையில் கடவுள் மோயீசனுக்கு காட்சி கொடுத்தார். கடவுள் இஸ்ராயேலர் தம் வாக்கை கேட்டு அதை அனுசரித்தால் அவர்கள் தன்னுடைய உடைமையாய் இருப்பார்கள் என்று சொன்னார். மோயீசன் இதை மக்களுக்குச் சொன்னபோது அவர்கள் ''ஆண்டவர் சொன்னவையெல்லாம் செய்வோம்'' என்றனர். பேரிடி, முழக்கம், கார்மேகக் கூட்டம், நெருப்புப் பொறி என்பன இறைவனது தோற்றத்தையும், வல்லமையையும் உணர்த்தும் இலக்கிய

மரபுகள். ஆணையிடல், காட்சி கொடுத்தல் என்பன இறைவனுடன் கொள்ளும் நெருங்கிய தொடர்பை, பக்தி பரவசத்தைக் குறிக்கும்.

இறைவன் மோயீசனுக்குப் பத்துக் கற்பனைகளையும் மற்றும் சமுதாயம் நல்ல முறையில் இயங்குவதற்குரிய ஒழுங்குகளையும் கொடுக்கின்றார். இதை மோயீசன் மக்களுக்கு எடுத்துக்கூற, அவர்கள். ''ஆண்டவர் சொன்னபடியெல்லாம் செய்வோமென்று'' வாக்களித்தார்கள். (24:3) அப்போது மோயீசன் ஒரு பகுதி இரத்தத்தை மக்கள்மேல் தெளித்தார் மற்றப் பகுதியைப் பலிபீடத்தின்மேல் ஊற்றினார் திரும்பவும் மோயீசன் மலைமேல் ஏறி, அங்கு நாற்பது இரவும், நாற்பது பகலும் தங்கினார். இறைவன் வாக்குறுதிப் பெட்டகம், ஆசாரக் கூடம், குருவின் உடைகள், பலி செய்யும் முறை பற்றி எடுத்துக்கூறி, பத்துக்கற்பனை எழுதப்பட்ட இரண்டு பலகைகளையும் கொடுத்தார்.

மோயீசன் மலையில் இருந்து இறங்கத் தாமதிக்கவே, இஸ்ராயேலர் தம்மை வழிநடத்திவந்த ஒரே கடவுளை மறந்து,

யாத்திராகம எண்ணாகமப் பயணங்கள்



வேற்றின மக்களுடன் தொடர்பு கொண்டு அவர்கள் கடவுளையும், வழிபாட்டு முறைகளையும் பின்பற்றத் தொடங்கினார்கள். ஆரோனைப் பயப்படுத்தி, பொற்கன்று ஒன்று செய்து வழிப்பட்டனர். மோயீசன் மலையில் இருந்து திரும்பி இறங்கி வருகையில் மக்கள் பொற்சிலையை வழிபடுவதைக் கண்டு கோபங்கொண்டு, தான் கொண்டு வந்த கற்பலகையால் கன்றை அடித்து நொறுக்கினார். அன்று 23 ஆயிரம்பேர் வாளுக்கு இரையாயினர். மோயீசன் திரும்பவும் மலைமீது ஏறி, மக்கள் பாவத்திற்காக மன்னிப்பு வேண்டித் திரும்பினார். மோயீசன் கடவுளின் முகத்தைக் காணவிரும்பினார். ஆண்டவர் ''ஒரு மனிதனும் என்னைக் கண்டபின் உயிரோடு இருக்க மாட்டான்'' என்று கூறித் தன் பின்பக்கத்தை மட்டும் காணும்படி செய்தார். (யாத். 33:18), மோயீசன் ஆண்டவர் கொடுத்த பத்துக்கற்பனைகளையும், மற்றும் ஒழுங்கு வழிபாட்டுச் சடங்குகளையும் மக்களுக்கு எடுத்துச் சொன்னார்.

எண்ணாகமப் பயணம்

மீண்டும் பயணம் தொடங்கியது. தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டபோது மக்கள் முறுமுறுத்தனர் மோயீசன் ஆண்டவரை வேண்டவே, ஆரோன் கோலால் கற்பாறையை அடிக்க நீர் சுரக்கும் என்றார் ஆண்டவர். மோயீசன் இருமுறை கோலால் கற்பாறையை அடித்தார் இது மோயீசனின் குறைந்த நம்பிக்கையைக் காட்டுகிறது. இந்த நம்பிக்கைக் குறைவைக் கடிந்து கொண்ட ஆண்டவர், ஆரோனும், மோயீசனும் வாக்களிக்கப்பட்ட நாட்டைத் தூரத்திலிருந்து பார்ப்பார்களே தவிர, அதில் நுழையார்கள் என்று கூறினார். அப்படியே வாக்களிக்கப்பட்ட நாட்டை அடையுமுன் இருவரும் இறந்தனர். (எண். 20: 7 13) மோயீசன் இறை மக்களுக்காகப் பல ஆண்டுகள் உழைத்தவர். தலைவரின்றி இம்மக்கள் தடுமாறுவார்கள் என அறிந்து, இறை ஆணைப்படி இளமையும், இறையருளும் நிறைந்த யோசுவாவைத் தலைவர் ஆக்கினார். இறைவன் மோயீசனை மோவாப் வெளியில் இருக்கும் நெபோ மலைக்கு அழைத்துச் சென்று வாக்களிக்கப்பட்ட நாடு முழுவதையும் காண்பித்தார். அங்கேயே மோயீசன் இறந்தார். (உபா. 34.)

முக்கிய குறிப்புகள் ; மோயீசன் காலத்தில் நடைபெற்ற மூன்று சரித்திர உண்மைகள் நமக்குத் தரப்பட்டிருக்கின்றன. 1. எகிப்திய அடிமைதனத்தில் இருந்து விடுதலை பெறுதல். 2. சீனாய் மலையில் இறைவன் தம்மை வெளிப்படுத்தி, உடன்படிக்கை செய்தல். 3. நாற்பது வரு

டங்களாக வனாந்திரந்தில் அலைந்து திரிதல். எகிப்திலிருந்து பெற்ற விடுதலை இஸ்ராயேல் மக்களை சுதந்திர மக்களாக்கியது. சீனாய் மலையின் உடன்படிக்கை அவர்களைத் தேர்ந்தெடுக்கப்பட்ட இனமாக்கியது. கடைசியாகக் கானான் தேசத்தை அடைந்தபோது பிதாப்பிதாக்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதி நிறைவேறியது. மோயீசனுடைய வாழ்விலும் இறைவனுடைய பராமரிப்பைக் காண்கின்றோம். 1· குழந்தையாக இருந்தபோது காப்பாற்றி எகிப்திய அரண்மனையில் பாலப் பருவம் தொடக்கம் வாலிபப்பருவம்வரை வாழச் செய்கின்றார். அங்கு மோயீசன் அரசருக்குரிய கலைகளைக் கற்று, போர் வித்தைகளிலும்,, அரசியல் முறைகளிலும், நிர்வாக முறைகளிலும் சட்டப்படிப்பிலும் பயிற்றப்பட்டு தெரிந்தெடுக்கப்பட்ட மக்களின் தலைவராக வழி செய்கின்றார். 2. பின்பு அங்கிருந்து ஓடிப்போய் யெத்திறோவின் ஆடுகளை மேய்த்த போது, இறைமக்களைக் கொண்டு சேர்க்க வேண்டிய இடத்திற்குச் செல்லும் வழியைக் கண்டடையச் செய்கின்றார். இயற்கையோடு ஒத்த வாழ்வுவாழ, நாடோடியாக அலைந்து திரியப் பழக்குகின்றார்; பாலைவன வாழ்வு இறைவனிலே முழுநம்பிக்கைகொள்ள உதவியாக அமைந்தது. 3. பார்வோனோடு தர்க்கிக்கையில் கடவுள் பராமரிப்பு அவருக்கு இருந்ததை, அவர் செய்த புதுமைகள் வழியாக ஆசிரியர் நமக்கு உணர்த்துகின்றார். 4. செங்கடல் ஊடாகச் செய்த பிரயாணத்திலும் கடவுளின் பராமரிப்பைக் காண்கின்றோம்.

செங்கடல் ஊடாக அவர்கள் செய்த விடுதலைப் பயணம் இஸ்ராயேல் வரலாற்றிலும். இரட்சணிய சரித்திரத்திலும் முக்கிய சம்பவமாக இருக்கின்றது. இறைவன் வாக்களித்த மீட்புக்கு முன்குறியாக இருக்கின்றது. இஸ்ராயேலரின் பாஸ்கா வரப்போகும் பாஸ்காவைச் சுட்டிக்காட்டுகின்றது. இவ்விடுதலை இஸ்ராயேலர் வாழ்வில் தனி இடம் பெறுகின்றது. இதை நினைவுகூர்ந்து விழா எடுத்து வருகின்றார்கள். பின்னைய விடுதலைகளையெல்லாம் இந்த விடுதலையோடு ஒப்பிட்டுப் பார்க்கிறார்கள். இயேசுவும் இவ்விடுதலைச் சம்பவம்பற்றி, மன்னா பற்றிப் பேசுகின்றார்.

## 8. நீதிபதிகள் காலம் கி. மு. 1300 - 1100 (யோசுவா, நீதிபதிகள்)

8, யோசுவா

மோயீசனுக்குப்பின் இஸ்ரயேலரை வழிநடத்திச் செல்ல இறைவனால் தெரிவுசெய்யப்பட்டவர் யோசுவா; (எண். 27:12). மோயீசனும் மக்கள் முன்னிலையில் அப்பொறுப்பை யோசுவாவுக்கு அளித்தார். இவரது முன்னைய பெயர் ஒசியா.

ஒரு மதத்தலைவர். பாலைவன யாத்திரையில் மோயீசனின் உற்ற நண்பனும், பக்கபலமுமாயிருந்தவர். சினாய்மலையில் மோயீசன் இறைவனோடு உரையாடுகையில் அண்மையில் நின்றவர். மோயீசன் இல்லாதவேளையில் உடன்படிக்கைக் கூடாரத்தைக் காவல் காத்தவர். மோயீசன் கட்டளைப்படி இஸ்ராயேலரின் எதிரியான அமலேசித்தரை அழித்தவர். (யாத். 17:8). இவர் தலைமையில் இஸ்ராயேலர் யோர்தான் நதியைக் கடந்து, வாக்களிக்கப்பட்ட கானான் தேசத்தை அடைந்தனர்.

யோர்தான் நதியைக் கடப்பதும், செங்கடலைக் கடந்தது போல, ஒரு புதுமையாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் சில காலங்களில் யோர்தான் நதியில் சில பகுதிகள் காய்ந்து இருப்பதை வரலாற்றில் காண்கின்றோம். (இஸ்ராயேலர் யோர்தானைக் கடக்கும்போதும், எதிரிகளை எதிர்த்துப் போராடும்பொழுதும் உடன்படிக்கைப் பெட்டி முன் சுமந்து செல்லப்பட்டது. இது இறைவன் தலைமைவகிப்பதைக் குறிக்கின்றது. (யோசுவா 2:1)

### வாக்களிக்கப்பட்ட நாட்டில் இஸ்ராயேலர்

யோர்தான் நதியைக் கடந்து வாக்களிக்கப்பட்ட கானான் தேசத்தை அடைந்தவுடன் மன்னா பொழிவது நின்றுவிட்டது கடவுள் கட்டளைப்படி கல்கலா என்ற இடத்தில் இஸ்ராயேலர் எல்லோரும் விருத்தசேதனம் செய்யப்பட்டார்கள். (யோசு. 5:2) அங்கு எரிக்கோவின் சமவெளியிலே பாஸ்கா விழாவைக் கொண்டாடினர் எரிக்கோ நகரம் அற்புதமான விதமாகக் கைப்பற்றப்பட்டது. (யோசு. 6:1) (யோசுவா திரும்பத்திரும்ப யாவேயின் உடன்படிக்கையை ஞாபகப்படுத்தி, பிரமாணிக்கமாய் இருக்கும்படி கேட்டுக் கொண்டார். யாவேக்கு அவர்கள் அமைந்து நடந்தபொழுது வெற்றியும், பணிய மறுத்தபொழுது தோல்வியும், தண்டனையும் கிடைத்தது) ஆயி நகரத்தையும் தந்திரமாகக் கைப்பற்றினர். (யோசு. 8:1) - யோசுவா இஸ்ராயேல் மக்களை வழிநடத்தி வந்த ஏழு ஆண்டுகளிலே கானான் நாடு முழுவதையும் மக்கள் தமது உடமையாக்கிக் கொண்டனர். யோசுவா உடன்படிக்கைக் கூடாரத்தைச் சீலோவில் அமைத்து, கடவுள் கட்டளைப்படி யாக்கோபு, பணித்தவாறு தாம் வெற்றி பெற்று அடைந்த நாட்டைப் (பன்னிரு பாகமாக்கி, சீட்டுப் போட்டு மக்களுக்கு வழங்கினார்.) (யோசு 18: 1). யோசேப்பின் கோத்திரமாகிய எப்ராயீம், மனாசே இருவருக்கும் ஒரு பகுதி வழங்கப்பட்டது. லேவி கோத்திரத்தாருக்கு நிலப் பகுதிக்குப் பதிலாக வசிக்க 42 நகர்கள் கிடைத்தன. ஏற்கனவே மோயீசன் ரூபன், காத், மனாசே என்பவர்களுக்கு யோர்தான

மறுகரையில் இடம் கொடுத்திருந்தார். மற்றவர்களுக்கு கானான் நாட்டில் இடம் கொடுக்கப்பட்டிருந்தது: இஸ்ராயேலர் சன நெருக்கடி இல்லாத மலைப்பிரதேசங்களில் குடியேறினார்கள். கனேயர் பள்ளத்தாக்குகளில் வசித்தனர். ஆகவே இஸ்ராயேலர் பிரிந்து பிரிந்து வாழ்ந்தனர். கடைசியாக யோசுவா இஸ்ராயேல் கோத்திரத்தாரை சிகேம் என்னுமிடத்தில் கூடி வரச்செய்து, ஆபிரகாம் காலம் முதல் இறைவன் செய்த அரிய செயல்களை எடுத்துக்கூறி, அக்கடவுளையே வழிபடும்படி கேட்டுக்கொண்டார். மக்களும் "நம் இறைவனாகிய ஆண்டவரையே சேவிப்போம், அவர் குரலுக்கே செவிசாய்ப்போம்" என்று முழக்கமிட்டனர். அன்றே யோசுவா சிகேமில் மக்களுடன் உடன்படிக்கை செய்து, பழைய உடன்படிக்கையைப் புதுப்பித்தார். பின் யோசுவா 110 வயதில் மரித்தார். (யோசு. 24: 1).

நீதிபதிகளின் பணி

மோயீசன் இறந்தபின் அவர் இடத்தை யோசுவா எடுத்து இஸ்ராயேலரை வழி நடத்தினார். யோசுவாவுக்குப்பின் இஸ்ராயேலருக்கு ஒரு தலைவர் இருக்கவில்லை. வெவ்வேறு பகுதிகளில் குடியேறியவர்கள் தனித்தனியே, சுதந்திரமாக வாழ ஆரம்பித்தார்கள். இவர்கள் பிரிந்து வாழ்ந்தபடியால் பல தடவைகளில் பகைவரின், அந்நியரின் தாக்குதல்களையும், ஆதிக்கத்தையும் எதிர்நோக்க வேண்டியிருந்தது. அவர்களைச் சுற்றி பள்ளத்தாக்குகளில் வாழ்ந்த கனேயருடன் நெருங்கிய தொடர்புகொள்ளவும் தொடங்கினர். நாடோடிகளான இஸ்ராயேலரிலும் பார்க்க கனேயர் கூடிய சீர்திருத்தமாக இருந்தபடியால், அவர்கள் வாழ்க்கை இஸ்ராயேலரைப் பாதித்தது. கமத்தொழில், கட்டிடக்கலை இவற்றில் மட்டுமல்ல, சமய விடயங்களிலும் தொடர்பு ஏற்பட்டு, அவர்கள் மறைக்கு ஆபத்து ஏற்பட்டது. தம் முன்னோரின் கடவுளை மறந்து, பிற தெய்வங்களை வணங்கவும் தொடங்கினார்கள். பிற இடங்களிலிருந்து இடம் தேடி வந்த நாடோடி மக்களிடமிருந்து அவர்களுக்கு அரசியல் ஆபத்தும் ஏற்பட்டது. ஆகவே அவர்கள் தம் மதத்தைக் காப்பாற்ற கனேயருடனும், நாட்டைக் காப்பாற்ற அந்நிய மக்களுடனும் போராட வேண்டியிருந்தது. இஸ்ராயேலர் தம் இறைவனுக்கும், உடன்படிக்கைக்கும் பிரமாணிக்கவீனமாய் இருந்தபடியால் தமது மக்களை வீழ்ச்சியடையவும், துன்பங்களில் சிக்கித்தவிக்கவும் விட்டுவிட்டார். இப்படிக் கஷ்டங்களை அனுபவித்த போது, இஸ்ராயேலர் தம் பிரமாணிக்கவீனத்தை உணர்ந்து தம் இறைவனிடம், திரும்பவும் கூக்குரலிட்டார்கள். இறைவனும் அவர்களுக்குக் காலத்துக்குக்காலம் தலைவர்களை அனுப்பி, அவ்வாபத்துக்களிலிருந்து அவர்களை விடுதலை செய்தார். தமது மக்களை விடுவிக்கத் தோற்றுவித்த தலைவர்கள்

நீதிபதிகள் என அழைக்கப்பட்டார்கள். அவர்கள் நீதி வழங்கியது மட்டுமல்ல, இஸ்ராயேலரை ஒன்று திரட்டி, பகைவர்களுக்கு எதிராகப் போர்தொடுத்து, மக்களை விடுதலையாக்கினர். அவர்கள் இஸ்ராயேலரின் மக்களாலே அல்லது இறைவனாலே தெரிந்தெடுக்கப்பட்டார்கள். இவர்கள் தற்காலிக தலைவர்களாக இருந்து, ஆபத்து நீங்கியவுடன் தங்கள் சாதாரண வாழ்க்கையில் ஈடுபடுவார்கள். ஒரே நேரத்தில் வெவ்வேறு பகுதிகளில் வெவ்வேறு நீதிபதிகள் வாழ்ந்தார்கள். சிலர் ஒரு சில கோத்திரங்களை ஒன்று சேர்த்துப் போராடினார்கள். ஆனால் எல்லாரையும் ஒன்றுசேர்க்க முடியவில்லை. நீதிபதிகளாகமத்தில் நாம் 6 பெரிய நீதிபதிகளினதும், 6 சிறிய நீதிபதிகளினதும் வரலாற்றைக் காண்கிறோம். அவர்களது வரலாற்றில் காணப்படும் பொது அமைப்பு வரலாற்றையும் போதனா முறையாகக் காண்பிக்கின்றது. (நீதி. 2: 10)

1. இஸ்ராயேலர் தம் உடன்படிக்கையை மறந்து, பிரமாணிக்கமில்லாமல் வாழ ஆரம்பிக்கிறார்கள்.
2. அந்நிய தெய்வங்களை வழிபடுகிறார்கள்.
3. யாவே கோபங் கொள்கின்றார்.
4. அந்நியர் அவர்களை ஆள அனுமதிக்கின்றார்.
5. இஸ்ராயேலர் யாவேயிடம் திரும்பிக் கூக்குரல் இடுகின்றார்கள்.
6. யாவே இரக்கம் கொண்டு ஒரு நீதிபதியை அனுப்பி அவர்களை விடுவிக்கின்றார்.
7. நீதிபதி அவர்களை விடுவித்து சிறிதுகாலம் ஆளுகின்றார். அவர் இறந்தபின் பழையபடி அவர்கள் கடவுளை மறக்கின்றனர்.

## முக்கிய நீதிபதிகள்

1. **ஒத்தோனியல்:** (நீதி. 3: 54) இஸ்ராயேலர் தம்மைச் சுற்றி வாழ்ந்த கனனேயர், ஏத்தையர், அமோனியர் போன்றவர்களோடு கலந்து வாழ்ந்து, அவர்களின் பெண்களைத் தங்கள் மனைவிகளாகவும், தம் பெண்களை அவர்களுக்கு மனைவிகளாகக் கொடுத்தும், அவர்கள் தெய்வங்களை (பாலாலிம், அஸ்த்தரோத்) வழிபட்டும் வந்தனர். ஆண்டவர் கோபம் கொண்டு, மெசெபொத்தேமியா அரசன் கூரான் ரசாத்தாயிம் என்பவனிடம் அவர்களைக் கையளிக்கவே, அவனுக்கு அடிமைகளாக எட்டு ஆண்டுகள் வாழ்ந்து கஷ்டப்பட்டார்கள். பின்பு ஆண்டவரைப் பார்த்து மன்றாட, அவர் செனசின் மகனான ஒத்தோனியல் என்பவரைத் தெரிந்தெடுத்து, அவ்வரசனை முறியடித்து, மக்களை மீட்டார்.

2. **தெபொறா:** (நீதி. 4. 1) மீண்டும் கடவுளை மறந்து, பாவங்கள் செய்த இஸ்ராயேலரை இறைவன் கானான் நாட்டு அரசன் ஜாபீனிடம் கையளித்தார்.

அவன் 25 வருடங்களாக அவர்களை வதைத்தான். இஸ்ராயேலர் கடவுளை நோக்கிக் கூக்குரலிடவே, அவர் இலாப்பித்தோத்தின் மனைவி தெபோறா வழியாக அவர்களை மீட்டார். தெபோறா நெப்தலியைச் சேர்ந்த அபினோயலின் மகன் பாராக் வழியாக சாபுலோனையும், நெப்தலியையும் வரவழைத்து, தாபோர் மலையடியில் கானான் நாட்டு வீரர்களைத் தோற்கடித்து, இஸ்ராயேலரை மீட்டாள். கினேயனான ஆபேரின் மனைவி தாகேலின் வழியாக கனனேய சேனைத் தலைவனான சிசாரோவைக் கொன்றாள்.

3. கெதயோன்: (நீதி. 6: 1) பாவம்புரிந்த இஸ்ராயேலரை இறைவன் மதியானியர் கையில் ஒப்படைத்தார். அவர்கள் ஏழாண்டு அடிமைகளாயிருந்தனர். அவர்கள் மன்றாடியபோது, இறைவன் யோவாசின் மகன் கெதயோனை அனுப்பி அவர்களை விடுவித்தார். கெதயோன் முன்னூறு பேருடன் தந்திரமாக மதியானியரை விரட்டி அடித்தான். மக்கள் கெதயோனை அரசனாக்க முயற்சித்தனர். அவன் 'ஆண்டவரே உங்களை ஆளட்டும்' என்று கூறி மறுத்துவிட்டான். பின்னர் போரிலே கொள்ளையிட்ட கடுக்கன்களை எல்லாம் சேர்த்து, எபோத் என்னும் விக்கிரகத்தைச் செய்து வழிபட்டான்.

4. அபிமெலெக்: (நீதி. 9: 1) இவன் கெதயோனுக்கு வைப்பாட்டி வழியாகப் பிறந்த மகன். மற்ற சகோதரர்களைக் கொன்று, தான் அரசனாக விரும்பினான். தன் சகோதரர்களைக் கொன்ற குற்றத்திற்காக, கடைசியாக ஒரு பெண்ணினால் கொல்லப்பட்டான்.

5. ஜெப்தே: (நீதி. 10: 6) இஸ்ராயேலர் கடவுளை மறந்து, பாவாலையும், மோவாய், அமோனிய பிலிஸ்தியரின் தெய்வங்களையும் வழிபட்டபோது, இறைவன் அவர்களைப் பிலிஸ்தியருக்குக் கையளித்தார். அவர்களுக்குப் பதினெட்டு ஆண்டுகள் அடிமைகளாக இருந்தனர். இறுதியில் கடவுளிடம் திரும்பிக் கூக்குரலிட்ட பொழுது, கடவுள் ஜெப்தே வழியாக அவர்களைக் காப்பாற்றினார். அவன் சகோதரர்கள் அவனை விரட்டிவிட, அவன் ஓடிச்சென்று ஒரு கொள்ளைக்கூட்டத்தின் தலைவனாக இருந்தான். கஷ்டம் வந்தபோது, இவனை அழைத்து வந்து எதிரிகளை எதிர்த்துப் போராட, இவனைத் தங்கள் தலைவனாக்கினர். அவன் ஆமோனியரைத் தோற்கடித்து மக்களை மீட்டான். ஆனால் கடவுளுக்குக் கொடுத்த வாக்குறுதியின்படி, தன் ஒரே மகளைப் பலிகொடுத்தான்.

6. சாம்சோன்: (நீதி 13: 16) பாவம் செய்த இஸ்ராயேலரை இறைவன் பிலிஸ்தியரிடம் 40 ஆண்டுகள் ஒப்படைத்தார். தான் கோத்திரத்தைச் சேர்ந்த

மனுவேல் என்பனுக்கு மலடியாக இருந்த மனைவி வழியாக, ஒரு குழந்தை பிறந்தது. ஆண்டவரின் தூதரால் மதுபானம் பருகாமலும், அசுத்த உணவு உண்ணாமலும் அந்தக் குழந்தையை வளர்க்கும்படி தாய் பணிக்கப்பட்டாள். குழந்தையின் தலைமயிரை வெட்டவேண்டாம் எனவும் கட்டளையிட்டார். குழந்தை சாம்சோன் வளர்ந்து பெரியவனாகி, தாவிலா என்ற பிலிஸ்தியப் பெண்ணை மணந்தான். அவனுக்குச் சிங்கத்தைக் கொல்லக்கூடிய சக்தியிருந்தது அவனது பெரும் சக்திக்குக் காரணம், அவன் நீண்ட தலைமயிர், அவன் மனைவி வழியாக இவ்விரகசியத்தை அறிந்த பிலிஸ்தியர், அவன் தூங்கும் போது அவன் மயிரை வெட்டிவிட்டனர். அவன் தூக்கத்தினின்று விழித்தவுடன் பிலிஸ்தியரால் கைதுசெய்யப்பட்டான். தன் பிழையை உணர்ந்து மன்றாடி, இறைவன் அருளால் தான் இருந்த மண்டபத்தை உடையச்செய்து, வேடிக்கை பார்க்க அங்கிருந்த எத்தனையோ ஆயிரம் மக்களைக் கொன்று, தானும் மடிந்தான்.

## (9) அரசர் காலம் *(கி.மு. 1030 — 586, சாமுவேல் 1—11; அர. 1—11)*

தேவையான காலங்களில் பல நீதிபதிகள் தோன்றி இஸ்ராயேலரை எதிரிகளிடமிருந்து விடுவித்தாலும், அது மக்களுக்குத் திருப்தியை அளிக்கவில்லை. ஏனெனில் அவர்களால் எதிரிடைக்காலங்களில் உடனடியாகச் செயற்பட முடியவில்லை. நீதிபதிகள் செயற்பட அதிககாலம் எடுத்தது. இஸ்ராயேலர் எல்லாரையும் ஒன்று சேர்த்து, உடனடியாகச் செயற்பட தங்களுக்கு ஓர் அரசன் வேண்டுமென்ற எண்ணம் அவர்கள் மத்தியில் பல ஆண்டுகளாக இருந்து வந்தது. அவர்களைச் சுற்றி வாழ்ந்த ஏனைய மக்களுக்கு அரசர்கள் இருந்தபடியால், அவர்களைப்போல தங்களுக்கும் ஒரு நிரந்தர அரசன் இருக்கவேண்டுமென்ற ஆசை நாளுக்கு நாள் வளர்ந்தது நீதிபதி காலத்தின் முடிவில் (1060 நிலைமை மோசமானது. ஏறக்குறைய இஸ்ராயேலர் பலஸ்தீனாவில் குடியேறிய நாட்களில், பிலிஸ்தியரும் அந்நாட்டில் பிரவேசித்து மேற்குக் கடலோரமாகக் குடியேறினர். ஆரம்பத்தில் எல்லோரும் தாங்கள் குடியேறிய இடங்களைத் தாபிப்பதில் ஆர்வமாய் இருந்தபடியால் பிரச்சினை இருக்கவில்லை. ஆனால் சில காலத்திற்குப் பின், பிலிஸ்தியர் தம் இடத்தை கிழக்கை நோக்கியும், வடக்கை நோக்கியும் விஸ்தரிக்கத் தொடங்கினார்கள். பிலிஸ்தியர் தொகையில் குறைந்தவர்களாகவிருந்தாலும், இஸ்ராயேலரிலும் பார்க்க சீர்திருத்தம் அடைந்திருந்தார்கள். இரும்பு ஆயுதங்களும், குதிரை வண்டிகளும் அவர்களிடம் இருந்தன. இஸ்ராயேலர் மலையில் வாழ்ந்தபடியால் பிலிஸ்தியருக்கு அவர்களைத் தாக்குதல் கஷ்ட

மாக இருந்தது. ஆகவே அவர்கள் வடக்கில் செழிப்பான எஸ்திரலோன் பள்ளத்தாக்கையும், தெற்கில் செய்பால பள்ளத்தாக்கையும் சுதந்தரித்து, இஸ்ராயேலரின் ஒற்றுமையைப் பிரித்தார்கள்.

சாமுவேல்: கடைசி நீதிபதி

இக்காலத்தில் சீலோ ஆலயத்தில் தலைமைக் குருக்கள் நீதிபதிகளாக நியமனம் பெற்றனர். இப்பதவி குருக்களின் பரம்பரைச் சொத்தாக மாறியது. தலைமைக் குரு ஏலி நீதிபதியாகவிருந்த காலத்தில், அவர் மக்கள் இருவரும் அவருக்கு உதவியாக இருந்தனர். இக்காலத்தில் இறையருளால் எபிராயீம் கோத்திரத்தாராகிய ஒல்கானாவுக்கு, மலடியாக இருந்த அவன் மனைவி அன்னா வழியாக சாமுவேல் பிறந்தார். இறையருளால் பிறந்தபடியால் தாய் 8 வயதிலே இறைவன் சேவைக்காக சாமுவேலை ஏலியிடம் ஆலயத்தில் ஒப்படைத்தாள். ஏலியின் பிள்ளைகள் இறைவனுக்குப் பிரியமில்லாமல் வாழ்ந்தார்கள். (1 சாமு. 2:12 – 22), பிலிஸ்தியர் இஸ்ராயேலருக்கு எதிராகத் தொடுத்த போரிலே ஏலியும் அவரது இரு பிள்ளைகளும் மடிந்தனர். உடன்படிக்கைப் பேழையும் பிலிஸ்தியரால் கைப்பற்றப்பட்டது. அதைத் தொடர்ந்து சாமுவேல் நீதிபதியாக நியமனம் பெற்றார். அவரே கடைசி நீதிபதியும், முதல் இறைவாக்கினராகவும் இருந்தார். உடன்படிக்கைப் பேழை அவர்கள் மத்தியில் இருக்கும்வரை ஆண்டவர் அவர்களைக் கஷ்டப்படுத்தியதைக் கண்ட பிலிஸ்தியர், அதைத் திருப்பி அனுப்பி விட்டனர் சாமுவேல் இஸ்ராயேல் மக்கள் மத்தியில் இருந்த அந்நிய தெய்வங்களை அகற்றி, யாவேயின் மறையை சுத்திகரித்து தாபித்தார் அப்போது இஸ்ராயேலர் போர் தொடுத்து பிலிஸ்தியரை முறியடித்து விரட்டினார்கள். சாமுவேலின் காலத்தில், யாவேயின் உதவி இஸ்ராயேலருக்கு இருந்தது.

முதல் அரசன்

அவர் முதியவரானபொழுது தம் புதல்வர்களை நீதிபதிகளாக நியமித்தார். அவர்கள் பண ஆசை கொண்டு, லஞ்சம் பெற்று, நியாயத்தைத் திரித்துக்கூறி வழிநடத்தினார்கள். அப்போது இஸ்ராயேலர். ஒன்று கூடி மற்றநாடுகளுக்கு இருப்பது போல் தங்களுக்கு ஓர் அரசன் வேண்டுமெனக் கேட்டார்கள். (சாமு. 8:3,5) இது சாமுவேலுக்குப் பிடிக்கவில்லை. ஏனெனில் இது அவர்கள் பரம்பரை வழக்கத்திற்கு முரணாக இருந்தது. மேலும் கடவுள் ஒருவரே மக்களின் அரசன், தலைவர் என்ற கொள்கைக்கும் மாறுபட்டதாக இருந்தது இஸ்ராயேலர் நம்பி வந்த கடவுளாட்சிக்குப் பதிலாக முடியாட்சியளிக்க விரும்பவில்லை. (1 சாமு. 8: 6) ஏனெனில் இது கடவுளையே புறக்

கணிப்பதாக இருந்தது. ஆனால் இஸ்ராயேலர் வற்புறுத்தவே, கடவுள் கட்டளைப்படி பெஞ்சமின் கோத்திரத்தைச் சேர்ந்த சவுலை அரசனாக அபிசேகம் பண்ணி அவர்களுக்குக் கொடுத்தார். (1 சாமு. 10:14, 17). அரசர்களை ஏற்படுத்தினாலும் அவர்களுக்கு யூதமதத்தில் உரிய இடம் இருக்கவில்லை. அவர்கள் யாவேக்குப் பணிந்து அவரது இளவரசர்களாகப், பிரதிநிதி. களாக இருந்தார்கள். இஸ்ராயேலரின் ஒரு பகுதி அரசர்களை விரும்பவில்லை. ஆகையால் சவுல் ஒரு பகுதியினருக்கே அரச னாக இருந்தான். அவனைத் தொடர்ந்து வந்த தாவீது முழு இஸ்ராயேல் குலத்திற்கும் அரசனாக இருந்தான்.

சவுல்: இஸ்ராயேலரின் முதல் அரசனாகிய சவுலின் வாழ்வு ஒரு தோல்வியாகவிருந்து. இவர் பெஞ்சமின் கோத் திரத்தைச் சேர்ந்த கீஸ் என்பவரின் மகன். இவன் சிறந்தவன், நல்லவன். அழகுள்ளவன். மிகுந்த உயரமானவன். மக்கள் அவனை நேசித்தார்கள். தாவீதுகூட தன் எதிரியான சவுலைப் புகழ்ந்து பாடியிருக்கின்றார். (2 சாமு 1: 17). அவன் பிலிஸ்தி யரையும் அமலேக்கியரையும் மற்றும் சிலரையும் தோற்கடித் தான். ஆனால் காலம் செல்ல இறைவாக்கினரான சாமுவேலுக்கு அமைய மறுத்தான். இருதரம் அவரின் கட்டளையை மீறிய தைப் படிக்கின்றோம்.

1. 1 சாமு 13; 5: போருக்குப் பிற்பாடு சவுல் சாமுவேலுக்காகக் காத்திராமல், தானே பலி ஒப்புக் கொடுத்து சாமுவேலின் கோபத்துக்கு ஆளானான்.

2. 1 சாமு. 15:1: அமலேக்கியரைத் தோற்கடித்த பின் அமலேக்கிய அரசலை ஆ·ாரையும், நல்ல பொருள்களையும் பாதுகாத்து, கடவுள் கட்டளையை மீறி, அவற்றுள் சில பொருட்களையும் எடுத்துச் சென்று சாமுவேலின் கோபத்திற்கு ஆளானான். ஆகையால் இறைவன் அவரைச் சபித்து, அரசை வேறு குடும்பத்துக்குக் கொடுக்கப்போவதாக அறிவித்தார். அன்று தொடக்கம் சவுல் மனதில் கவலையும், பயமும் குடிகொண்டது. கடவுள் கட்டளைப்படி சவுலின் இடமாக சாமுவேல் பெத்தலகேமைச்சேர்ந்த இசாயின் மகனான சிறுவன் தாவீதை அரசனாக அபிஷேகம் செய்தார்: ஆண்டவரின் ஆவி சவுலை விட்டு நீங்கி, தாவீதின்மேல் இறங்கியது. சவுலின் கவலையைப் போக்க, சங்கீதம் பாடி அவனைத் தேற்ற தாவீது அழைக்கப்பட்டார்.

திரும்பவும் பிலிஸ்தியர் இஸ்ராயேலருக்கு எதிராகப் போர் தொடுத்தார்கள்: பிலிஸ்தியப்படையின் தலைவனாகிய அரக்கன் கோலியாத்தைக் கண்டு சவுலின் படைகள் அஞ்ச, அவனை எதிர்த்துப் போராட எவரும் முன்வரவில்லை. பாசறையி லிருந்த தன் சகோதரர்களைப் பார்க்க வந்த சிறுவன் தாவீது,

சவுலின் அனுமதியுடன் கோலியாத்தை எதிர்த்துப் போராட முன்வந்தார். (1 சாமு 17:38). இஸ்ராயேலின் கடவுளில் நம்பிக்கையுடன் சென்ற தாவீது, தன் கவணின் உதவியால் ஆயுதம் தாங்கிய கோலியாத்தை விழுத்திக் கொன்று, பிலிஸ்தியரை விரட்டியடித்தான். ஆகவே சவுல் தாவீதைத் தன் போர்வீரர்களின் தலைவனாகத் தன்னுடன் வைத்துக் கொண்டார். தாவீதுக்கும் சவுலின் மகன் யோனதாசுக்கும் நட்பு ஏற்பட்டு, இருவரும் உடன்படிக்கை செய்து கொண்டனர். பிலிஸ்தியரை முறியடித்த பின் தாவீது சவுலிடம் திரும்பிவருகையில், நகர்களிலிருந்த பெண்கள் எல்லோரும் ஒன்று கூடி சவுலை எதிர்கொண்டு ''சவுல் கொன்றது ஆயிரம் பேர், தாவீது கொன்றதோ பத்தாயிரம் பேர்'' என்று ஆடிப் பாடினர். இது சவுலுக்குப் பிடிக்கவில்லை. ஆகவே சவுல் தாவீதின்மேல் எச்சரிக்கையாயிருந்து, அவனைக் கொல்ல சதி செய்தான். தனது மகள் மிக்கேலை அவனுக்கு மணம் செய்து வைத்து, அவனை ஈட்டியால் குத்திக் கொலைசெய்யப் பலமுறை எத்தனித்தான. ஆனால் தாவீது யோனதாசின் உதவியுடனும், மிக்கேலின் உதவியுடனும் தப்பி ராமாத்தாவுக்கு ஓடிபபோனார் சவுல் அங்கேயும் அவரைப் பின்தொடர்ந்து செல்லவே தாவீது, நோபே ஊரிலுள்ள குரு அக்கிமெலேக்கிடம் ஓடினார் அவரும் குருக்கள் மாத்திரம் உண்ணும் பரிசுத்த அப்பத்தை அவருக்குக் கொடுத்து அவரின் பசியை ஆற்றினார். (1 சாமு. 21.1). தாவீதை ஆதரித்ததற்காக சவுல் அக்கிமெலேக்கின் 80 குருக்களைக் கொன்றான். (1 சாமு 24:1) சவுல் தாவீதைக் கொல்லப் பின்தொடர்ந்தபோது கடவுள் சவுலை எங்காதி பாலைவனத்தில் தாவீதிடம் ஒப்படைத்தபோது, ஆண்டவரால் அபிஷேகம் செய்யப்பட்டவரைக் கொலை செய்ய தாவீது மறுத்துவிட்டார். இதையறிந்த சவுல் மனம் வருந்தினாலும், திரும்பவும் தாவீதைக் கொல்லத் தேடினான். எனவே தாவீது ஓடிப் பிலிஸ்தியரிடம் தஞ்சம் புகுந்து, சிகேலேக் நகரில் தங்கியிருந்தான. சாமுவேல் இறந்து ராமாத்தாவில அடக்கம் செய்யப்பட்டார்.

### சவுலின் மரணம்

பிலிஸ்தியர் திரும்பவும் இஸ்ராயேலருடன் போர் தொடுத்தனர் இதில் சவுலின் மக்கள் மூவரும் கொல்லப்பட்டனர். சவுலும் படு காயம் அடைந்தான். ஆனால் பிலிஸ்தியரால் கொல்லப்பட விரும்பாமல் தானே தற்கொலை செய்துகொண்டார். (1 சாமு. 31: 1) இதைக் கேள்விப்பட்ட தாவீது துக்கம் கொண்டாடி, சவுலைப் புகழ்ந்து பாடினார். (2 சாமு. 1: 17).

சவுல் இறந்ததற்குப்பின், தாவீது கடவுள் திருவுளப்படி யூகாவிலுள்ள எபிரோனுக்கு வந்து, அங்கு மக்களால் யூதா வம்சத்திற்கு அரசனாக அபிஷேகம் செய்யப்பட்டார். சவுலின்

மகனாகிய இசுபோசேத் மற்ற 11 கோத்திரங்களின் அரசனாக யோர்தான் மறுகரையில் உள்ள மகனெயிமிலிருந்து ஆண்டான். சவுலின் குடும்பத்தாருக்கும் தாவீதின குடும்பத்தாருக்கும் இடையில் நெடுநாள் போர் இருந்தது. தாவீது எபிரோனிலிருந்து யூதாவை மட்டும் 7 ஆண்டுகள் ஆண்டார். (1012 — 1005) இசபோசேத் இஸ்ராயேலை 2 ஆண்டுகள் ஆண்டான். தாவீது முன்னேறி மென்மேலும் வலிமைமிக்கவரானார். இறுதியில் இசபோசேத் கொலை செய்யப்பட்டு, இஸ்ராயேல் கோத்திரங்களெல்லாம் தாவீதைத் தங்கள் அரசனாக ஏற்றுக்கொண்டனர். (1005) (2 சாமு. 5:1).

## 9. ஒரு அரசு (1005 — 930) காலம்

தாவீது: பெத்தலேகேம் யூதாவைச் சேர்ந்த இசாயின் கடைசி மகன். இவர் முப்பது வயதில் அரசனாகி 40 வருடங்கள் ஆட்சி புரிந்தார். 7 ஆண்டுகள் யூதாவையும், 33 ஆண்டுகள் இஸ்ராயேல் முழுவதையும் ஆண்டார், 972 இல் இறந்தார். இவர் வாழ்வில் மூன்று முக்கிய சாதனைகளைக் காண்கிறோம்.

1. யெருசலேமைக் கைப்பற்றி, அங்கு தன் அரசை நிறுவுதல்:

கானான் தேசம் இஸ்ராயேல் மத்தியில் பிரிக்கப்பட்டபோது, யெருசலேம் ஒருவருக்கும் கொடுக்கப்படவில்லை. இது எபூசேயர் கைவசமிருந்தது. இதை தாவீது கைப்பற்றி, இங்கு குடியமர்ந்து, சுற்றிவர அரண்எழுப்பி தன் அரண்மனையைக் கட்டினார். அவர் வடக்குக்கும், தெற்கிற்கும் அரசனாக இருந்தபடியால் இரு பகுதிகளும் புறம்பான நடுவிலிருக்கும் யெருசலேமிலே இருக்க விரும்பினார். இதையே இஸ்ராயேலரின் அரசியல் சமய தலைநகரமாக்கினார். பின்பு உடன்படிக்கைப் பெட்டியை மரியாதையுடன் அங்கு கொண்டுவந்து, உடன்படிக்கைக் கூடாரத்தில் வைத்தார். யெருசலேம் தாவீது நகரமென அழைக்கப்படும்.

2. இஸ்ராயேலின் பன்னிரண்டு கோத்திரத்தையும் சேர்த்தது:

இஸ்ராயேலரின் பன்னிரண்டு கோத்திரத்தையும் சேர்த்து, ஒரு தனி அரசை நிறுவிய பெருமை தாவீதுக்கே உரியது. பிலிஸ்தியரைக் கடல் ஓரத்திற்கு விரட்டினார். (2 சாமு 5:22). மேலும் மோவாபியர், சீரியர் அமோனியர், அமலேக்கியர் எல்லோரையும் தோற்கடித்து. முழு இஸ்ராயேல் மேலுய அரசனானார். யெருசலேம் வரிகள் வசூலிப்பு வழியாக செல்வத்திலும் சொத்திலும் ஓங்கி வளர்ந்தது.

3. தாவீதின் குடும்ப வாழ்க்கை மெச்சத்தக்கதல்ல: இஸ்ராயேலிய அரசைத் தாபித்தபின் பல மனைவிகளையும், வைப்பாட்டிகளையும் சேர்த்துக்கொண்டார். இவர்கள் வழியாகப் பல பிள்ளைகள் பிறந்து,அவருக்கு மிகவும் கஷ்டத்தைக் கொடுத்தனர். மனைவியருக்கும் பிள்ளைகளுக்குமிடையில் சண்டைகள் ஏற்பட்டன, (2 சாமு. 5:13; 2 சாமு.3:2): சிறப்பாகத் தாவீது ஊரியாசின் மனைவி பெத்சாபே மேல் மோகம் கொண்டு, ஊரியாசைத் தந்திரமாகக் கொலைசெய்து, அவளைத் தன் மனைவியாக எடுத்துக்கொள்கின்றார். இறைவாக்கினர் நாத்தான் அவரை எச்சரிக்கின்றார். (2 சாமு. 11: 1). அவன் மக்களும் துன்மாதிரிகையாக நடந்தனர் (2 சாமு. 13: 1). தாவீது ஒரு தகுதியற்ற குடும்பத் தலைவனாகக் காணப்படுகின்றார்.

தாவீது இஸ்ராயேல் மக்களின் எண்ணிக்கையைக் கணக்கிட்டு, இறைவன் கோபத்துக்கும், தண்டனைக்கும், கொள்ளைநோய்க்கும் ஆளாகிறார். (2 சாமு. 24:1). இருந்தும் தாவீது இஸ்ராயேல் அரசருக்கெல்லாம் மாதிரிகையாகவும், முதன்மையானவராகவும் இருந்தார். ஏனெனில் அவருக்குப் பின் வந்த அரசர்கள் நல்லவர்களாக இருக்கவில்லை. அவர்தான் இஸ்ராயேலரின் வழிபாட்டு முறைகளை அமைத்தவராகவும் சங்கீதங்களின் ஆசிரியராகவும் கருதப்படுகின்றார். யெருசலேம் ஆலயத்தைக் கட்டவிரும்பினாலும், சலமோன்தான் அதைக் கட்டுவான் என கடவுள் பணித்தார். கடவுள் தாவீதுக்குத்தான் மெசியாவைப் பற்றிய வாக்குறுதியைக் கொடுத்தார். (2 சாமு. 7:12-16):

## தாவீதின் வாழ்வில் நம்மைக் கவரும் சம்பவங்கள்

இஸ்ராயேலரின் அரசர்களுக்கெல்லாம் மாதிரிகையாக, ஒரு மேல் வரிச் சட்டமாக திகழ்பவர் தாவீது அரசன். இவருடைய வாழ்க்கையில் நம் உள்ளத்தைக் கவரும பல சம்பவங்களைக் காண்கிறோம்.

(1) இஸ்ராயேலரின் வரலாற்றில் ஒரு கட்டத்தில, பிலிஸ்தியர் இஸ்ராயேலருக்கு எதிராகப் போர் தொடுத்தார்கள். பிலிஸ்திய படைகளின் தலைவனாகிய கோலியாத் ஒரு அரக்கன். பயங்கர தோற்றமுடையவன். அவன் தினமும் அதிகாலையில் தன் பாசறைக்கு வெளியே வந்து இஸ்ராயேலரின் படைக்குச் சவால் விடுவான். ''உங்களுள் ஒருவனைத் தேர்ந்துகொள்ளுங்கள். அவன் என்னுடன் தனியே சண்டை செய்ய வரட்டும்.

அவன் என்னைக் கொன்றால் நாங்கள் உங்களுக்கு அடிமைகளாய் இருப்போம். நான் அவனைக் கொன்றுவிட்டால் நீங்கள் எங்களுக்கு அடிமைகளாவீர்கள்''. ஆயுதபாணியாகக் காட்சி கொடுத்து, சவால் விட்ட கோலியாத்தைக் கண்டு. இஸ்ராயேலரின் அரசன் சவுலின் படைகள் அஞ்சி, அவனை எதிர்த்துப் போராட முன்வரவில்லை. பாசறையிலிருந்த தன் சகோதரரைப் பார்க்க வந்த சிறுவன் தாவீது, கோலியாத்தின் சவாலைக்கேட்டு, வெகுண்டெழுந்து, சவுலின் அனுமதியுடன், கோலியாத்துடன் போராட முன்வந்தான். ஈட்டி, வாள், கவசத்துடன், ஆயுதபாணியாக வந்த அரக்கன் கோலியாத்தை எதிர்த்துப் போராட சிறுவன் தாவீது தன் கவணையும், ஐந்து கூழாங் கற்களையும் எடுத்துக்கொண்டு புறப்பட்டான். அவனைக் கண்ட கோலியாத், ''என்னை நாயென நினைத்துக் கொண்டா கவணோடும், சிறிய கற்களோடும் வருகிறாய். வா, உன்னை நான் கொன்று மிருகங்களுக்கும், கழுகுகளுக்கும் இரையாகப் போடுவேன் எனச் சத்தமிட்டான். ஆனால் தாவீது, ''நீ ஈட்டியோடும், வாளோடும் வருகிறாய். நானோ நீ அவமதித்த இஸ்ராயேலின் கடவுளின் பெயரால் வருகிறேன். அவர் உன்னை என் கையில் ஒப்படைப்பார்'' என்றான். துணிவுடனும். இறை நம்பிக்கையுடனும் முன் சென்று, தன் கவணிலே கற்களை வைத்து வீசினான். கல் கோலியாத்தின் நெற்றியிலே படவே, அவன் வேதனை தாங்காமல் குப்புற விழவே, தாவீது ஓடிச் சென்று, அவனுடைய வாளை எடுத்தே, அவன் தலையைக் கொய்தான். இதைக் கண்ட பிலிஸ்தீய படைகள் பயந்து ஓட்டம் எடுத்தன.

2. ஒரு முறை, யூதர்களிடையே தாவீதின் செல்வாக்கு அதிகரிப்பதைக் கண்ட சவுல், பொறாமை கொண்டு, அவனைக் கொல்ல சதிகள் செய்து பலமுறை முயற்சித்தான். தாவீது தப்பி ஓடியபோது, படையோடு அவனைத் துரத்திச்சென்றான் சவுல் தாவீதைக் கொல்லப் பின் தொடர்ந்தபோது, கடவுள் சவுலை எங்காதி பாலைவனத்திலே தாவீதிடம் ஒப்படைத்தார். சவுலைக் கொல்லுவதற்கு இலகுவான சந்தர்ப்பம் கிடைத்தும், தாவீது ஆண்டவரால் அபிஷேகம் செய்யப்பட்ட சவுலைக் கொலை செய்ய மறுத்துவிட்டார், மாறாகப் பின்பு சவுல் இறந்தபோது பல நாட்கள் துக்கம் கொண்டாடி, அவரைப் புகழ்ந்து பாடினார். கடவுளால் அபிஷேகம் செய்யப்பட்டவர் எவ்வளவு தீயவராயிருந்தாலும், அவருக்கு மதிப்பளித்து மன்னித்தார். அவருக்குத் தீமை செய்யத் துணியவில்லை.

3. மனித பெலவீனத்தினால் தாவீது தன் படைத்தளபதி ஊரியாசின் மனைவிமேல். மோகங்கொண்டு, ஊரியாசைக் கொலைசெய்வித்து, அவளைத் தன் மனைவியாக எடுத்துக்

கொண்டார். ஆனால் இறைவாக்கினர் நாத்தான் அவரது பிழையை அவருக்கு உணர்த்திய வேளையில், அவர் அரசனாக இருந்தபோதும், தம்மையே தாழ்த்தி, தம் தவறை உணர்ந்து, ஏற்று மனஸ்தாபத்துடன் மன்னிப்புக் கேட்டார். பரிகாரம் செய்தார். இறைவனும் அவரை மன்னித்து அவர் பாவத்துக் குரிய தண்டனைகளை நாத்தான் வழியாக அறிவித்தார். "நீ நம்மைப் புறக்கணித்து, ஏத்தையனான ஊரியாசை வாளால் தாக்கி, அவன் மனைவியை உனக்கு மனைவியாக்கிக்கொண்ட தால் வாளானது என்றும் உன் வீட்டை விட்டு அகலாது. இதோ உன் வீட்டின் தீமை உன் மேல் வரச் செய்வோம். உன் பார்வையிலேயே நாம் உம் மனைவியரை எடுத்துப் பிற னுக்குக் கையளிப்போம். அவன் இச் சூரிய வெளிச்சத்தில் உன் மனைவிகளோடு படுப்பான். நீயோ மறைவில் செய்தாய்... நாமோ இஸ்ராயேல் எல்லாருக்கு முன்பாகவும், சூரியனுக்கு முன்பாகவும் அதைச் செய்வோம்... ஆண்டவருடைய எதிரி கள் அவரைப் பழிக்க நீ காரணமாயிருந்தீரே. அதன் பொருட்டு உமக்குப் பிறக்கும் பிள்ளை சாகவே சாவான்" என்று கூறினார்.

சலமோன்: தாவீது தன் வயோதிபத்தில் பெத்சாபேயின் மக னான சலமோனை அபிஷேகம் செய்து இறந்தார். (1 அர. 1:2). சலமோன் இஸ்ராயேல் நாட்டை 972 – 929 வரை ஆண்டார். தாவீதுக்கு ஆகீத் வழியாகப் பிறந்த அந்தோனியாசு தகப்பனுக்குப் பின் அரசனாக வர முயற்சித் தாலும், தாவீதின் விருப்பப்படி சலமோன் அரசாளத் தொடங்கினான். அவன் தாவீதிலிருந்து முற்றிலும் வேறுபட்ட வனாக இருந்தான். தாவீது நல்ல துடிப்புள்ள வேலைக்கார னாக இருந்தான். ஆனால் சலமோன் நல்ல நிர்வாகியாகவும், இராஜதந்திரியாகவும் இருந்தார். அவர் போரில் ஈடுபட வில்லை. ஆனால் தன் கடைசிக்காலம் மட்டும் 12 கோத்திரங் களையும் ஒற்றுமையாக வைத்திருந்தார். அவர் வியாபாரத் தில் நல்ல திறமைசாலி. பல நாடுகளுடன் வாணிபத் தொடர்பு கள் ஏற்படுத்தினார். அவர் எகிப்திய அரசன் பார்வோனின். மகளைத் திருமணம் செய்து, காசேர் நகரத்தைச் சீதனமாகப் பெற்றார். அவர் பெரிய கட்டிடக்காரர். வாணிபப் போக்கு வரத்துக்காக செங்கடலோரத்தில் ஒரு துறைமுகத்தைக் கட்டி னார். நாட்டைக் காப்பாற்ற பல கோட்டைகளைக் கட்டி னார். யெருசலேம் ஆலயத்தைக் கட்டி அபிஷேகம் செய்தார். பெரிய அரண்மனைகளையும் கட்டினார். அவரது பெருமை உலகெங்கும் பரவி, பல நாடுகள் அவருடன் வியாபாரம் செய்ய முற்பட்டன. சலமோனுடைய ஞானத்திற்கு, அவர் இறைவ னிடமிருந்து பெற்றதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. அவரே ஞானாகமத்தை எழுதியவராகவும் கருதப்பட்டார்.

(1 அர, 3:1). சபா நாட்டு அரசி அவரது ஞானத்தைக் கேள்விப்பட்டு அவரிடம் வந்து, ஆலோசனைகள் கேட்டு பரிசு கள் பரிமாறினாள். சலமோனுக்குப் பணத்தின் மீது இருந்த ஆசை போல், கட்டிடங்கள் கட்டும் ஆசையும் இருந்தது. ஆலயம், அரண்மனை, கோட்டைகள் எல்லாவற்றையும் கட்டுவித்தார். இதற்குச் சிறந்த கலைஞரையும், பொருள் களையும் பிறநாடுகளிலிருந்து இறக்குமதி செய்து, பணமெல் லாம் செலவு செய்து, இலட்சக் கணக்கில் கடன் பட்டார். இக் கடனை அழிப்பதற்காகக் குறைந்த கூலியுடன் வேலை பெறுவதற்கு வழி செய்தார். ஒவ்வொருவரும் ஒரு மாதத் திற்கு அரனுக்குக் கூலியின்றி வேலைசெய்யவேண்டுமென்று கட்டளையிட்டார். இதனால் பல தீமைகள் விளைந்தன. இதனிமித்தம் 1. இஸ்ராயேலரின் சொந்தத் தொழில், கமம், மந்தை குன்றியது. 2. மக்கள் சிறப்பாக வட பகுதி மக்கள் அதிருப்தியடைந்து. அரசனுக்கு எதிராக எழும்பினார்கள். தொழிலுக்குப் பொறுப்பாக இருந்த ஜெறோபோம் இதற்குத் தலைமைதாங்கினார். (1 அர. 11:26). 3. சனங்கள் தம் மக்களில் அனேகரை அவருக்கு வைப்பாட்டி யாகக் கொடுக்கவேண்டியிருந்தது. அந்நியப் பெண்கள் அரண் மனைக்குக் கொண்டுவரப்பட்டார்கள். அவர்கள் தம்முடன் தமது மதத்தையும், கலாச்சாரத்தையும் கொண்டுவந்தார்கள்; சலமோன யாவேயை மறந்து. அந்நிய தெய்வங்களை வழிபட ஆரம்பித்து, இறைவாக்கினருடையவும் மக்களுடையவும் வெறுப்புக்கு ஆளானார் (1 அர. 11:15) ஆனால் அவர் இறக் கும் வரை அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை;

அரசு பிரிதல்

சலமோனுடைய மரணத்தையடுத்து அவன் மகன் றொபோவாம் அரசனானார் வட இஸ்ராயேல் மக்கள் வரி களைக் குறைக்க வேண்டும், கட்டாய வேலை அகற்றப்பட வேண்டும். என்ற நிபந்தனையின் கீழ் அவரைத் தங்கள் அரசனாக ஏற்க ஆயத்தமாக இருந்தார்கள். ஆனால் றொபோவாம் சில இளைஞர்களின் தூண்டுதலால் நிபந்தனை களை ஏற்கமறுத்து, அவர்கள் சுமைகளை மேலும் அதிகரிக்கப் போவதாகக் கூறினார். இதை அமுல் செய்யத் தொழிலதிகாரி அதுராமை அனுப்பியபொழுது, இஸ்ராயேல் அவனைக் கல்லால் எறிந்து கொன்றனர், இதைக்கண்ட றொபோவாம் பயந்து, யெருசலேமில் அடைக்கலம் புகுந்தான். வட இஸ்ராயேலர் முன்பு தொழிலதிகாரியாகவிருந்து புரட்சி செய்து எகிப்துக்கு ஓடிய ஏரோபோவாமைத் தங்கள் அரசனாக்கினார்கள். றொபோவாம் யெருசலேமிலிருந்து யூதாவையும், பெஞ்சமின் கோத்திரத்தையும் அரசாண்டார். இப்படியாக இரு அரசுகள் உருவாயின.

9:2 இரு அரசுகள் காலம்: (929 — 722). தென் அரசு யூதாவை யும், பெஞ்சமின் கோத்திரத்தையும் கொண்டது. இதற்கு யெருசலேம் தலைநகராக இருந்தது. சலமோனின் மக்கள் இதனை அரசாண்டனர். றொபோவாம் இதன் முதல் அரசன். தென் அரசு, வட அரசிலும் பார்க்கச் செல்வம் செழிப்புக் குன்றியதாக இருந்தது. அவர்களுக்கு அயலவர்களால் (எகிப்தியர்) அவ்வளவு கஷ்டம் ஏற்படவில்லை. 300 ஆண்டுகளுக்குத் தாவீதின் குடும்பம் ஆண்டது. யெருசலேமை சமய. அரசியல் தலைநகராகக் கொண்ட யூத அரசு வலிமை பெற்றிருந்தது மற்றப் பத்துக் கோத்திரங்களையும் கொண்டது. வட அரசு இஸ்ராயேல் அரசு என்றும், தென் அரசு யூதா அரசு என்றும் அழைக்கப்பட்டன.

வட அரசு: இஸ்ராயேல் அரசு செழிப்பும், செல்வமும் உள்ள நாடு. ஆனால் அந்நியரிடமிருந்து (பினிசியர், அரமேயர்) ஆபத்து வரக்கூடியதாகவிருந்தது. பல உள்நாட்டுப் பிரச்சினைகளும, போர்களும் ஏற்பட்டு, 200 ஆண்டுகளுக்குள் மாறி மாறி 7 குடும்பங்கள் அரசாண்டன. வட அரசு மக்கள் யெருசலேம் ஆலயம் செல்வதைத் தடுக்க, ஏரோபோவாம் பெத்தேலிலும். தானிலும் இருகோவில்களைக் கட்டி இரு தங்கக் கன்றுக்குட்டிகளைச் செய்து வைத்து, மக்களை வழிபட அழைத்துப் பலி செலுத்தினான். இக்கோவில்களில் அந்நிய தெய்வங்கள் வழிபடப்படவில்லை. யாவேயைத்தான் கன்றுக்குட்டி வடிவில் வழிபட்டனர். அக்காலத்தில் வடக்கில் வாழ்ந்த எலியாஸ் இறைவாக்கினர் அதை எதிர்க்கவில்லை, வட அரசைத் தாபித்த எரோபோவாமின்ஆட்சி 929 — 909 வரை நீடித்தது.


இஸ்ராயேலரின் படைத் தலைவனாகிய அம்ரி 884ல் எரோபோவாமின் குடும்பத்தை அழித்து, இஸ்ராயேல் அரசனாகி, 873ஆம் ஆண்டுவரை அரசாண்டான் இவன்தான் கோமேர் என்பவரிடம் ஒரு மலையை வாங்கி, சமாரியாவைக் கட்டி, தலைநகராக்கினான். சிதோனியா, யூதா, அசீரியா அரசுடன் நல்லுறவு கொண்டிருந்தான் அவனுக்குப் பின் அவன் மகன் ஆக்காப் அரசாண்டான். அவன் சிதோனிய இளவரசியை மணந்து, அவளுடைய தூண்டுதலால் சமாரியாவில் பாவாலுக்கு ஒரு கோவில் கட்டி வழிபட்டான். இறைவாக்கினர் எலியாசும், எலிசேயுவும் அவனைக் கண்டித்து, அரசை ஜெகுவின் குடும்பத்திற்கு அளித்தார்கள். (1 அர. 17, 18, 19; 2 அர. 2:1 9:1). அவன் ஒரு நல்ல நிர்வாகியல்ல, சீரியருடன் கொண்ட தொடர்பினால் கிழக்குப் பலஸ்தீனாவை இழக்கவே, அசீரியருடைய உதவியைத் தேடினான். இதனால் அசீரியர் பலஸ்தீனாவுக்குள் நுழைய சந்தர்ப்பம் ஏற்பட்டது.

## வட அரசின் அழிவு

இஸ்ராயேல் அரசின் கடைசி அரசன் ஏரோபோவாம் 11. அவன் இஸ்ராயேலை (783 — 743) வரை ஆட்சி செய்தான். அவனுடைய ஆட்சிக்காலம் இஸ்ராயேலின் பொற்காலமாக, செல்வம் கொழித்த காலமாக இருந்தது. சீரியருக்கும், அவரது அயலாருக்கும் போர் ஏற்பட்டபடியால், அவன் சீரியர் முன் கைப்பற்றிய இஸ்ராயேலின் பகுதியைத் திரும்பவும் எடுத்துக் கொண்டான். அக்காலத்தில் வாழ்ந்த இறைவாக்கினர் ஓசேயும், ஆமோசும் செல்வத்தைத் துர்ப்பிரயோகம் செய்ததினால் வந்த கேடுகளைக் கண்டித்தனர். மிதமிஞ்சிய செல்வத்தில் வாழ்ந்தபடியால், அவர்கள் யாவேயை மறந்து வாழ, இறைவாக்கினர் வரவிருக்கும் அழிவை அவர்களுக்கு முன் அறிவித்தனர். அசீரியர் இஸ்ராயேலரைத் தாக்க ஆயத்தப்படுத்திய போது, இஸ்ராயேலும். சீரியாவும் தங்களுடன் சேர்ந்து, அசீரியரை எதிர்க்க யூதாவின் அரசன் ஆக்காசின் உதவியைக் கேட்டனர். யூதா உதவியை மறுக்க, அவர்கள் இருவரும் யூதாவைத் தாக்கினர். யூதா அசீரியரின் உதவியுடன் இஸ்ராயேலையும், சீசியாவையும் தாக்கியது. அசீரியரின் தலைவன் எத்கிளார் பலசார் கிழக்கு யோர்தானையும், கலிலேயாவையும் பிடித்தான்; யூதாவுக்கு மத்திய மலைப்பாகம்தான் கிடைத்தது. 717ஆம் ஆண்டில் அசீரியர் வட இஸ்ராயேல் முழுவதையும் கைப்பற்றி, முக்கிய தலைவர்களையெல்லாம் அசீரியாவுக்குப் பிடித்துச் சென்றனர் அவர்களிடத்துக்கு அரேபியரைக் கொண்டுவந்து குடியேற்றினர்; சமாரியாவில் மிஞ்சிய இஸ்ராயேலர், குடியேற்றப்பட்ட அரேபியருடன் கலந்து வாழ்ந்தனர். இவர்கள் வழியாகப் பிறந்தவர்களே சமாரித்தர்கள். இவர்களை மற்றவர்கள் இழிந்தவர்கள் எனக் கருதினர்.

9.3 யூதா தனி அரசு: (722 — 586) வட அரசின் அழிவுக்குப் பின் தென் அரசு இன்னும் 150 ஆண்டுகள் நீடித்தது; 604 இல் பபிலோனியர் இதைக் கைப்பற்றியதோடு இது முடிவுற்றது. தென் அரசில் ஆண்ட அரசர்களுக்குள் முக்கியமானவர்கள் 1. ஆகாஸ், 2. எசெக்கியாஸ், 3. யோசியாஸ், இவர்கள் எல்லாரும் தாவீது வம்சத்தைச் சேர்ந்தவர்கள்.

1. ஆகாஸ்: ஆகாஸ் ஒரு அஞ்ஞானி. சீரியரும் இஸ்ராயேலரும் யூதாவை எதிர்த்தபொழுது இசையாஸ் இறைவாக்கினரின் ஆலோசனைக்கு செவிகொடுக்காமல், அசீரியர்மேல் நம்பிக்கை வைத்து, நஷ்டங்களுக்கு ஆளானவன். யூதாவை ஆண்ட அரசர்களுள் மிகக் கொடியவனாகக் கருதப்படுகின்றான்.




3. எசெக்கியாஸ்: எசெக்கியாஸ் ஆகாசின் மகன்; ஒரு நல்ல யூதன்; இவன் 720 — 693 வரை ஆண்டான்.

இவனுடைய காலத்தில்தான் இஸ்ராயேல் அரசு அழிந்தது; அதன் அழிவு தென் அரசு மக்களுக்கும் அச்சத்தை உண்டு பண்ணியதால், தம் தீய பழக்கத்தை விட்டு, யாவேயிடம் திரும்பினர். (2 அர. 18:15): எசெக்கியாஸ் தன் தகப்பன் பாவாலுக்குக் கட்டிய கோவில்களைத் தகர்த்து எறிந்தான். வட இஸ்ராயேல் மக்கள் யெருசலேமிற்கு வழிபட வந்தனர். எசெக்கியாஸ் இஸ்ராயேலரின் பாரம்பரியங்களையும், பத்திரங்களையும் சேகரித்துத் தொகுத்தான். இவனது காலத்தில் தான் உபாகமம் எழுதப்பட்டது. யூத மதத்தில் ஒரு மறுமலர்ச்சியும் ஏற்பட்டது. எசெக்கியாஸ் இலக்கியத்தில் பற்றுடையவனாகக் காணப்பட்டான். அவன் அந்நிய தெய்வங்களை அழிக்கும்போது அசீரிய தெய்வங்களையும் அழித்தான். இது அசீரியரின் எதிர்ப்பைக் கொண்டுவந்தது. எசெக்கியாஸ் இறைவாக்கினர் ஆலோசனையைக் கேளாமல் அவர்களை அரசிய

லில் தலையிடாமல் ஒதுங்கி வனாந்திரத்தில் வாழும்படி பணித்தான். கடைசியில் அசீரியரால் தோற்கடிக்கப்பட்டான். யெருசலேம் மட்டும் மிஞ்சியது.

3. யோசியாஸ்: இவன் அசீரியரைத் தோற்கடித்து, மத்திய பலஸ்தீனாவை மீட்டு, அந்நிய கோவில்களைத் தகர்த்தெறிந்தான். பபிலோனியரால் தாக்கப்பட்ட அசீரியருக்கு உதவி செய்யச்சென்ற எகிப்தியரை எதிர்த்துப் போராடிய பொழுது, யோசியாஸ் கொல்லப்பட்டான். அடுத்து யோசியாசின் 2ஆம் மகன் யோவாக்காசை மக்கள் அரசனாக நியமித்தார்கள் ஆனால் எகிப்திய அரசன் பார்வோன் அவனைக் கைதுசெய்து தங்களுக்குச் சாதகமான மூத்தமகன் எலியாக்கீசுக்கு யோவாக்கீம் எனப் பெயர் கொடுத்து யூதாவின் அரசனாக்கினான். இவன் விவிலியத்தில் ஒரு தீய அரசனாகக் கருதப்படுகிறான். இவன் மட்டுமே இறைவாக்கினர்களைக் கொலை செய்தவன். இவன் 597ஆம் ஆண்டு மட்டும் அரசாண்டான். ஆனால் 604 இல் பபினோனியா அரசன நபுகொதனோசார் யெருசலேமிற்குள் பிரவேசித்தான். யோவாக்கிம் அவனுக்கு அதிகம் வரி கொடுத்து, யூதாவில் சில முக்கியஸ்தர்களையும் அவனுக்குப் பரிசாகக் கொடுத்தான். இவர்களுள் தானியேலும் ஒருவர். இவர்களை நபுகொதனோசார் பபிலோனியாவுக்கு நாடு கடத்திச் சென்றான். 600 இல் எகிப்திய உதவியுடன் பபிலோனியரைத் தோற்கடித்து யெருசலேம் எகிப்தியர் ஆட்சிக்கு வந்தது. இக்காலத்தில் ஜெரேமியாஸ் இறைவாக்கினர் எகிப்தியருக்கு எதிரானவரெனத் துன்புறுத்தப்பட்டார். 597 இல் நபுகொதனோசார் திரும்பவும் யெருசலேமைக் கைப்பற்றி யோவாக்கிமின் மகன், யோவாக்கின் அரசனுட இரண்டாம் முறையும் மக்களைப் பபிலோனியாவுக்கு நாடுகடத்தினான். இன்னமும் யெருசலேமில் பபிலோனியருக்கு எதிர்ப்பு இருந்தபடியால் நபுகொதனோசார் யோசியாசின் மூன்றாவது மகன் மத்தானியாசை (செதெசியாசை) கைது செய்து, அவன் குடும்பத்தை அழித்து பலருடன் அவனையும் நாடுகடத்தினான் (586). அத்தோடு யெருசலேமையும், அரண்மனை, ஆலயம், எல்லாவற்றையும், எரித்து அழித்தான். செதெசியாசுடன் தாவீதின் பரம்பரையின் ஆட்சியும், தென் அரசும் அழிந்தன. (2 அர. 24: 1).

## ஒரே பார்வையில் அரசர்கள் காலம்

1. ஒரு அரசு (1020 – 932)

| | | |
|---|---|---|
| 1. சவுல் | — | 1020 – 1012 |
| 2. தாவீது | — | 1012 – 972 |
| 3. சலமோன் | — | 972 – 932 |
| 4. றொபோவாம் | — | 932 |

## 2. இரு அரசுகள் (932 — 722)

| தென் (யூதா) அரசு | | வட (இஸ்ராயேல்) அரசு | |
|---|---|---|---|
| றொபோவாம் | 932 — 917 | ஜெறொபோவாம் 1 | 932 — 912 |
| அபியாம் | 917 — 914 | நாடாப் | 912 — 911 |
| ஆசா | 913 — 873 | பாசா | 911 — 888 |
| யோசபாத் | 873 — 849 | ஏலா | 888 — 887 |
| யோராம் | 849 — 842 | அம்ரி | 887 |
| ஒக்கோசியாஸ் | 842 | ஒம்ரி | 887 — 876 |
| அத்தாலியா | 842 — 836 | ஆகாய் | 876 — 854 |
| யோவாஸ் | 836 — 797 | ஒக்கோசியூாஸ் | 854 — 853 |
| அமாசியாஸ் | 797 — 789 | யோராம் | 853 — 842 |
| ஒசியாஸ் | 789 — 740 | ஜெகு | 842 — 815 |
| யோவாத்தாம் | 740 — 736 | யோக்காஸ் | 814 — 798 |
| ஆகாஸ் (736 — 728) | | | |

## 3. யூதா தனி அரசு (722 — 586)

| | | | |
|---|---|---|---|
| எசெக்கியாஸ் | 727 — 699 | யோவாஸ் | 798 — 783 |
| மனாசே | 698 — 643 | ஜெறொபோவாம் 11 | 783 — 743 |
| ஆமோன் | 643 — 641 | சக்கரியாஸ் | 743 — |
| யோசியாஸ் | 640 — 609 | செலும் | 743 — |
| யோவாக்காஸ் | 608 | மனாசெம் | 743 — 737 |
| யோவாக்கிம் | 608 — 597 | பேசியா | 737 — 736 |
| யோவாக்கின் | 597 | பாசே | 736 — 732 |
| செதெசியாஸ் | 596 — 586 | ஒசி | 732 — 722 |
| | | வட அரசின் முடிவு | |

தென் அரசின் முடிவு
பபிலோனிய அடிமைத்தனம்

## இஸ்ராயேலரின் அரசுகள் அழிந்தன

இஸ்ராயேலர் இறைவனுடன் சீனாய் மலையில் செய்து கொண்ட உடன்படிக்கையின் வழியாக இறைவனுக்குச் சொந்தமான மக்களானார்கள்; இறைவனே அவர்களின் உண்மையான அரசன். ஏனைய அரசர்கள் யாவேயின் பிரதிநிதிகளாகவே இருந்தனர். எனவே அரசரும் மக்களும் யாவேக்கும், அவரோடு செய்து கொண்ட உடன்படிக்கைக்கும் பிரமாணிக்கமாயிருந்த காலங்களில், இறைவன் அவர்களைப் பராமரித்து, வழிநடத்தி வந்தார். போர்களில் வெற்றியளித்தார். ஆனால் அவர்கள் யாவேயை மறந்து, உடன் படிக்கையை மறந்து வாழ்ந்த பொழுது, இறைவன் அவர்களைக் கைவிட்டு விட்டார். பிற்காலத்தில் இஸ்ரயேலரும், அவர்களது அரசர்களும் யாவேயை மறந்து, அவரிலே நம்பிக்கையை இழந்து, உடன் படிக்கையை மறந்து, அந்நிய நாடுகளின்மேல் நம்பிக்கை வைத்து, தான் தோன்றித்தனமாக வாழ்ந்தார்கள். அந்நிய தெய்வங்களை வழிபட்டார்கள். இறைவாக்கினர் வழியாக இறைவன் அவர்களை எச்சரித்து; உடன் படிக்கையை நினைவுபடுத்திய போதும், அவர்கள் ஏற்காது. தம் விருப்பம் போல் வாழ்ந்தனர். இதனால் ஊழல்கள், ஒழுங்கீனங்கள், பாவச் செயல்கள், அநீதிகள், சிலை வழிபாடுகள் அவர்களது சமுதாயத்தில் நுழைந்தன. வெளியரங்க வழிபாடும், செல்வச் செருக்கும் தேசிய முன்னேற்றமும், படைவல்லமையும் தங்கள் அரசைக் காக்கப் போவதில்லை. என்பதை அவர்கள் உணரவில்லை. தம்மை மறந்து, புறக்கணித்த இஸ்ராயேலரை இறைவனும் · புறக்கணித்தார்; இஸ்ராவேலரைத் தண்டித்துத் திருத்துவதற்கு இறைவன் எகிப்திய, அசீரிய, பபிலோனிய அரசுகளைத் தன் பிரம்புகளாக், சம்மட்டிகளாகப் பயன்படுத்தி, அவர்களிடம் இஸ்ராயேலரை ஒப்படைத்தார் இவ்வாறாக அவர்கள் பாவங்களினிமித்தம், இறைவனால் கைவிடப்பட்டு, இஸ்ராயேல் அரசுகள் அழிந்தன;

**விசேட குறிப்பு:-** இரட்சணிய வரலாற்றில் அரசர்கள் முக்கியத்துவம் வகிக்கின்றனர்; கானான் தேசம் எங்கும் சிதறுண்டு வாழ்ந்த இஸ்ராயேலரை ஒன்றுசேர்த்து ஒற்றுமைப்படுத்தவும், அவர்களை அந்நியரது தாக்குதல்களிலிருந்து காக்கவும், அரசர்கள் ஆண்டவரின் ஆணைப்படி நியமிக்கப்பட்டார்கள். ஆண்டவர்தான் உண்மையான அரசன், அவருக்குப் பிரமாணிக்கமாய் இருக்குமட்டும் அரசர்கள் வெற்றி பெற்றனர். படை வல்லமையிருந்தாலும், ஆண்டவருக்குப் பிரமாணிக்கமில்லாமல் வாழும் வேளையில் தோல்வி கண்டனர்; வெளியரங்க வழிபாடும், தேசிய முன்னேற்றமும் அரசைக் காப்பாற்றப் போவதில்லை என்பதைக் காண்கிறோம். பிற்

காலத்தில் அரசர்கள் யாவேயை மறந்து பிறதெய்வங்களுக்குக் கோயில்கட்டி வழிபட்டபடியால், ஆண்டவரால் கைவிடப்பட்டு இஸ்ராயேல் அரசுகள் அழிந்தன.

(10) நாடு கடத்தப்பட்ட காலம்: பபிலோனியா (586) யெருசலேமில் வாழ்ந்த யூதர்கள் மூன்று வெவ்வேறு காலங்களில் (604, 597, 586) நபுக்கொதனோசரால் நாடு கடத்தப்பட்டு, பபிலோனியாவில் வெவ்வேறு இடங்களில் குடியேற்றப்பட்டனர். வேறுசிலர் எகிப்தில் தஞ்சம் அடைந்து அங்கு குடியேறினர்.

வறிய யூதரும், இடையருமே யெருசலேமில் மிகுதியாக இருந்தனர். நாடு முழுவதும் வெறுமையாக இருந்தபடியால், மிஞ்சியிருந்த யூதர்களுக்கு ஏராளமான நிலங்களும், வீடுகளும், வயல்களும் கிடைத்தன. எல்லா அரசாங்கத் தொழிலாளிகளும் நாடுகடத்தப்பட்டபடியால், அரசாங்கத் தொழில்வாய்ப்பும் இருந்தது. அயலில் வாழ்ந்த எமத்தோயர், அமோனியர், மோவாத்தியர் யெருசலேமில் நுழைந்து குடியேறினர்.

பபிலோனியாவுக்கு நாடுகடத்தப்பட்ட யூதரின் நிலை வேறுபட்டதாகவிருந்தது. அவர்கள் வலோற்காரமாக நாடு கடத்தப்பட்டாலும் அடிமைகளாக வாழவில்லை அவர்களுக்கு அரசிடமிருந்து காணிகள்கிடைத்தன. அவர்கள் எல்லோரும் ஒரே சமூகமாகக் கூடிவாழ அவர்களுக்கு வசதி அளிக்கப்பட்டது. அவர்களுக்கென்று நீதிமன்றங்களும், நீதிபதிகளும் இருந்தார்கள் தம் மதத்தின்படி வாழ்ந்து, தமது பழக்கவழக்கங்களைக் கடைப்பிடிக்கக் கூடியதாக இருந்தது, அவர்கள் உத்தியோகம் பெற்று, நகர்ப்புறங்களிலும் குடியேறினர். தம் உழைப்பினாலும், வியாபாரத்தினாலும் அனேக சொத்துக்களைப் பெற்றுக்கொண்டார்கள், ஆகவே சிலர் திரும்பித் தங்கள் சொந்த நாட்டுக்குப் போகவிரும்பவில்லை. ஆரம்பத்தில் அவர்கள் தங்கள் சொந்த நாட்டுக்குப் போவார்கள் என்ற எண்ணத்தில் ஒன்றிலும் ஈடுபடாமல் இருந்தார்கள். ஆனால் இறைவாக்கினர் எசெக்கியேல் இது உடனே நடைபெறாது என்று கூறியதாலும், தொடர்ந்து வேறு யூதர்களும் கொண்டுவரப்பட்டபடியாலும் அவர்கள் தொழிலில் ஈடுபட்டு உழைக்க ஆரம்பித்தார்கள். அவர்கள் திரும்பிப் போவதில் நம்பிக்கை இழந்தபொழுது திரும்பவும் எசெக்கியேல் "திரும்பிப்போவோம்" என நம்பிக்கை கொடுத்தார்.

பபிலோனிய வாழ்வு யூதரின் மதவாழக்கையில் மிக ஆழ மான திருப்பத்தை ஏற்படுத்தியது. ஒரு சிலர் விசுவாசமிழந்து மொசபெத்தேமியரின் மதத்தைத் தழுவினர். எஞ்சியோரின் விசுவாசம் உறுதிபெற்று வளர்ந்தது. அவர்கள் வழிபட ஆலயம் இருக்கவில்லை. ஆகவே செபக்கூடங்களை (சினோகொக்) ஆரம்பித்து அங்கு ஓய்வுநாட்களில் கூடி, சங்கீதங்களையும், பாடல்களையும் பாடினர். வேதப் புத்தகங்கள் வாசிக்கப்பட்டு விளக்கப்பட்டது யூத சட்டங்களையும், ஒழுங்குகளையும் கடைப்பிடித்து, தம்மை மற்றவர்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டினர். 'சபாத்' ஒரு புனித நாளாகக் கொண்டாடப்பட்டது, விருத்தசேதனமும் முழுப்பொருளுடன் அனுசரிக்கப்பட்டது. உணவுகளைப் பற்றிய ஒழுங்குகள் உருவாக்கப்பட்டன. இக்காலத்தில் சதுசேயர் என்ற ஒரு புதுவகுப்பினர் உருவாயினர். இவர்கள் வெவ்வேறு புத்தகங்களையும், பழக்கங்களையும், பாரம்பரியங்களையும் தொகுத்துக் கூட்டங்களுக்குக் கொண்டுவந்து வாசித்தனர். இதுவே பின்பு குரு மரபு என அழைக்கப்பட்டது. பின்னர் இவர்கள் இறைவாக்கினரின் இடத்தை எடுத்தார்கள். பலி ஒப்புக்கொடுக்கப்படாவிட்டாலும், குருக்கள் கூட்டங்களின் முடிவில் மக்களை ஆசீர்வதிப்பார்கள்.

அத்துடன் தங்கள் பிற்காலத்திற்கும் ஆயத்தம் செய்தார்கள். (எசே 40 - 48). தாம் யெருசலேமில் செய்த பிழைகளை உணர்ந்தார்கள். 1. ஒரே இறைவன் என்பதை மறந்து வாழ்ந்தது 2 புற மதக் கொள்கைகளுக்கு இடம் கொடுத்தது, அந்நிய தெய்வங்களை வழிபட்டது. 3. தங்கள் நாட்டிலும். தேவாலயங்களிலும் அளவுக்கதிகமான பற்றுக்காட்டி, உண்மை வழிபாடுகளில் தவறியது. 4. இறைவாக்கினர் எச்சரிக்கையை ஏற்காமை போன்ற தவறுகளை உணர்ந்தனர் மனம் வருந்தி இறைவனையும், அவர் தரும் விடுதலையையும் ஆவலோடு எதிர்பார்த்தனர். இது மெசியா அளிக்கும் விடுதலைக்கு முன்னோடியாகவிருந்தது. நாடற்ற, வீடற்ற ஆலயமற்ற, குருக்களற்ற மக்களாகக் கஷ்டம் அனுபவித்தபோது, இறைவனையும், அவர் தம் முன்னோர்களுக்குச் செய்த வியத்தகு செயல்களையும் நினைத்தார்கள். அவர் வல்லமையில் நம்பிக்கை கொண்டு, அவர் தம்மை விடுதலை செய்ய வருவாரென எதிர்பார்த்தனர். அவர்களுக்குள்ளே ஒற்றுமையும் வளர்ந்தது. இவையெல்லாம் அவர்கள் மனம்திரும்ப உதவி செய்தன அவர்கள் விசுவாசத்தை ஆழமாக்கி, உறுதிப்படுத்த வழிசெய்தன. எசெக்கியேல் போன்ற இறைவாக்கினரும் இதற்குப் பெரிதும்

உதவினர். இந்தப் பபிலோனிய அடிமைத்தனம் பேசியர் சைரஸ் அரசன் தலைமையில் மெசபொத்தோமியாவைக் கைப்பற்றியதுடன் முடிவடைந்தது. (539)

### (11) இறைவாக்கினர் காலம் (கி. மு. 800 - 400)

பழைய ஏற்பாட்டின் நான்கில் ஒரு பகுதி இறைவாக்கினரின் நூல்களாக உள்ளன. இவைதவிர விவிலியத்தின் பல்வேறு பகுதிகளில் இறைவாக்கினர், அவர்கள் பணிபற்றிய குறிப்புகள் பல உள்ளன. இறைவாக்கினர் என்ற சொல்லின் நேரான பொருள் இறைவாக்கை உடையவர் என்பதாகும். அதாவது இறைவனுக்காகப் பேசுபவர், இறைவனது சொல்லையே சொல்லுபவர் எனப்படும்.

இறைவாக்கினர் காலம் கி. மு. 8 ஆம் நூற்றாண்டு முதல் கி. மு 4 ஆம் நூற்றாண்டு வரை என்பர் இதற்கு முன்னரும், பின்னரும் இறைவாக்கினர் இருக்கவில்லை என்றல்ல, மோயீசனை முதல் இறைவாக்கினர் என்றும், திருமுழுக்கு அருளப்பரை இறுதி இறைவாக்கினர் என்றும் அழைப்பதுண்டு. ஆனால் கி. மு. 8 ஆம் நூற்றண்டு முதல்தான் இறைவாக்கு உரைத்தல் ஒரு சிறந்த திருப்பணியாகவும், இறைவாக்கினர் இறைவனின் தனித் தூதுவராகவும் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டன. இக்காலத்தில்தான் இப்பணி உச்சக்கட்டத்தை அடைந்தது எனலாம் மேலும் இக்கட்டத்தில்தான் இஸ்ராயேல் இனத்திற்கு இறைவாக்கினரின் சேவை மிகவும் தேவையாகவிருந்தது. எல்லா இறைவாக்கினரின் வாக்குகளும் எழுத்து வடிவம் பெறவில்லை. எழுத்து வடிவம் பெற்ற பதினாறு பேரையும் வரையறைக்குட்பட்ட (Canonical) இறைவாக்கினர் என அழைக்கின்றோம். இவர்களில் நீண்ட நூல்களை எழுதிய இசையாஸ், ஜெரேமியாஸ், எசேக்கியேல், தானியேல் என்பவர்களைப் பெரிய இறைவாக்கினர் என்றும், ஏனைய பன்னிருவரையும் சிறிய இறைவாக்கினர் என்றும் அழைப்பர் பெரிய இறைவாக்கினர் வாழ்ந்த காலத்தை இறைவாக்கினரின் பொற்காலம் என்றழைப்பர். இவர்களைத் தவிர மோயீசன், சாமுவேல், எலியா, எலிசேயு, நாத்தான், காத், அகியாசு போன்ற இறைவாக்கினரும் பணிபுரிந்திருக்கிறார்கள்.

இறைவாக்கினரை எபிரேய மொழியில் 'நபி' என்று அழைப்பர். 'நப்' என்றால் அறிவித்தல் எனப் பொருள்பெறும். எனவே இறைவாக்கினரை அறிவிப்பவர் எனலாம். அக்காடி மொழி மரபில் நபி என்றால் அழைக்கப்பட்டவர் எனப்

பொருள் கொள்ளலாம். பழைய ஏற்பாட்டில் 'நபி' என்ற எபிரேயச் சொல் பக்தன், குறிசொல்வோன், மந்திரவாதி, ஆவேசம் கொள்வோன், ஆட்கொள்ளப்பட்டவன் போலி இறைவாக்கினன், இறைவாக்கினன் என்ற பல பொருளில் இடம் பெற்றிருக்கிறது. கிழ்நாட்டுச் சமயங்கள் எல்லாவற்றிலும் இத்தகையோர் காணப்பட்டனர், இவர்கள் திருத்தலங்களில் கூட்டமாக வாழ்ந்து, பலி செலுத்தி பக்தர்களுக்கு இறைவனது ஆணையை எடுத்துரைத்து, இறைவனுடன் தொடர்பு கொண்டு, அவர் விருப்பத்தை மக்களுக்கு அறிவித்து, மன்னருக்கும், மக்களுக்கும் ஆலோசனை வழங்கி வந்தனர். அசரீரி கூறியோ, குறி சொல்லியோ, சகுனம் உரைத்தோ, மந்திரம் கூறியோ மக்களின் வினாக்களுக்கு விடை அளித்தனர். அவர்கள் ஆடிப்பாடி, எளிதில் உணர்ச்சி வசப்பட்டு பரவசம் அடைந்து குடித்து கும்மாளம் போட்டுத் தம்மையே மறந்து பேசுவதும், செயல்களைச் செய்வதுமுண்டு இத்தகைய நபிகள் கூட்டம் இஸ்ராயேலரைச் சுற்றிலும் வாழ்ந்தது.

## இஸ்ராயேலரின் இறைவாக்கினர்

இஸ்ராயேலரின் இறைவாக்கினர் தங்களை இத்தகையவர்களோடு ஒன்றுபடுத்த விரும்பவில்லை. எனவேதான் ஆமோஸ் இறைவாக்கினர் ... "நாம் நபியும் அன்று, அக்கூட்டத்தைச் சார்ந்தவனும் அல்லன்" என்கிறார். வேற்று சமய இறைவாக்கினருக்கும் இஸ்ராயேலரின் இறைவாக்கினருக்கும் பெருத்த வேறுபாடு இருந்தது. இறைவாக்கினர் இறைவனுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவராய், ஒழுக்கசீலராய், தம் போதனையின் படி நடப்பவராய் இருக்கவேண்டும் என இஸ்ராயேலர் எதிர்பார்த்தனர். முற்காலத்தில் இறைவாக்கினரை தீர்க்கதரிசிகள் என்றழைத்தனர். இதனால் அவர்கள் பின் நடக்கப்போவதை முன்னறிவிப்பவர்கள் என்ற தப்பெண்ணம் பரவிற்று. ஆனால் இறைவாக்கினர் சோதிடர் அல்லர், எதிர்காலத்தைப்பற்றியே பேசிக்கொண்டிருப்பவர்களும் அல்லர். இவர்கள் இறைவனின் வார்த்தையை மக்களுக்கு எடுத்துரைப்பவர்கள். இறைவனது எண்ணத்தை, திட்டத்தை அவரிடமிருந்து அறிந்து மக்களுக்கு எடுத்துரைப்பதே அவர்கள் பணி. இறைவாக்குரைத்தல் இறைவன் அளிக்கும் கொடை. இது இறைவாக்கினரின் நலனுக்காக அல்ல மக்களின் நன்மைக்காகவே அவர்களுக்கு வழங்கப்பட்டது. இஸ்ராயேல் இறைவாக்கினர் சமயப் பின்னணியில் இறைவாக்கு உரைத்தனர். நன்றியைப் போதிக்குமுன் அதைத் தங்கள் வாழ்க்கையில் கடைபிடித்தனர். மக்கள் விரும்பா விட்

டாலும், மன்னன் கோதித்தெழுந்தாலும், இறைவன் சித்தம் ஆணை எனத் தாம் அறிந்ததை அஞ்சா நெஞ்சுடன் எடுத்து ரைத்தனர்.

பிற்காலத்தில் இறைவாக்கினர் தம்மை இறைவனின் தூதுவர், இறைவனின் பணியாளர், ஆயர்கள், காப்பாளர்கள், காவலர்கள் என்றெல்லாம் அழைத்தனர் இச்சிறப்புப் பெயர்கள் அவர்களுக்கும் யாவேக்கும் உள்ள தொடர்பையும், அவர் பணியையும் எடுத்துரைக்கின்றன. இசையாசின் கூற்றுப்படி இறைவனையும் மனிதனையும் பிரிக்கும் பாவத்தின் கொடுமையை உணர்வதிலும், மக்களின் மீட்பைப் பற்றி இறைவனின் திருச்சித்தத்தை அறிவதிலும் தானே தன் பாவத்தை உணர்ந்து மன்னிப்புப் பெறுவதிலும், தான் கண்ட, கேட்ட பேருண்மைகளை மக்களுக்கு அறிவிக்கும்படி தான் பெற்ற ஆணையிலுமே இறைவாக்கு உரைத்தலின் தூண்டுதல் அடங்கியுள்ளது. இறைவாக்கினர் அவர்களது தகுதியைக் கருதாது, இறைவனால் தெரிந்தெடுக்கப்பட்டு, அவரிடமிருந்து அக்கொடையை இலவசமாகப் பெற்றவர்கள் (எரே. 1 : 15; ஆமோ. 7:14) இறைவாக்கினர் இறைவனின் ஆணையைமீற முடியாத அளவில், அதே சமயத்தில் முழுச்சுதந்திரத்துடனும் இயங்கும் அளவிற்குப் பரிசுத்த ஆவியால தூண்டப் பெறுகின்றனர்.

### இறைவாக்கினரின் போதனை

இறைவாக்கினர் கூறுவது அவர்களால் நிர்ணயிக்கப்பட்டதன்று இறைவனது எண்ணத்தையே அவர்கள் எடுத்துரைத்தனர். எனவே இறை ஏவுதலால் பேசும் இறைவாக்கினர், தாம் கூறுவதன் பொருள் அனைத்தையும் புரிந்துகொண்டார்களெனக் கூறிவிடமுடியாது. சிலவேளைகளில் மெசியாவைப்பற்றிக்கூட தெளிவான கருத்துக்களை இவர்கள் கொண்டிருக்கவில்லை இறைவனது வாக்குகள் ஒரு குறிப்பிட்ட இனத்துக்கோ அல்லது குறுகிய எல்லைக்கோ அல்லது காலத்துக்கோ மட்டும் உரியன வல்ல. எக்காலத்துக்கும் பயனளிக்கக் கூறப்பட்டவை. இறைவன் கொடுத்த உண்மைகளைக் கூறியபொழுது அவர்கள் தாம் அறிந்திருந்த உண்மைகளின் பின்னணியில். அன்றைய மரபுகளையும், அடையாளங்களையும் பயன்படுத்திக் கூறியதுண்டு. ஆகவே அவர்கள் இறைவனின் செய்தியை தம் சூழ்நிலைக்கேற்ப தமக்கேயுரித்தான கற்பனைத்திறனுடன் பேசினர்; அவர்கள் அரசர்க்கும், நீதிபதிகளுக்கும் அருகிலிருந்து ஆலோசனைகள் கூறி, அவர்கள் கடமைகளை நினைவூட்டினர். அவர்கள் தவறியபொழுது கண்டித்தனர். பெருந்தன்மையாக நடந்த

பொழுது போற்றினர்: உண்மைக் கடவுளுக்குச் சாட்சியாக வும். அவர் ஒருவரே கடவுள் என்று நிலைநாட்டுபவர்களாக வும் இருந்தனர். உயர்ந்தவர்களும், செல்வந்தர்களும் புரிந்த அநீதிகளையும், பொதுமக்களின் மனச்சோர்வையும் எதிர்த்துப் பேசினர்.

சிலவேளைகளில் மக்களின் கவனத்தை ஈர்ப்பதற்காக சுமை தூக்கல், கூசாவை உடைத்தல் போன்ற வேடிக்கையான பாவனைகள், செய்கைகள் முதலியவற்றையும் செய்தனர். இச்செயல்கள் வேறு உட்பொருளைக் கொண்ட அடையா ளச் செயல்கள். மக்கள் வாழ்வில் நடைபெறும் சம்பவங்களின் ஆழ்ந்த பொருளை எடுத்துரைக்கும் உரிமை அவர்களுக்கிருந் தது. உ.ம். ஒவ்வொரு இடுக்கணும், தோல்வியும் ஒரு தண்டனை; அழைப்பு. ஒவ்வொரு விடுதலையும் கடவுளின் இரக்கத்திற்கும் பிரமாணிக்கத்திற்கும் ஓர் அறிகுறி.

சில சந்தர்ப்பங்களிலே இவர்கள் ஆசிரியராகவும் மாறி இறைவாக்கையொட்டிய நீண்டபோதனைகளையும் அளித்தனர். பொதுவாக அவர்கள் சாதாரண மக்களைப்போன்று ஒரு தொழிலைச் செய்து எளிய வாழ்க்கை வாழ்ந்து வந்தார்கள்.

### அவர்கள் பணி

சுருங்கக் கூறின் இறைவாக்கினர் பின்வரும் பணிகளை ஆற்றினர்.

1. கடவுளின் மனிதர்.
   - அ. கடவுளுடன் நெருங்கிய உறவைக் கொண்டவர். (1 சாமு. 9:6)
   - ஆ. வல்லமையுள்ளவர். (1 அர. 12:22)
2. இறைவனின் செய்தியை அறிவிப்பவர்; அவர் தூதுவர். (ஆமோஸ் 3:1)
3. ஆண்டவரின் ஊழியன். (இசை. 20: 3)
4. காவல்காரன். (இசை. 21: 11; எசே. 3:17)
5. பரிசோதிப்பவன். (எரே. 6:27)
6. இஸ்ராயேலுக்காகச் செபிப்பவர். (1 சாமு. 7:5)
7. யாவேயின் சபையில் இருப்பவர். (இசை. 6: 1.)
8. யாவேயின் பிரதிநிதி. (எரே. 12:3)

இறைவாக்கினர் மக்களுக்கு அறிவிக்கும்படியாக இறைவனிடமிருந்து நேரடியாகக் கேட்டு, வெளியிட்ட வாக்குகளை தெய்வ வாக்கு என அழைப்பர். சில வேளைகளில் இறைவாக்கினர் தாம் கேட்ட வாக்குகளை எழுதும்படியாக இறைவனால் ஆணையிடப்பட்டதுண்டு. (இசை. 30. 8). சில இறைவாக்கினர் தாம் கூறிய இறைவாக்குகளை தாமே தம் கைப்பட எழுதியதுண்டு உ. ம். ஆமோஸ். வேறு சிலர் தம் எழுத்தாளர்களைக் கொண்டு எழுதியதுமுண்டு. உ.ம். ஜெரேமியாஸ், இசையாஸ். சில வேளைகளில் இறைவாக்கினரிடமிருந்து தாம் கேட்டு மனதில் நிறுத்தியதை, அவர்கள் சீடர்கள் பிற்காலத்தில் எழுதினர். வேறு சிலர் ஆங்காங்கு தனித்தோ, தொகுப்பாகவோ காணப்பட்ட இறைவாக்குகளையும், அவற்றை வழங்கியோரின் வாழ்க்கைபற்றிய குறிப்புகளையும் சேகரித்துத் தொகுத்து, தமது விளக்கங்களுடன் எழுதினர். ஆகவே இன்று நாம் காணும் இறைவாக்கு நூல்களுக்கு பலதரப்பட்ட ஆசிரியர்களைக் காண்கிறோம்.

### தனிப் பண்புகள்

வெவ்வேறு இறைவாக்கினர், இறைவனை, அவர் பண்புகளை வெவ்வேறு கோணத்தில் நோக்கினர். எலியாசின் இதயத்தைக் கவர்ந்தது இறைவனது எல்லாம் கடந்ததும், அதே வேளையில் எல்லாவற்றிலும் இணைந்து நிற்கும் தனித்தன்மை ஆகும். இசையாஸ் இறைவனின் புனிதத்தன்மையைக் கண்டு அதற்கு உருக்கொடுக்கின்றார். எரேமியாஸ் இறைவன் மனதில் செயல்புரிவதை எடுத்துரைக்கின்றார். எசேக்கியேல், இறைவனது எங்குமிருக்கும் பண்பையும், அளவுகடந்த அறிவையும் பாராட்டுகின்றார். ஆமோஸ் சமூகநீதியை வலியுறுத்துகின்றார். ஓசே இறைவனின் அன்பைத் தெளிவாக உணர்த்துகின்றார்.

அசீரியா, பபிலோனியா, பேசியா என்ற வல்லரசுகள் காலத்தில்தான் பெரும்பாலான இறைவாக்கினர் வாழ்ந்து, பணிபுரிந்தனர். இசையாஸ், ஜேரேமியாஸ், எசேக்கியேல் போன்ற பெரிய இறைவாக்கினர் பணிபுரிந்த காலத்தை இறைவாக்கினரின் பொற்காலம் என்றழைப்பர்.

### இறைவாக்கினரும், அவர்கள் காலங்களும், செய்திகளும்

1. ஒரு அரசு காலத்தில்: எச்சரிக்கை

| | | |
|---|---|---|
| சாமுவேல் | ... 1020 | ... சவுல், தாவீது |
| நாத்தான் | ... 1000 — 970 | ... தாவீது |
| காத் | ... 990 — 970 | ... தாவீது |

2. பபிலோனுக்கு நாடுகடத்தப்படமுன் : எச்சரிக்கை மனந்திரும்ப அழைப்பு.

| | | | |
|---|---|---|---|
| வட அரசு | எலியாஸ்... | கி.மு. 876 | ... ஆக்காப் |
| | எலிசேயு .. | கி.மு. 842 | .. ஜெகொரா |
| | ஆமோஸ்... | கி.மு. 760 | ஜெறொபோவாம் |
| | ஓசி ... | கி.மு. 745—735 ... | ,, |

| | | | |
|---|---|---|---|
| தென் அரசு | இசையாஸ் 1 ... | கி.மு. 740—700... | ஆக்காஸ், எசெக்கியாஸ் |
| | மிக்கேயா .. | கி.மு. 750—686 .. | ,, |

3, நாடுகடத்தலின்பொழுதும் அண்மையிலும்: ஆறுதல், நம்பிக்கை

| | | |
|---|---|---|
| நாகூம் | கி.மு, 667 ... 612 ... | யோசியா |
| சொப்போனியா | கி.மு: 630 ... 620 ... | ,, |
| அபக்கூக் | கி.மு. 620 ... 610 .. | ,, |
| ஜெரேமியா | கி.மு. 628 ... 586 ... | யோசியா செடெக்கியா |
| எசெக்கியேல் | கி.மு. 592 ... 572 .. | பபிலோனியாவில் நாடுகடத்தப்பட்டவர் மத்தியில் |
| இசையாஸ் 11. | கி.மு. 540 ... ... | ,, |

4. நாடுகடத்தல் முடிந்து ஜெருசலேம் திரும்பியபின் : ஊக்கம், உற்சாகம், மகிழ்ச்சி

| | | |
|---|---|---|
| அக்காயுஸ் | கி.மு. 520 | ... ஆலயத்தைத் திரும்பக் கட்டுகையில் |
| சக்கரியாஸ் | கி.மு. 520 ... 218 | ,, |
| மலக்கியா | கி.மு. 460 | ... ,, |
| ஒபேதியா | | |
| யோனாஸ் | | |
| யோவேல் | கி.மு. 400 | |
| இசையாஸ் 111; | | |

**சாமுவேல் :** (1020) இவர்தான் கடைசி நீதிபதியும், தனி அழைப்புப் பெற்ற முதல் இறைவாக்கினருமாவார். இவர் லேவிகோத்திரத்தைச் சேர்ந்த எல்கானா, ஆனா என்பவர்களின் புதல்வர். இவர் சிறுவயதிலேயே இறைவ

னுக்கு அர்ப்பணிக்கப்பட்டு பெரிய குரு ஏலியால் சீலோவில் பயிற்றப்பட்டவர். சிறந்த ஒழுக்கமும், பணிவும் உடையவர். இறைவனால் அழைக்கப்பட்டு, ஏலிக்கும், அவர் புதல்வர்களுக்கும் வரவிருக்கும் தண்டனையை அறிவிக்கப் பணிக்கப்பட்டவர். இஸ்ராயேலரைத் தண்டிக்க இறைவன் பயன்படுத்தும் கருவியே பிலிஸ்தீனர் என்றதை அறிவித்தவர். இவர் இஸ்ராயேலருடைய முடியாட்சி தோன்றிய இக்கட்டான கட்டத்தில் பணிபுரிந்தவர். முடியாட்சி இறைவனை நிந்திக்கும் செயல் என்ற கொள்கையுடையவர். ஆனால் இஸ்ராயேலரின் பிடிவாதத்தின் பொருட்டும், இறைவனால் பணிக்கப்பட்டும் சவுலை முதல் அரசனாக அபிஷேகம் செய்தவர். சவுல் யாவேயின் கட்டளையை முழுமையாக நிறைவேற்றத் தவறிய பொழுதும் (1 சாமு. 15: 1 — 35), சாமுவேலுக்காகக் காத்திராமல் அவசரப்பட்டுத் தானே பலி ஒப்புக்கொடுத்த பொழுதும் சவுலைக் கண்டித்து, அவன் ஆட்சியின் முடிவை அறிவித்தவர்.

இவர்தான் சவுலுக்குப் பதிலாக தாவீதை அரசனாக அபிஷேகம் செய்தவர். சவுல் தாவீதை கொல்லத் தேடியபொழுது அவருக்குப் புகலிடம் கொடுத்துப் பாதுகாத்தவர். இவர் எல்லாராலும் மதிக்கப்பெற்ற ஓர் இறைவாக்கினராகத் திகழ்ந்தார்.

நாத்தான்: கி.மு. (1010 – 960) தாவீது, சலமோன் அரசர்கள் காலத்தில் வாழ்ந்த புகழ் பெற்ற இறைவாக்கினர். தாவீதின் நம்பிக்கையைப் பெற்றவர் எனினும் அவர் தவறியபொழுது அஞ்சாமல் எடுத்துரைத்தவர். தாவீது ஆலயத்தைக் கட்ட விரும்பினாலும், அது தாவீதின் மகன் சலமோனால் கட்டப்படும் எனவும், தாவீது குடும்பம் என்றும் நீடிக்கும் என்றும அறிவித்தவர். (2 சாமு 7: 2 — 16). தாவீது ஊரியாசைக் கொலைசெய்து அவன் மனைவியை அபகரித்தபொழுது, அவனைக் கண்டித்து, இறை மன்னிப்பை அறிவித்தவர். (2 சாமு. 12:11). தாவீதின் மூத்த மகன் அந்தோனியாசு தாவீதுக்குப் பின் அரசனாக வர முயற்சியெடுக்க, தாவீதைக் கொண்டு சலமோனை அரசனாக அபிஷேகம் செய்து, அரசனாகப் பிரகடனம் செய்தவர். (1. அர. 1: 5).

காத்: இவரும் தாவீது அரசன் காலத்தவர்: சவுல் தாவீதைக் கொல்லத் தேடியபொழுது யூதாவுக்குச் சென்று, பாதுகாப்பு பெறும்படி கூறியவர். (1 சாமு 22:5). பின்பு இஸ்ராயேலரின் தொகையைக் கணக்கெடுத்த குற்றத்திற்காக இறைவனின் தண்டனையை அறிவித்தவர்.

எலியாஸ்; (876 — 853) வட அரசில் (இஸ்ராயேல்) பணி புரிந்த பெரிய இறைவாக்கினர். இஸ்ராயேலின் அரசன் ஆக்காப்பின் காலத்தில் விக்கிரக ஆராதனைக்கு எதிராகப் போராடியவர், ஆக்காப்புக்கு அவன் பிறதெய்வங்களை வழிபட்ட பாவத்திற்கு தண்டனையாக வரவிருக்கும் பஞ்சத்தை அறிவித்தவர். பஞ்சகாலத்தில் சரெப்தா ஊர் விதவை அவருக்கு உணவு அளித்தபடியால் அவளுக்குக் குறையாத தானியமும் எண்ணெயும், அவள் மகன் இறந்தபொழுது உயிரும் அளித்தவர். (1 அர. 17:17). பாவாலின் தீர்க்கதரிசிகளுடன் போட்டியிட்டு உண்மை இறைவன் யாவேயின், வழிபாட்டை நிலைநாட்டியவர். (1 அர. 18:16). மன்னன் ஆக்காப் நாபோத் என்ற குடியானவனைக்கொன்று அவன் திராட்சைத் தோட்டத்தைப் பெற முயன்றபொழுது எலியாஸ் கொதித்தெழுந்து சமூக நீதியின் முதற்பாடத்தை அவனுக்குக் கற்பித்தார். (1 அர. 21:17) அரசன் ஆக்காப்பின் மரணத்தையும் அவன் குடும்பத்தின் வீழ்ச்சியையும் முன்னறிவித்து தமக்குப் பதிலாக எலிசேயுவை அபிஷேகம் செய்தார். (1 அர. 19:15). இறுதியில் எலியாஸ் சூனா தேரில் ஏறி, சூறாவழியின் மூலம் விண்ணகம் ஏறினார். இறைவாக்கினருக்கெல்லாம் பிரதிநிதி எலியாஸ் என்றும், அவர் இறுதிநாளில் மீண்டும் வருவார் என்றும் இஸ்ராயேலர் கருதினர்.

எலிசேயு: எலியாசைத் தொடர்ந்து வட அரசில் இறைவாக்கினராகப் பணிபுரிந்தவர். இவர் தம் பணியின் போது பல புதுமைகளைச் செய்தவர். ஜெரிக்கோவில் உப்புத் தண்ணீரை நல்ல நீராக மாற்றியவர் (2. அர. 2:19). பெத்தலில் தம்மைக் கேலி செய்த நாற்பத்திரண்டு சிறுவர்களைச் சபித்து கரடிகளுக்கு இரையாக்கியவர். (2 அர. 2:23). ஒரு விதவை வீட்டிலிருந்த எண்ணெயை அதிகரித்தவர். (2 அர. 4:1). ஒரு சூனாமித்தாளுக்கு ஒரு குழந்தை பிறப்பாளென்று முன்னறிவித்து, அக்குழந்தை இறந்தபொழுது உயிர்ப்பித்தவர். (2 அர. 4: 8). சீரிய அரசனுடைய படைத் தலைவன் நாமானைத் தொழுநோயிலிருந்து குணமாக்கினார். (2 அர. 9:1). இப்படியாகப் பல புதுமைகள் செய்தார். சீரிய அரசனுடைய மரணத்தையும், ஆக்காப்பினுடைய வம்சத்தின் முடிவையும் முன்னறிவித்தவர். கெட்டுப்போன அம்ரி அரசனின் வம்சத்தை அழித்து அரசை ஜெகுவிடம் ஒப்படைத்தார்

ஆமோஸ்: (கி.மு. 783 — 743) இவர் யூதாவிலுள்ள பெத்லகேமுக்கு அருகிலிருந்த தெகுவே ஊரைச் சேர்ந்தவர். இவர் பன்னிரு சிறிய இறைவாக்கினருள் ஒருவர் ஆடு, மாடுகளை மேய்த்துச் சீவனம்

செய்து கொண்டிருக்கையில், எவ்வித ஆயத்தமுமின்றி இறைவனால் திடீரென அழைக்கப்பட்டு, இறைவாக்குரைக்க வட அரசுக்கு அனுப்பப்பட்டவர். வட அரசு (இஸ்ராயேல்) சிறப்பாக பெத்தலும், சமாரியாவும் இவருடைய பணித்தளங்களாக இருந்தன. இவர் ஜெரோபோவாம் 11: ஆட்சி செய்த காலத்தில் பணியாற்றியவர். இந்நாட்களில் இஸ்ராயேல் சமூக வளர்ச்சியில் முன்னேறியிருந்தது. இது வட அரசின் பொற்காலம் என அழைக்கப்பட்டது. சீரியர் முன் கைப்பற்றிய பகுதிகளையெல்லாம் அரசர் மீட்டு, நாடு செழிப்புற்று, செல்வம் கொழிக்கும் நாடாகவிருந்தது. செல்வச் செருக்கும் சுதந்திர வேட்கையும் மக்களின் பழங்கால பாரம்பரியத்தையும் பக்தி ஒழுக்கத்தையும் சிதைக்கத் தொடங்கின கனனேயரின் உற்பத்தி வழிபாடு, இஸ்ராயேலரின் வழிபாட்டிலும் புகுந்தது. கேளிக்கைகளிலும் அறுசுவை உண்டியிலும் வட நாட்டவர். மூழ்கத் தொடங்கினர். அருகில் வாழ்ந்த அசீரிய வல்லரசு தன் உள்நாட்டுக் குழப்பத்தில் மூழ்கியிருந்தமையால், இஸ்ராயேலர் எவருக்கும் அஞ்சாது தம் விருப்பம்போல் வாழத் தொடங்கினர். இறைவனது சட்டங்களும் பழைய உடன்படிக்கையும் மறக்கப்பட்டன பாவ வாழ்வு தலைதூக்கியது. பணக்காரர் ஏழைகளை அடிமையாக்கி, உறிஞ்சிப் பணம் வாங்கினர். அதிகாரிகளும் கையூட்டுப் பெற்று, தம் வருவாயைப் பெருக்கினர். ஏழைகளுக்காக நீதிமன்றத்தில் வாதாட யாருமில்லை. விதவைகளையும், அநாதைகளையும் கவனிப்பார் யாருமில்லை. தேவாலயத்தில் பலிக்குக் குறைவில்லை. இச்சூழ்நிலையில்தான் ஆமோஸ் இறைவாக்குரைக்க தெற்கில் இருந்து வடக்கே அனுப்பப்பட்டார்.

## ஆமோசின் போதனை

பெத்தல் திருத்தலத்தில் வழிபாட்டிற்காகக் கூடியிருந்த பெருந்திரளான மக்கள் மத்தியில் தம் உரையைத் தொடங்கினார். முதலில் புற மறையினரின் அட்டூழியங்களைச் சுருங்கக் கூறி, தமாஸ்கு, அம்மோன், ஏதோம் போன்ற நாடுகளுக்கு வரவிருக்கும் சாபங்களை எடுத்துரைத்தார். இதை இஸ்ராயேல் ஆமோதித்தபோது, இஸ்ராயேலரின் சீர்குலைந்த, அநீதி நிறைந்த நிலையை அடித்துக் கூறுகிறார். இறைவனின் தலைமையைக் குறிப்பிட்டு அவரை மக்கள் தலைவராக ஏற்று, அவர் சட்டத்தைக் கடைப்பிடிக்க வேண்டுமென்றும் போதித்தார். அநீதிகளை வன்மையாகக் கண்டித்தார். ஊழல்களை மக்களுக்கு எடுத்துக்காட்டினார். ஆலயத்தில் நடைபெறும் ஒழுங்கீனங்களைச் சுட்டிக்காட்டினார். பலி வாழ்வு இல்லாமல்

பலியிடுவதைக் கண்டித்தார். ஒழுக்கக்கேடான வாழ்க்கை நடத்தும் பெண்களை பாஷான் மேச்சல் நிலப் பசுக்களுக்கு ஒப்பிட்டு அடக்கமுள்ள குல விளக்குகளாகப் பெண்கள் விளங்கவேண்டு, மென்று வலியுறுத்தினார். அவர்களைத் திருத்த இறைவன் துன்பங்களை அனுப்பியபோதிலும், அவர்கள் மனந்திரும்பாமல் வாழ்வதைக் கவலையுடன் சுட்டிக்காட்டினார். இஸ்ராயேலை ஓர் இளம் பெண்ணுக்கு ஒப்பிட்டு, அவள் இறந்ததை யிட்டுப் புலம்பினார்.

இஸ்ராயேலர் விவிலியத்தில் காணப்படும் "ஆண்டவரின் நாள்" — ஐ தம் பகைவர்களைத் தீர்ப்பிட இறைவன் தோன்றும் நாளென்று எண்ணினர். மாறாக இறைவன் தவறு புரிந்த எல்லாத் தனி நாட்டையும் சமூகத்தையும், மனிதனையும் தீர்ப்பிட வரும் நாளென விளக்குகிறார். புறவினத்தாரைவிட இறைவனிடமிருந்து அதிக சலுகை பெற்று, சட்டங்களைச் சரிவர அறிந்துள்ள இஸ்ராயேல் இனமே அந்நாளில் அதிக தீர்ப்புக்கு உள்ளாகுமென எச்சரிக்கிறார். ஐந்து காட்சிகள் வழியாக இறைவன் இஸ்ராயேலர் மேல் கொண்டுள்ள கோபத்தை விபரிக்கின்றார். ஆமோஸ் இறைவன் இஸ்ராயேலரைத் தீர்ப்பிட்டு அழிக்கும் நாள் கோரமான நாள் எனக் கூறி மக்களை மனந்திரும்ப அழைகின்றார்.

ஆமோசின் இறைவாக்குகள் கடுமையாகவே இருந்தன இறைவனை மறந்து வாழ்ந்த சுகபோகிகளுக்கு இவை வேம்பு போல் கசந்தன. செல்வந்தர்கள் சினமுற்றனர். குருக்கள் எதிர்த்தனர். "உம் போதனைகள் தேவையில்லை: உம் நாட்டிற்கு ஓடிப்போய் பிழை" என்றனர். ஆமோஸ் இஸ்ராயேலர் மனந்திரும்பவேண்டும் என்றே இக்கடுமையான சொற்களைப் பாவித்தார். கோபம் தண்டனைக்கு மத்தியில் நம்பிக்கையையும் அளிக்கிறார். மனந்திரும்பி மன்னிப்புக்கேட்பவர் அழியமாட்டாரென உறுதிகூறினார். ஆகவே ஒவ்வொருவரும் பொறுப்புணர்ச்சியுடன் நடந்து மனச்சாட்சியின் இறைவனின் குரலுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும் என அறிவுறுத்துகின்றார். இஸ்ராயேல் இறைவனால் தெரிந்தெடுக்கப்பட்ட இனம். இதிலிருந்துதான் மீட்பர் தோன்றுவார்; மனந்திரும்புவோரைக் கொண்டு ஒரு புதிய இறைவனுக்குகந்த கூட்டம் உருவாகும்; இதற்கு இறைவனே காரணம் என்ற நம்பிக்கையில் தம் இறைவாக்கை முடிக்கிறார். இவர் சமூக நீதியில் இறைவாக்கினரென அழைக்கப்படுகின்றார்;

ஓசேயா: ஓசேயாவும் ஆமோசும் ஒரே காலத்தவர்கள். ஓசேயா ஏரோபோவாம் 11 அரசரின் இறுதிக்காலத்திலிருந்து இஸ்ராயேல் அரசு அழியுமட்டும் பணிபுரிந்தவர். (743 — 734 ). இஸ்ராயேலின் பொற்கால முடிவில், ஏரோபோவாம் 11 இன் மரணத்திற்குப் பின், இஸ்ராயேல் அரசு ஆட்டங்கண்டது. உள்நாட்டுக் குழப்பங்கள் ஏற்பட்டன. மன்னர்களுக்கு எதிராக சதித் திட்டங்கள் உருவாகின. அரசர்கள் வலுவற்றவர்களாயினர். எகிப்து, அசீரியா நாடுகளுடன் கூட்டுச் சேர்ந்து ஆட்சி நடத்த முயன்றனர். அசீரியா வலுவுற்றது. அசீரிய அரசன் திக்ளாத் பலசார் சமாரியாமீது படையெடுத்து இஸ்ராயேலைக் கைப்பற்றினான். கி.மு. 721 இல் சமாரியா வீழ்ந்தது. வடஅரசும் முடிந்தது. இஸ்ராயேலர் நாடுகடத்தப்பட்டனர். இத்தகைய பின்னணியில்தான் ஓசேயா அங்கு இறைவாக்குரைத்தார்.

இஸ்ராயேல் யெருசலேமிலிருந்து பிரிந்து வாழ்ந்தது. கனேனயரின் பாவால் என்ற உற்பத்திக் கடவுளின் வழிபாடு இஸ்ராயேலர் மத்தியிலும் பரவியது. இளம் பெண்கள் தங்களையே பாவாலுக்கு அர்ப்பணம் செய்து, அதை வணங்க வரும் ஆண்களுடன் உடலுறவு கொள்வதைப் புனித செயலாகக் கருதினர். யாவேயை மறந்து விளைச்சல், போரில் வெற்றி பெற பாவாலை வழிபட்டனர். இப்படிப்பட்ட ஒரு வேசிப் பெண்ணை இறைவன் ஓசேயாவிற்கு மனைவியாகக் கொடுத்து அவர்கள் வாழ்க்கையில் இஸ்ராயேலருக்கும் தனக்கும் இடையேயுள்ள உறவை உணர்த்துகிறார். (1: 2). ஓமர் மூன்று பிள்ளைகளைப் பெற்றாள். இப்பிள்ளைகள் இஸ்ராயேல் இனத்தைக் குறித்தனர். குழந்தைகளை அன்பு செய்து சீராட்டி, நடைபழக்கி விழும்பொழுது அரவணைத்து வளர்ப்பதுபோல் இறைவனும் இஸ்ராயேலை வளர்த்தார் இறைவன் இப்பிள்ளைகளுக்குக் கொடுத்த பெயர்கள யாவே இஸ்ராயேலர் இனத்தின்மேல் கொண்டுள்ள வெறுப்பை உணர்த்தியது. நாளடைவில் ஓமர் வேற்று ஆண்களை விரும்பிச் சென்று, வேசியாக வாழத் தொடங்கினாள். ஓசே மன அமைதி இழந்தார். பல தொல்லைகளுக்கு ஆளானார். தான் நிறைய அன்பைப் பொழிந்த தன் மனைவியின் கள்ளக்காதலைக் கண்டு கண்ணீர் விட்டார். எனினும் ஓசேயா அவற்றையெல்லாம் பொறுமையாக ஏற்று, அவளை இன்னும் அதிகமாக அன்பு செய்தார். தன் மனைவி தன் தவறை உணர்ந்து, விரைவில் திரும்பி வருவாள் என எதிர்பார்த்தார். அவளிடம் சென்று நெறிகெட்ட வாழ்வை விட்டு, நேர்மையான வாழ்வு வாழ அழைத்தார் அவளும் தன் தவறை உணர்ந்து தன் கணவனிடம் திரும்பினாள்.

இந்தக் கசப்பான அனுபவத்தின் வழியாக இஸ்ராயேலருக்குக் கடவுள் காட்டிய அன்பையும், இஸ்ராயேலரின் பிரமாணிக்கமற்ற வாழ்வையும், தொடர்ந்து கடவுள் காட்டிவரும் கருணையையும் உணர்த்தினார். இறைவன் இஸ்ரேலரிடமிருந்து பிரதி அன்பை எதிர்பார்க்கிறார் என்பதையே ஓசியா தம் வாழ்நாள் முழுவதும் உணர்த்தினார். இறைவனுக்கும் இஸ்ராயேலருக்குமிடையே உள்ள உறவை கணவனுக்கும், மனைவிக்கும் இடையேயுள்ள தூய புனித அன்பிற்கு ஒப்பிடுகிறார். தெய்வங்களின் திருமணத்தை எதிர்த்த இஸ்ராயேலர் இப்போதனைகளையும் எதிர்த்தார்கள். இறையன்புக்கு இறை அறிவு அவசியம். இவ்வறிவின் விளைவுதான் ஒழுக்கம், நன்னெறி, அன்பு, பிரமாணிக்கம். ஒரு நாடு வளர இறையறிவு வளர வேண்டும் எனப் போதித்தார். இறைவன் காட்டிய அன்பிற்கு இஸ்ராயேலர் காட்டிய கீழ்ப்படிதலைப், பிரமாணிக்கத்தை விடியற்காலை மேகத்திற்கு, கதிரவனைக் கண்ட பனிக்கு ஒப்பிடுகின்றார் ஓசேயா. இவர் இறை அன்பின் இறைவாக்கினர் என்றழைக்கப்படுகின்றார்.

தொடர்ந்து இஸ்ராயேல் நாட்டில் நிலையான அரசு இல்லாததால் அங்கு காணப்படும் சதித்திட்டங்கள், கொலை கொள்ளைகளை எடுத்து உணர்த்துகிறார். பேராசையால் சேர்ந்த பணம் நிலை நிற்காது என எச்சரிக்கிறார். உண்மையான அன்பு இல்லாத பலியை இறைவன் விரும்புவதில்லை எனக்கூறி அவர்கள் பலியிடுவதைக் கண்டிக்கிறார். இஸ்ராயேல் இனம் மனந்திரும்பாவிடில் மடிவது உறுதி என எடுத்துரைக்கிறார். இஸ்ராயேலின் அழிவைப் பற்றிக் கூறினாலும் தம் தீய செயல்களை ஒதுக்கிவிட்டு யாவேயிடம் திரும்பிவந்தால் மீட்பு உண்டு. என்ற நம்பிக்கையையும் அளிக்கிறார். தவறை உணர்ந்து தன்னிடம் திரும்பி வந்த மனைவியை ஏற்றதுபோல், யாவேயும் தம்மிடம் மனந்திரும்பி வருவோரை மகிழ்வுடன் ஏற்றுக்கொள்வார்.

இசையாஸ் 1. : இறைவாக்கினருள் தலைசிறந்தவர் இசையாஸ். இவர் உயர் குடும்பத்தில் பிறந்தவர் தென்னரசைச் சார்ந்தவர், அரசர்களின் செல்வாக்கைப் பெற்றவர்; 742இல் இறைவாக்குக் கூற அழைக்கப்பட்டவர், ஒசியாஸ், யோவாத்தான், ஆக்காஸ், எசெக்கியாஸ் என்ற அரசர்கள் காலத்தில் வாழ்ந்தவர். இறைவாக்கினர் ஓசேயின் குரலும் இவரின் குரலும் ஒரே காலத்தில் ஒலித்தன. சுமார் 55 ஆண்டுகள் இறைவாக்கு உரைத்தார். இஸ்ராயேல் இனத்தில் பல மாறுதல்களைக் கண்டு, அவர்கள் வெற்றி தோல்விகளில் பங்கு

எடுத்தார். இசையாஸ் ஆகமத்தில் 1 — 39 அதிகரரங்களில் இசையாசைபற்றியும், ஒசியாஸ் (781 — 740) யோவாத்தஸ் (740 — 734) ஆக்காஸ் (734 — 728) எசெக்கியாஸ் (728 — 699) என்பவர்களின் ஆட்சிக்காலத்தைப்பற்றிய குறிப்புகளைக் காண்கிறோம். 40 — 55 அதிகாரங்களில் 200 ஆண்டுகளுக்குப் பிற்பட்ட முற்றிலும் மாறுபட்ட பபிலோனியாவுக்கு நாடு கடத்தப்பட்ட யூதர் மத்தியில் பணிபுரிவதைக் காண்கிறோம். 56 – 66 ஆம் அதிகாரங்கள் இன்னும் பிற்காலத்தில் மீண்டும் பலஸ்தீனாவுக்குத் திரும்பி வந்த யூதர் மத்தியில் பணியாற்றுவதைக் காண்கின்றோம். இவ்விரண்டு பாகங்களும் பிற்காலத்தில் வாழ்ந்த ஒருவரால் எழுதப்பட்டு பின் இசையாசுடன் சேர்க்கப்பட்டிருக்கவேண்டும், இவ்வாசிரியரை 2 ஆம் இசையாஸ் என அழைப்பர்.

## இசையாசின் போதனை

இசையாஸ் நீதியின் இறைவாக்கினர். தன் காலத்தில் இருந்த சிலை வழிபாட்டையும், சமூகத் தீமைகளையும் அவர் எதிர்த்தார். செல்வந்தர்களையும் ஆற்றல் வாய்ந்தவர்களையும் அச்சுறுத்தினார். சாமுகரையும் வெளிவேடக்காரரையும் தாக்கினார். யூதேயா செல்வச் செருக்கால் யாவேயை மறந்தது. அரசனின் அரண்மனையில் பொன்னும் வெள்ளியும் நிறைந்திருந்தன. இவ்வுலகப் பொருள்களே மக்களின் கடவுளாயின. யாவேயை மறந்தனர். இதை உணர்த்துகிறார் இசையாஸ். (1: 2 : 3), வரவிருக்கும் தண்டனையை அறிவித்து யூதாவைத் தடிகொண்டு தாக்கப்பட்டுக் குற்றுயிராய்க் கிடக்கும் நாடாக உருவகிக்கிறார். பலிகளையல்ல மனமாற்றத்தையே இறைவன் விரும்புகிறாரெனக் கூறி, மனந்திரும்ப அழைக்கிறார். ஜெருசலேமின் பழங்கால எழில் நிலையுடன் இன்றைய இழிநிலையை ஒப்பிட்டு, அங்கு நடைபெறும் அநீதிகளை, தலைவர்கள் கையூட்டுப் பெறுவதை, கொள்ளையடிப்பதை எடுத்துக் கூறுகின்றார். (1; 21 - 23) பெண்கள் அடக்க ஒடுக்கமற்ற ஆடம்பர வாழ்வாற் கொண்டு வந்த இழிவை எடுத்துக்கூறுகிறார். ஆண்டவர் அவர்களின் ஆடை அணிகலன்களையும், நகைநட்டுகளையும் உரிந்து போடுவாரென எச்சரிக்கிறார். (3: 16 – 23) ஆண்டவரின் நாள் இறைவன் அனைவருக்கும், யூதர்கள் உட்படத், தீர்ப்பிடும் நாள் என்றும் நினைவூட்டுகிறார். யூதா நாட்டையும், அதன் பிரமாணிக்கமின்மையையும், வரவிருக்கும் அழிவையும் திராட்சைத் தோட்டம் பற்றிய கவிதையால் விளக்குகிறார். (5 : 1 - 6)

## இம்மானுவேல் இறைவாக்கு

அசீரியா இஸ்ராயேலரையும், சீரியாவையும் அழிக்க முற்பட்டபோது அதை எதிர்க்க இஸ்ராயேலும், சீரியாவும் ஒன்று சேர்ந்தன. யூதா நாட்டு அரசனான ஆக்காசையும் தம்முடன் கூட்டுச் சேர அழைத்தபொழுது ஆக்காஸ் மறுக்கவே, சீரியா இஸ்ராயேல் கூட்டணி யூதாமேல் படையெடுத்தது. இதைக் கண்டு ஆக்காஸ் நடுங்கியபொழுது இசையாஸ் அரசனிடம் சென்று அஞ்சவேண்டாம் என்றும், யாவேயில் விசுவாசம் கொள்ளும்படியாகவும் கூறினார். ஆனால் ஆக்காஸ் யாவேயின் மேல் நம்பிக்கை வையாமல், மோலக் கடவுள் மேலும், அசீரிய அரசன் மேலும் நம்பிக்கை வைத்தான். இந்த வேளையில் யாவே யூதாவைக்காப்பார் என்பதற்கு அடையாளமாக மெசியாவின் வருகை பற்றிய இம்மானுவேல் இறைவாக்கைக்கூறினார். (7 : 14). எதிரி நாடுகளின் அழிவை முன்னறிவித்தார். தொடர்ந்து (9 ; 11) வரவிருக்கும் மெசியா தாவீது குலத்தில் தோன்றும் அரசராக இருப்பார் எனக்கூறி. அவரின் சிறப்பியல்புகளையும், அவர் காலத்தில் நிலவும் நீதி, அமைதி, செழிப்பு போன்ற பண்புகளையும் எடுத்துக் கூறுகிறார். (11 : 6 - 8).

இசையாஸ் முன்னறிவித்தபடி எதிரி நாடுகள் அழிவுற்றன, அசீரியாவுக்கு இஸ்ராயேல் அடிமையாயிற்று அதேவேளை அசீரியா யூதாவைத் தண்டிக்க இறைவன் பயன்படுத்தும் பிரம்பாகவும்மாறியது. ஆக்காஸ் அசீரியருடன் கூட்டுச் சேர்ந்தது, அசீரியர் யூதவுக்குள் நுழைவதற்கு வழிவகுத்தது. அசீரிய ஆதிக்கமும், அவர்களின் தெய்வங்கள், தேவதைகள், வழிபாட்டு முறைகள் என்பனவும் யூதாவுக்குள் புகுந்தன. ஆக்காசின் மரணத்தையடுத்து வந்த அரசன் எசெக்கியாஸ் தன் மறையைப் புதுப்பித்து அந்நிய தெய்வங்களை அகற்ற முயற்சித்தான். இதை எதிர்த்த அசீரியரைத் தோற்கடிக்க எகிப்தியரின் உதவியை நாடவே இசையாஸ் அவ்வாறு செய்ய வேண்டாமென அவனை எச்சரித்தார். தனித்து நின்று யாவேயின் உதவியில் நம்பிக்கை வைக்கும்படியாகக் கூறினார். ஆனால் அவன் கேட்கவில்லை. முடிவில் எகிப்தும், யூதாவின் பல பகுதிகளும் அழிந்தன. ஜெருசலேம் மட்டும் காப்பாற்றப்பட்டது. பபிலோனியா, அசீரியா என்பன இறைவன் பயன்படுத்தும் கருவிகள். அவர் பயன்படுத்தும் பொழுது எவர் கூட்டுச் சேர்ந்தாலும் அதை அழிக்கமுடியாது. ஆனால் அக்கருவிகளின் வேலை முடிந்தவுடன் அவையும் ஆண்டவரால் அழிவுறும். எனவே பிறநாடுகள் இறுமாப்புக் கொள்ள இடமில்லை என எச்சரிக்கிறார். ஈற்றில் எசெக்கியாஸ் சாகும்நிலையில் நோவாய்ப்பட்டிருக்கையில் அவனுக்காக மன்றாடிக் குணம் பெறச் செய்தார்.

இறைவன் தூயவர் என்பது அவரை சொள்ளை கொண்ட எண்ணம். அவர் எல்லாம் கடந்தவர். அவருக்கு ஒப்பானவர் எவருமில்லை. ஏனைய அரசுகள் எல்லாம் அவரின் பணியாட்கள். தூய்மையே உருவான யாவேயை, தூய செராபீம்கூட அவர் முன், முகத்தை மூடி, முடிவின்றிப் புகழ்பாடுகின்றன.

இசையாஸ் 11. (40 — 55) இங்கு கூறப்பட்டிருக்கும் செய்திகள் 200 ஆண்டுகளுக்குப் பின், பபிலோனிய, பேர்சிய நாடுகளின் பின்னணியில் காணப்படுகின்றன: யெருசலேம் அழிந்துவிட்டது. சைரஸ் மன்னன் பபிலோனியாவை அழிக்க முயன்றான். விரைவில் அது வீழ்ச்சியுறும் என்ற 6 ஆம் நூற்றாண்டுச் செய்திகளே இடம்பெறுகின்றன. இங்கு இஸசயாஸ் ஆறுதலின் இறைவாக்கினராகக் காணப்படுகிறார். கடவுளைப் பற்றி மேன்மையான கருத்துக்கள் உள்ளன. கடவுள் படைத்தவர், ஒருவர், ஒப்பற்றவர், இணையற்ற தலைவர், உலகத்தை வென்றவர், ஆற்றல் மிக்கவர், வாழ்வு அளிப்பவர், வரலாற்றை வகுத்தவர், அன்பு நிறைந்தவர், மக்களை மீட்பவர் எனப் போற்றப்படுகிறார்: (40: 1 - 22), யாவேயை பபிலோனிய தெய்வங்களோடு ஒப்பிட்டு, யாவேயின் மேன்மையை எடுத்துரைக்கின்றார். இறைவன் இஸ்ராயேலரின் மீட்பர் என்னும் கருத்து பல இடங்களில் காணப்படுகின்றது. பபிலோனியாவிலிருந்து பாரசீக மன்னன் சைரஸ் II வழியாகவே யாவே இஸ்ராயேலை மீட்பார் என முன்னறிவிக்கப்பட்டது. இறுதியில் ஒரு யாவேயின் ஊழியனைப் பற்றிநான்கு கவிதைகள் காணப்படுகின்றன. அவர் யாவேயால் தெரிந்துகொள்ளப்பட்டவர். ஆவியால் நிரப்பப்பட்டவர், அடக்கமானவர். சிறப்புடையவர், மிக உயர்ந்தவர். ஆனால் அதற்குமுன் அவர் பல துன்பங்களை அனுபவிக்கவேண்டும் எனக்கூறி அவ்வூழியனை "துயரத்தின் மனிதர்" என அழைக்கிறார். இது மனித குலத்தைத் தன் துன்பங்களால் மீட்ட கிறிஸ்துவுக்குக் கொடுக்கப்பட்ட பெயர். 53ஆம் அதிகாரம் அவர் இறைவாக்கின் சிகரம்.

இசையாஸ் 111. (கி.மு. 56 — 66) இப்பகுதி இஸ்ராயேலர் பபிலோனியாவிலிருந்து விடுதலையடைந்து, தம் தாய்நாடு திரும்பியபின்னரே எழுதப்பட்டது. தாய்நாட்டுத் தலைவர்கள், புதுப்பிக்கப்பட்ட யெருசலேம் ஆலயம், ஓய்வுநாள், நோன்பு, செப வாழ்வு ஒழுக்கநெறி, வழிபாட்டு முறைகள் பற்றிப் பேசப்படுகிறது. நல்லவர்களுக்கு ஆறுதல் மொழியும், தீயவர்களுக்கு கடுமையான எச்சரிக்கையும் கூறப்படுகிறது. இறுதியாகத் திருச்சபையையும், விண்ணக வாழ்வைக் குறிக்கும் புதிய யெருசலேம் பற்றிப் பேசப்படுகின்றது.

ஜெரேமியாஸ்: இவர் பெரிய இறைவாக்கினர்களுள் ஒருவர் யெருசலேமிலுள்ள அநாத்தோத்து என்ற ஊரிலே 646 இல் பிறந்தார். தாயின் வயிற்றில் இருக்கும்போதே தேர்ந்தெடுக்கப்பட்டு, இறைவாக்குரைக்க அனுப்பப்பட்ட வர். கி.மு. 626 இல் ஜோசியா அரசன் யூதாவை ஆண்ட காலத்தில் இறைவாக்குரைக்கத் தொடங்கினார் இஸ்ராயேலர் வரலாற்றின் முக்கிய கட்டத்தில் வாழ்ந்து, யூதாவின் அந்திக் காலத்தில் இறைவாக்கு உரைத்தவர். இவர் காலத்திலேயே, இவர் முன்னறிவித்தபடி யூத அரசு அழிந்தது. இறைவனின் ஆணைப்படி கன் இறைவாக்குகளைத் தன் சீடனான பாருக்கைக் கொண்டு எழுதுவித்தார்

## ஜெரேமியாசின் போதனை

யோசியாஸ் காலத்தில் யெருசலேம் ஆலயம் புனரமைக்கப் பட்டபொழுது எல்சியாசு என்ற குருவினால் உபாகமம் கண்டெடுக்கப்பட்டது. இச்சட்டங்களைத் தானும், மக்களும் பின்பற்றி வாழாததை உணர்ந்த யோசியாஸ், சட்டங்களுக்குட்பட்டு வாழ இறைவனுடன் உடன்படிக்கை செய்துகொண்டான்; ஜெரேமியாசின் போதனை இச்சட்ட நூலை ஒத்ததாகவிருக்கிறது. இறைவனுடன் செய்துகொண்ட உடன்படிக்கையிலிருந்து மக்கள் தவறிவிட்டனர். தவறிய மக்களை இறைவன் தண்டித்துத் திருத்துவார். எனவே மக்கள் மனம்மாற வேண்டுமென அழைத்தார். இஸ்ராயேல் செய்த பாவங்களை எடுத்துக் கூறி, அவனுக்கு நடந்ததை அவன் சகோதரி யூதா கண்டும் மனந்திரும்பாமல், தானும் அவ்வழியே சென்று விபசாரம் செய்தாளென உணர்த்தினார். பபிலோனிய படைகள் யூதாவையும் யெருசலேமையும், அழிப்பது உறுதியெனக் கூறினார்; பபிலோனியா இறைவன் தம் மக்களைத் திருத்தப் பயன் படுத்தும் சம்மட்டி என்றார். யோசியாஸ் செய்த சமயச் சீர் திருத்தங்களில் அவருக்குப் பக்கபலமாக இருந்தார் ஜெரேமியாஸ்.

ஜோசியாஸ் 609 இல் எகிப்தியரால் கொல்லப்பட்டதையடுத்து, அவன் மகன் ஜோவாக்கீம் அரசனானான். அவன் ஜோசியாவுக்கு முற்றிலும் மாறானவன். கொடுங்கோலன். வேற்றுத் தெய்வங்களை வழிபட்டான். எகிப்துடன் கூட்டுச் சேர்ந்து அடிமை ஆனவன். மக்களின் சொத்துக்களைச் சுரண்டி, ஆடம்பர வாழ்வு வாழ்ந்தான் இவனுக்கும் ஜெரேமியாவுக்கும் நல்லுறவு இருக்கவில்லை. ஜெரேமியாஸ் யெருசலேம் ஆலயத்துள் நுழையக் கூடாதெனக் கட்டளையிட்டு இருந்தான். இவனுடைய வாழ்க்கையிலும், மக்கள் வாழ்விலும் அவன் காலத்

தில் இறைவழிபாட்டில் நடந்த எண்ணற்ற சவக்கேடுகள், நாசவேலைகள், சிலை வழிபாடுகள் அனைத்தையும் அஞ்சா நெஞ்சுடன் எடுத்துரைத்தார் ஜெரேமியாஸ். மனிதன் எவ்வகையான பாவம் செய்தாலும் மனம் வருந்தி, மீளவும் விழாது இருக்க உறுதிபூண்டால் மன்னிப்பு உண்டென நம்பிக்கையும் ஊட்டுகிறார்.

## எருசலேமின் அழிவு முன்னறிவிக்கப்படல்

எத்தனையோ முறை எச்சரிக்கை விடுத்தும் மக்கள் மனந் திரும்பவில்லை. ஆகவே வெளிநாட்டார் யூதா மீது படையெடுத்து வர அனுமதிக்கப்படுவர். ஆக்கிரமிப்புக் கொடுமையாக இருக்கும். மக்களை அடக்கம் செய்யவும் ஆட்கள் இரார், யெருசலேம் அழிக்கப்பட்டு மக்களும் நாடுகடத்தப்படுவர். யெருசலேம் ஆலயமும் சீலோ போல் அழிக்கப்படும் என எச்சரித்தார். யெருசலேம் ஒரு போதும் அழியாது என்ற எண்ணத்துடன் இருக்க மக்கள், இதைக் கேட்டு அவரைக் கைது செய்து, கொலை செய்யத் தீர்மானித்தனர். ஜெரேமியாசின் வாழ்வு துன்பம் நிறைந்ததாகவிருந்தது. தம்மைத் துன்புறுத்தியவர்களைச் சபித்தார். (18. 20)

சொற்களால் மட்டுமல்ல, சில அடையாளச் செயல்களாலும் தம் செய்தியை அறிவித்தார். ஒரு மட்பாண்டத்தைச் சுமந்து சென்று, தரையில் போட்டு உடைத்து, இவ்வாறு திருத்தமுடியாதபடி யெருசலேம் பட்டணம் உடைக்கப்படும் என்றார். முதுகில் மர நுகத்தைச் சுமந்து கொண்டு தென்னரசு அழிக்கப்பட்டு, மக்கள் நாடுகடத்தப்பட்டு, 70 ஆண்டுகள் அந்நிய நாட்டில் அடிமைகளாக வாழ்வர் என அறிவித்தார்.

ஜோவாக்கிம் இறந்து அவன் மகன் ஜோவாக்கின் அரசனான வேளையில் அவனுக்கு எதிராகவும் இறைவாக்கு உரைத்து, அவனும் பபிலோனியாவுக்கு நாடுகடத்தப்பட்டு, அங்கே இறப்பான் எனக் கூறினார். இவற்றை அறிவித்த போது, அவர் தோல்வி மனப்பான்மை உடையவர் எனக்கூறி, அவரது புத்தகத்தைக் கிழித்தெறிந்து, அவரைப் பாழ்கிணற்றில் இறக்கி விட்டார்கள். ஆனால் அரசரின் அடிமை ஒருவனால் காப்பாற்றப்பட்டுத் தொடர்ந்து இறைவாக்குரைத்தார்: எல்லாம் நிறைவேறியது. 586 இல் யெருசலேம் மக்கள் பபிலோனியாவுக்கு நாடுகடத்தப்பட்டனர். ஜோவாக்கினும் நாடு கடத்தப்பட்டான். அவனுக்குப் பதிலாக செதேசியாஸ் அரசனானான். ஜெரேமியாஸ் சில ஏழை குடியானவர்களோடு யெருசலேமில் விடப்பட்டார். பபிலோனிய மன்னனுக்கு எதி

ராகச் செதேசியாஸ். எகிப்து, ஏதோம், மோவாப், அம்மோனிய நாடுகளுடன் சதிசெய்தபொழுது, அவர்களுக்கு எதிராக இறைவாக்கு உரைத்தார். எகிப்துடன் சேர்ந்து பபிலோனியாவை எதிர்ப்பது மடமைத்தனம். ஏனெனில் இறைவனே பபிலோனிய மன்னனை தம் இடமாக யூதேயா நாட்டின்மீது அனுப்பியுள்ளார். என்றார். யெருசலேமில் எஞ்சியிருந்த யூதர் பபிலோனியாவுக்கு அடிமைகளாக விரும்பாமல், எகிப்துக்குச் செல்ல விரும்பினர். ஆனால் ஜெரேமியா அதை எதிர்த்து நின்றார். அவர்கள் அதற்குச் செவிகொடுக்காமல், பலாத்காரமாக அவரையும் இழுத்துக் கொண்டு, எகிப்துக்கு ஓடினார்கள். அங்கு அவர் இறந்தார்,

எசெக்கியேல்; பெரிய இறைவாக்கினருள் இவரும் ஒருவர், கி.மு. 6ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். யெருசலேமில் முதல் முற்றிக்கையின்போது, தம் மனைவியை இழந்தார். அவரும் கைதுசெய்யப்பட்டு 598 இல் பபிலோனியாவுக்கு நாடு கடத்தப்பட்டார். அங்கு சென்ற 5 ஆண்டில் இறைவாக்குரைக்க அழைக்கப்பட்டார். (1: 1) அந்நிய நாட்டில் 20 ஆண்டுகள் தங்கியிருந்து; அங்கு வாழ்ந்த யூத மக்களிடையே தம் இறைவாக்குப் பணியை நிறைவேற்றினார். பபிலோனியாவில் யூதர்கள் அடிமைகளாக வாழவில்லை. அரசிடமிருந்து காணிகள் பெற்றுச் சுதந்திரமாக, ஓர் சமூகமாக வாழ்ந்தார்கள். அவர்கள் மனதில் இருந்த பெரிய சுமை தாய் நாட்டு ஏக்கமே. தம் சொந்த நாட்டு மதவாழ்வு என்று வருமோ என்று எதிர்பார்த்தனர். ஆரம்பத்தில் விரைவில் சொந்தநாடு திரும்புவோம் என்ற எண்ணத்தில் ஒன்றிலும் ஈடுபடாமல் இருந்தார்கள். அவ்வேளையில் எசேக்கியேல உடனே இது நடைபெறாது என்று கூறி, ஏதாவது உழைப்பில் ஈடுபடச் செய்தார். தொடர்ந்தும் பலர் கைதிகளாகக் கொண்டு வரப்பட்டபொழுது, யூதர் தம் நாட்டுக்குத் திரும்பிப் போவதில் நம்பிக்கை இழந்தனர். அவ்வேளையில் ''நிச்சயமாக ஒரு நாள் போவோம்'' என்று நம்பிக்கை ஊட்டினார் எசெக்கியேல். இவரது நூலின் முதல் 24 அதிகாரங்கள் முதலிரண்டு முற்றிகைக்களுக்கிடைப்பட்ட காலத்தில் யூதேயா நாட்டிலும், யெருசலேம் நகரிலும் இன்னமும் வாழ்ந்து கொண்டிருந்த மக்களுக்காக எழுதப்பட்டவை. மற்றப்பகுதிகளில் அந்நிய நாடுகளுக்கு எதிரான இறைவாக்குகளும், வரவிருக்கும் புதிய ஆலயம், புதிய நகரம், புதிய இஸ்ராயேல் பற்றிய முன்னுரைகளும் காணப்படுகின்றன. இந்நூலில் நமக்குப் புரியாத புதிரான பல காட்சிகள், கற்பனைகள், உருவங்கள், விசித்திரச் செயல்கள் காணப்பட்டாலும் அவற்றின் வழியாகப் பல அரிய கருத்துக்கள் நமக்குத் தரப்பட்டுள்ளன.

1ஆம் பகுதி (1 — 24): இறைவன் மாட்சியுள்ளவர், இறைவன் சீனாய்மலையிலும், யெருசலேம் ஆலயத்திலும் மட்டுமல்ல, எங்கும் இருக்கிறார், அனைத்தையும் அறிகிறார். ஆள்கிறார். அவர் வல்லமையுள்ளவர். அவர் அழைக்கும் இறைவாக்குப் பணியில் மகிழ்ச்சியும் இன்பமும் மட்டுமல்ல துன்பமும், தோல்வியும் உண்டு. ஜெரேமியாஸ் யெருசலேமில் முன்னறிவித்து, நேரடியாகக் கண்டு கொண்டிருக்கும் அழிவை, எசெக்கியேல் காட்சியில் கண்டு அறிவிக்கிறார். யெருசலேம் முற்றிக்கையிடப்படும். அவ்வேளையில் அங்கு பஞ்சமும், பற்றாக் குறையும் ஏற்படும். யூதர்கள் அவமானப்படுத்தப்படுவார்கள் அவர்களில் ஒரு பகுதி பஞ்சத்தாலும், காய்ச்சலாலும் அழிவார்கள். மற்றொரு பகுதி வாளால் வெட்டுண்டு விழுவார்கள். எஞ்சிய பகுதி எப்பக்கமும் சிதறுண்டு ஓடும் என்று எச்சரிக்கிறார். யெருசலேம் ஆலயத்தில் நடைபெறும் விக்கிரக ஆராதனை, சூரிய வழிபாடு போன்ற பாவங்களையும் காட்சியில் காண்கிறார். இத் தீய செயல்களுக்காக மனம் வருந்துவோர் பிழைப்பர். மற்றவர்கள் வாளுக்கு இரையாவார்கள். யெருசலேம் நகரத் தலைவர்களும, மக்களும் வேற்று நாட்டில் அடிமைகளாய் வாழ்வர். உண்மைகள் உருவகங்கள் வழியாக இறைவனுக்கும் இஸ்ராயேலருக்குமிடையே உள்ள நெருங்கிய உறவையும் (கணவன், மனைவி), இஸ்ராயேலின் அக்கிரமங்கள் பிரமாணிக்கமின்மை (ஒல்லா, ஒலிபா என்ற சகோதரிகள்) போன்றவற்றையும் அம்பலப்படுத்தி, அவர்கள் செய்த பாவங்களுக்குத் தண்டனை விரைவில் கிடைக்கும் என எச்சரிக்கிறார். கடவுளுக்குப் பிரமாணிக்கமில்லாமல் செய்யும் ஒவ்வொரு செயலையும் விபசாரம் எனப் பெயரிட்டு, சிலை வழிபாட்டை வேசித்தனம் என அழைக்கிறார்.

2ஆம் பகுதி (25 — 32): இஸ்ராயேலர் யாவேயை மறப்பதற்கும், அந்நிய நாடுகளுடன் கூட்டுச் சேர்வதற்கும், சிலை வழிபாட்டில் ஈடுபடுவதற்கும் அண்டை நாடுகளும் காரணமாய் இருந்தன. இஸ்ராயேலர் துன்புறுத்தப்பட்டு நாடுகடத்தப்பட்ட பொழுது, அந்நிய நாடுகளும் மகிழ்ந்தன. மேலும் ஒரு காலத்தில் இஸ்ராயேலர் யெருசலேமுக்குத் திரும்பி வந்து, யாவேக்குப் பிரமாணிக்கமாய் அமைதியாக வாழவேண்டுமென்றால் அண்டை நாடுகளான அம்மோன், மோவாப், தீர், எகிப்து போன்ற நாடுகள் வீழ்ச்சியுற்று அழிய வேண்டும். எசெக்கியேலின் இந்தக் கருத்தையே அவர் பிற நாடுகளுக்கு எதிராகக் கூறிய இறைவாக்குகள் பிரதிபலிக்கின்றன.

3ஆம் பகுதி: (33 — 35) இறுதிப்பகுதியில் தாய்நாடு திரும்புவதில் நம்பிக்கையிழந்து பபிலோனியாவில் வாழ்ந்த யூதர்களுக்கு நிச்சயமாகத் திரும்புவோம் என

நம்பிக்கையளிக்கிறார், இதை உலர்ந்த எலும்புகள் உயிர் பெற்று எழுந்த காட்சி உணர்த்துகிறது. இஸ்ராயேல் இனம் இறைவனால் மீட்கப்பெற்று, யெருசலேம் திரும்பிச் சென்று இறை மக்களாய் வாழ்வர் என்று உறுதி கூறுகிறார்; இன்று இஸ்ராயேல் படும் துன்பங்களுக்கு அவர்களே பொறுப்பு என்று கூறுகிறார். தம் முன்னோர் செய்த பாவத்திற்காகவே இறைவன் தம்மைத் தண்டிக்கிறார் எனக் கருதிய யூதர்களுக்கு, ஒருவன் செய்த பாவத்திற்கு அவனே பொறுப்பு, அவனவன் செயலுக்கு அவனவனே பேறு பெறுவான் என்று விடை கூறுகின்றார். இஸ்ராயேல் சரித்திரத்தில் இறைவன் நீதியைக் காண்பித்தருளினார். தனி மனிதன் பொறுப்புடையவன், தனிப் பேறு பலன் உடையவன் என்பதை முதன் முதல் போதித்தவர் எசெக்கியேல். ஒவ்வொருவனது மீட்புக்கும் அவனவனே பொறுப்பு என்றாலும், மீட்பின் தொடக்கம் இறைவனே. இறையருளின்றி, ஆவியின் தூண்டுதலின்றி மனமாற்றமோ, மீட்போ கிடையாது: இஸ்ராயேலரின் மேய்ப்பர்களாகிய தலைவர்களும், குருக்களும் தம் பணியில் தவறியபடியால் அவர்களை விலக்கிவிட்டுத் தாவீது என்னும் புதிய மேய்ப்பனை அளிப்போமென்று, வரவிருக்கும் மெசியாவை நல்ல ஆயனாக வர்ணித்து முடிக்கிறார் எசெக்கியேல். இந்தப் புதிய மேய்ப்பனின் கீழ் புதிய யெருசலேம், புதிய ஆலயம், புதிய இஸ்ராயேல் உருவாகும்.

## புதிய ஆயனும் மெசியாவும்

இஸ்ராயேலர் இறைவனையும், அவர் அனுப்பவிருக்கும் மெசியாவையும், தங்கள் சமயத் தலைவர்களையும், குருக்களையும், அரசர்களையும் ''ஆயன்'' என அழைத்தனர், எசெக்கியேல் இஸ்ராயேலர் பபிலோனியாவுக்கு நாடு கடத்தப்பட்டு, அங்கு அடிமைகளாக வாழ்வதற்கு அவர்களின் மேய்ப்பர்களாகிய தலைவர்களும் முக்கிய காரணமாயிருந்தார்கள் எனக் கூறுகிறார். அவர்கள் தங்கள் கடமைகளில் தவறிவிட்டார்கள். தம் மந்தையை மேய்ப்பதற்குப் பதிலாக, அவர்கள் தம்மையே மேய்த்துக்கொண்டார்கள். அவர்கள் வலிமையற்ற ஆடுகளைத் தேற்றவில்லை. பிணியுற்றவர்களைப் பராமரிக்கவில்லை. எலும்பு முறிந்தவற்றிற்குக் கட்டுப் போடவில்லை. காணாமற் போனதைத் தேடவில்லை. மேய்ப்பன் இல்லாததால் ஆடுகள் சிதறுண்டு போயின. காட்டு மிருகங்களுக்கு இரையாயின. ஆயர்கள் தங்கள் கடமைகளிலிருந்து தவறியபடியால், அவர்களை அகற்றிவிட்டு, அவற்றை மேய்க்கும்படி தாவீது என்னும் புதிய மேய்ப்பனை இறைவன் ஏற்படுத்தப் போவதாகக் கூறுகிறார். தாவீது குடும்பத்தில் பிறக்கவிருக்கும் மெசியாவை

நல்ல ஆயனாக வர்ணிக்கின்றார். இந்த நல்ல ஆயனின் கீழ் புதிய யெருசலேம், புதிய ஆலயம், புதிய இஸ்ராயேல் உருவாகும். இப் புதிய ஆயனே இஸ்ராயேலருக்கு மேய்ப்பனாயிருந்து, அவற்றைக் கண்காணித்து, வழி நடத்துவான். கொடிய மிருகங்களை விரட்டிவிட்டு, மந்தையை அச்சமின்றி, கவலையற்று, வாழவைப்பான். அவர்களின் நுகத் தடிகளை முறித்து, அடிமையாக்கினவர்களின் கைகளினின்று அவர்களை விடுவிப்பான் என்கிறார்,

தானியேல் : பெரிய இறைவாக்கினர்களில் இறுதியானவர். தானியேலும் பபிலோனியாவுக்கு நாடுகடத்தப்பட்டு அங்கு மக்கள் மத்தியில் இறைவாக்கு உரைத்தவர். அவர் உருக்கமான விசுவாசமும், தீவிர தேசிய உணர்ச்சியும் உடைய ஓர் இளைஞர். பபிலோனியா அரண்மனையில் கல்வி பயின்றவர். அவர் கனவுகளை விளக்கிக் காட்டி அவைகளின் பொருள்களை எடுத்துரைப்பதில் திறமையுள்ளவர். (தானி. (2: 31). அவரது அறிவின் நிமித்தம் அவர் பபிலோனிய அரசில் ஓர் உயர் அதிகாரியானார்; பொறாமை கொண்ட ஆளுநர்களும், மாநிலத் தலைவர்களும் இவரைக் கொலை செய்யச் சூழ்ச்சி செய்து, சிங்கத்தின் குகையில் போட்டனர். (6: 4). ஆனால் இறைவன் அவரைப் பாதுகாத்து, அவர் விரோதிகளைச் சிங்கத்தின் குகையில் தள்ளச் செய்தார். தானியேல், பேர்சிய அரசன் சைரசின் காலம் வரை இறைவாக்குரைத்தவர்.

யூத மறைக்கும் பிற மறைகளுக்குமிடையேயும் நடந்த போராட்டமே தானியேல் ஆகமத்தின் முக்கிய கருத்தாகும். யூதர்களுக்கு நம்பிக்கையூட்டவும், ஆறுதல் அளிக்கவும், தம் மறையைப் பின்பற்ற ஆர்வமூட்டவும், இறை அரசை எதிர்பார்க்கச் செய்யவும் தானியேல் ஆகமம் எழுதப்பட்டது. இஸ்ராயேலரின் கடவுள் உயிருள்ள கடவுள், எல்லாவற்றையும் அறியும் வல்லமையுள்ளவர், மண்ணையும், விண்ணையும் ஆளும் அரசர். அவரது அரசை எதிர்ப்பவர்கள் அழிக்கப்படுவர். அவருக்கு அடிபணியவர்கள் சமாதானம், இன்பம் பெறுவர் அவரை நம்பினோர் கைவிடப்படார். என்ற கொள்கை சித்திரிக்கப்பட்டுள்ளது. வானவர்கள் இறைவனின் தூதர்கள், உடல் உயிர்ப்பைப்பற்றி இந்நூல் முதலாக எடுத்துரைக்கின்றது. (12: 2) மேலும் மெசியாவின் காலத்தை பற்றியும், கூறுகின்றார். மெசியா வருவார், இறையாட்சியை அமைப்பார், துன்பத்தைப் போக்குவார் தன் அரசை நிலைநாட்டுவார். மெசியா 'மனுமகன்' என அழைக்கப்படுவார். (7: 13). இறையரசு எவ்வாறு இறுதியில் நிறைவேறும் என்று படிப்படியாக அறிவிக்

கிறார். தானியேல் ஆகமத்தில் கனவுலகிலும் காட்சி உலகி லும் வாழ்கின்றோம். *(2: 1 — 49; 3: 98; 7: 1)*. இதில் ஒரு பகுதி அரமேயிக் மொழியிலும், ஒரு பகுதி எபிரேய மொழியி லும், கடைசிப் பகுதி கிரேக்க மொழியிலும் எழுதப்பட்டிருக் கின்றன. எபிரேய பைபிளில் இது இறைவாக்கினரின் நூல்க ளோடு சேர்க்கப்படவில்லை.

மிக்கேயாஸ் : இவர் யூதேயா நாட்டினர். யெருசலேமிலுள்ள மோரசேத் என்ற ஊரில் சாதாரண குடும்பத் தில் பிறந்தவர். யோவாத்தான், ஆக்காஸ், எசெக்கியாஸ் காலத்தில் வாழ்ந்தாலும், எசெக்கியாஸ் காலத்தில்தான் இறைவாக்குரைக்க அழைக்கப்பட்டவர். இசையாசும் இவரும் நேரே காலத்தில் பணிபுரிந்தவர்கள் சமாரியாவின் அழிவை முன்னறிவித்தவர். யூதாவுக்கும் அவ்வித தண்டனை கிடைக்கும் என அறிவித்தவர். வட அரசு செழித்து, வாணி பத்தில் வளர்ந்து, செல்வச் செருக்குடன் வாழ்ந்தது. இதைக் கண்ட தென்னரசு மன்னன் ஆக்காஸ், தன் நாட்டின் செல் வத்தையும், செல்வாக்கையும் அதிகரிக்க விரும்பி அசீரியாவுடன் கூட்டுச் சேர்ந்தான். அதன் விளைவு — செல்வம் பெருகியது; ஆனால் யூத இனத்தின் தூய்மை தொலைந்தது. யாவே மறக்கப்பட்டார். அசீரிய தெய்வங்கள் யெருசலேம் ஆலயத்தி லும், அதன் வழிபாடுகளிலும் நுழைந்தன.

ஆக்காசின் மரணத்தையடுத்து அரசனாக வந்த எசெக்கியாஸ் அசீரிய ஆதிக்கத்தில் இருந்து தன் நாட்டை விடுவிக்கப் பாடு பட்டான். யெருசலேம் ஆலயத்திலிருந்து அசீரிய தெய்வங்களை அகற்றி, வழிபாட்டைத் தூய்மைப்படுத்தினான். இதனால் கோபமடைந்த அசீரிய மன்னன் சென்னாகெரிப் யூகா மீது படையெடுத்தான். ஆனால் யெருசலேம் நகரினுள் அவனால் நுழைய முடியவில்லை. இப்பின்னணியில்தான் மிக்கேயாஸ் இறைவாக்கு உரைத்தார்.

தென்னரசின் செல்வம் பெருகியதோடு, அநீதியும் சதித் திட்டங்களும் உருவாகின, ஏழைகளின் சொத்துக்களைச் சூறை யாடுதல், வாணிபத்தில் வஞ்சகம், பொய் போன்றவைகளும், மனிதனை மனிதன் மதியாமை, அரசர்களின் ஆணவம், நீதிபதி கள் நேர்மையீனம் போன்ற தீய பழக்கங்களும் வளர்ந்தன. இதையெல்லாம் எடுத்துக்கூறி, யாவே யெருசலேமை அழிக்கத் திட்டமிடுவதாக மிக்கேயாஸ் எச்சரிக்கின்றார். இந்த அழிவுக் குக் காரணம் நெறி தவறிய செல்வர்களும், அர்ச்சகர்களும், அரசர்களும், நாட்டுப் பெரியோர்களுமே எனக் கண்டிக்கிறார்;

நாட்டிற்கு வரும் கேடுகள் மக்கள் பாவத்திற்காக இறைவன் அனுப்பும் தண்டனை என விளக்கம் கூறுகின்றார். ஆண்டவர் மக்களிடம் எதிர்பார்ப்பது அவர்களும் தம்மைப்போல் நன்மை, உண்மை, நேர்மை, நீதி, அன்பு, தாழ்ச்சி உள்ளவர்களாக வாழ்வதே. இறைவன் நிச்சயமாக யூதாவை அழிப்பார். ஆனால் ஆண்டவரின் மன்னிக்கும் இரக்கமே இஸ்ராயேலின் நம்பிக்கையின் கொழுகொம்பு. மக்கள் விரும்பினால் மனந்திரும்பி வாழ்வதால் இறைவனின் சீற்றத்தை ஆற்றலாம். இறைவன் பெத்லகேமில் பிறக்கும் புதிய தாவீது வழியாக இஸ்ராயேலை மீளவும் நிலைநாட்டுவார் என்ற நம்பிக்கையுடன் தன் இறைவாக்கை முடிக்கிறார் மிக்கேயாஸ்.

சொப்போனியாஸ் : இவர் ஜோசியாஸ் அரசன் காலத்தில் (630 — 625), இறைவாக்குரைத்தவர். ஜோசியாசுக்கு முன்னே மனாசேயும் (687 — 642), அவனுடைய மகன் ஆமோனும் (642 — 640) யூதாவை ஆண்டார்கள். அவர்கள் மிகவும் தீயவர்கள். மனாசே ஆணவம் பிடித்தவன். அவன் ஆட்சிக் காலத்தில் அநியாயமும், அக்கிரமமும் யூதாவில் புகுந்தன. அந்நாட்களில் அசீரியா மாபெரும் வல்லரசாகத் திகழ்ந்தது. மனாசே அசீரியாவுக்குத் திறை கொடுத்து, அதன் பாதுகாப்பில் வாழ்ந்து வந்தான். அரசியலிலும் சமய வழிபாட்டிலும் அசீரியருக்கு அடிமையானான். பாவாலுக்குப் பலிப்பீடங்களைக் கட்டி, விண்மீன்களை வழிபட்டு, யூத மக்களையும் தீயதைப் புரியும்படி தூண்டினான். மாசற்றவர்களின் இரத்தத்தைச் சிந்தினான். அவனைப் பின்தொடர்ந்து ஆமோனும் தந்தையின் தீய வழியிலேயே நடந்தான்.

ஆமோனைத் தொடர்ந்து அவன் மகன் ஜோசியாஸ் ஆட்சிக்கு வந்தான். இவன் யெருசலேம் ஆலயத்தை புனரமைத்தான். யாவேயின் வழிபாட்டைப் புதுப்பித்தான். இவன் காலத்தில்தான் உபாகமம் கண்டுபிடிக்கப்பட்டது. இவனது ஆட்சியின்போதுதான் சொப்போனியாஸ் இறைவாக்கு உரைத்தார். இவர் எசெக்கியாசின் குலத்தில் தோன்றியவர். எனவே அரசவையில் செல்வாக்கு இருந்தது. இவர் மனாசே, ஆமோன் காலத்தில் இடம்பெற்ற சிலை வழிபாடு, ஒழுக்கச் சிதைவுகளைக் கண்டித்துப் பேசினார். இறைவனின் நாள் புறவினத்தவர்கள் மட்டுமல்ல, இஸ்ராயேலரும் பரிசோதிக்கப்பட்டு, தீர்ப்பிடப்படும் நாள். அந்நாள் அச்சமும் அதிர்ச்சியும் தரும் நாள். பாவம் செய்தோரின் புழுதி கொட்டப்படும் நாளென்று எச்சரிக்கிறார். அந்நாளில் 'இத்தீய பழக்கங்களுக்குக் காரணமாக' இருந்த மனாசே, அவன் அமைச்சர்கள், அதிகாரிகள், அசீரியர் இறைவன் வார்த்தைக்குச் செவிகொடுக்காததை குறிப்பிட்டு, யெருசலேம் மக்கள் தண்டனை பெறுவர் எனக் கூறினார்.

ஆனால் இத்தகைய சுடும் சொற்களிடையே நம்பிக்கை யும் ஊட்டுகிறார். தீய மக்களிடையே நல்லவர்களும் காணப் படுகிறார்கள், இவர்களுக்கு இறைவன் இரக்கம் காட்டி, மீட் பாரென உறுதி கூறுகிறார்.

நாகூம் : இவர் தென்னரசில் இறைவாக்கினர் ஜெரேமியாஸ் காலத்தில் வாழ்ந்தவர் (663 — 612). மிகுந்த இறைபற்றுள்ளவர். அசீரிய அரசு 300 ஆண்டுகளாக யூதாவை யும் ஏனைய அண்டை நாடுகளையும் அடக்கி ஆண்டு வந்தது. யூத மறையின் தூய்மையை அழித்தது. அதன் விளைவாக யூதர் கள் தம் மறையை மறுத்தும் வாழ்ந்தனர். யூத மறையின் பழம் பெரும் பக்தனாகிய நாகூம் மிகவும் மனவேதனைப் பட்டார். அசீரிய அரசின் தலைநகராகிய நினிவேயின் வீழ்ச்சியை விரும்பினார். அதன் அழிவை முன்னறிவித்தார் அவர் விருப்பம் நிறைவேறியது. கி.மு. 612 இல் பபிலோனிய ரால் முற்றுகையிடப்பட்டுத் தரைமட்டமாக்கப்பட்டது இதைக் கண்ட நாகூம் மகிழ்ச்சிக்கீதம் பாடினார், இறைவனின் ஆற்றலையும் பெருஞ்சினத்தையும் வர்ணித்து, இறைவனே நினிவேயை அழித்தார். இனிமேல் யூதா எழுச்சியுறும் என எதிர்பார்த்தார் மற்றவரை அடக்கி ஒடுக்கும் ஒருவனை ஆண்ட வர் தண்டிக்காமல் விடமாட்டார். என்பதை நாகூம் வலி யுறுத்துகிறார்.

அபகூக் : இவரும், நாகூம், ஜெரேமியாஸ் இருவரும் ஒரே காலத்தவர்கள். அசீரியாவின் வீழ்ச்சியையும் பபிலோனின் எழுச்சியையும் கண்டவர். இவர் பபிலோனியர் யூதாவை முற்றுகையிட்டு, யெருசலேமைத் தரைமட்டமாக்கி, யூதர்களை நாடுகடத்திய காலத்தில் (605 — 597) இறைவாக் குரைத்தவர்.

இவர் எழுதிய நூல் தீமையைப்பற்றி ஆராய்கிறது. இறை வாக்கினருக்கும் இறைவனுக்கும் இடையில் நடைபெறும் உரை யாடலாக எழுதப்பட்டு இருக்கிறது. முதலில் இறைவாக்கினர் தம் மக்களின் பாவ வாழ்க்கையைப்பற்றி முறையிட இறைவன் பபிலோனியரைக் கருவியாகக்கொண்டு அவர்களைத் தண்டிக்கப் போவதாகக் கூறுகின்றார். ஏன் மிகத் தீயவர்களான கல்தேயரைக் கொண்டு (பபிலோனியர்) நல்ல யூதமக்களைத் தண்டிக்கவேண்டுமென்று வினவ, ஒருநாள் அவர்களும் அழிவுறு வார்கள். யூதர்கள் மீட்புப் பெறுவர் எனக் கூறுகின்றார் இறைவன். தீமை என்னும் பிரச்சினைக்குக் கொடுக்கப்படும் விடை: கொடிய நாடு ஒன்றை மற்றொரு நாட்டைக்கொண்டு அடக்குகின்றார். ஆண்டவர் மேல் விசுவாசம் கொள்ளும் நீதிமானை ஆண்டவர் மீட்பார். என்பதாம்:

அக்காயுஸ் : இவர் யூதர்கள் பபிலோனிய அடிமைத்தனத்தில் நின்று விடுதலை பெற்று, தம் தாய்நாடு திரும்பி வந்தபின் (536) நான்கு மாதங்கள் இறைவாக்கு உரைத்தவர். 520 இல் தம் தாய்நாட்டின் பாழடைந்த நிலையைக்கண்டு திகிலடைந்த யூதர்களுக்கு யூத அரசனும், ஆளுநனுமாகிய சொரோபாபேலும், பெரிய குரு ஜோசுவாவும் உற்சாகமூட்டி, புதிய ஆலயத்திற்கு அடிக்கல் நாட்டினர். ஆண்டுகள் பல கழிந்த போதிலும் ஆலயம் கட்டுப்படவில்லை. ஏனெனில் மக்கள் தங்கள் சொந்த அலுவல்களில் ஈடுபட்டு இருந்தார்கள். தமக்கென வீடுகளைக் கட்டினர். தம் விளை நிலங்களைப் பண்படுத்தினர். வியாபாரத்தில் ஈடுபட்டனர், ஆனால் எவ்வளவு தான் உழைத்தாலும் பொருளாதாரம் முன்னேறவில்லை. வறுமை, பஞ்சம், வரட்சி அவர்களை வாட்டின.

இந்நிலையில்தான் அக்காயுஸ் இறைவாக்கு உரைத்தார். எசெகியேலைப்போல இவரும் கோவில், வழிபாடு என்பதில்தான் கவனம் செலுத்தினார் ஆலயத்தைக் கட்டியெழுப்புவதில் மக்களுக்கு கவலை இல்லையே என வருந்தி, ஆலயத்தைக் கட்டி எழுப்ப அனைவரையும் அழைக்கின்றார். ஆலயத்தைக் கட்டுவதில் அக்கறையில்லாமல், தன் வேலை தன் குடும்பத்தில் கவனம் செலுத்தியபடியால்தான் நாட்டில் வறுமையும் வஞ்சகமும் மலிந்திருக்கிறதெனக் கூறினார். மன்னனும் பெரிய குருவும், மக்களும் இதைக்கேட்டு ஆலய வேலையில் ஈடுபட்டனர். புதிய ஆலயத்தைப் பழைய ஆலயத்துடன் ஒப்பிட்டுப் பார்த்து, குறைகூறிய மக்களுக்கு, அக்காயுஸ் ஆலய வேலை முடிந்தவுடன் நாட்டின் வருவாய் பெருகும், ஆலயமும் மகிமை பெறும் எனவும் முன்னறிவிக்கிறார். மேலும் அவர் மன்னன் சொரொபாபேலுக்குக் கொடுத்த ''இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்'', ''இறைவனின் கணையாழி'' வாக்குறுதி மெசியாவைப் பற்றி முன்னறிவித்தலாகக் கருதப்படுகிறது.

அக்காயுசின் போதனையின் சுருக்கம்: ஆன்மீக வாழ்விற்குரிய அனைத்திற்கும் மக்கள் முதலிடம் கொடுத்தால், அவரது பராமரிப்பு எமக்கு என்றும் கிடைக்கும் என்பதாகும்.

சக்கரியாஸ் : இவர் அக்காயுஸ் காலத்தவர். யூதர்கள் தம் தாய் நாடு திரும்பிய பின், 520 — 518 இல் இறைவாக்கு உரைத்தவர். இவர் குரு குலத்தவர். ஆலயத் திருப்பணியில் ஆர்வமுள்ளவர். இவரும் ஆலயக் கட்டிட வேலைகளை முன்னேற்றுவதில் அக்கறை எடுத்து, மக்களை ஊக்குவித்தார். ஆலயத் திருப்பணிகள் சிறப்புற நடந்தால் மெசியாவின் ஆட்சி

விரைவில் வரும் என்பது இவரது கருத்து. இவர் நூலில் இரண்டு பகுதிகளுண்டு. இதன் முதற் பகுதி (1 — 8) சக்கரியாசால் 520 — 518 இல் எழுதப்பட்டது. இது மற்றிலும் மெசியாவையும், அவர் காலத்தையும் பற்றியது. இதன் மையமாக யூதேயா மன்னன் சொரொபாபேலும், பெரிய குரு ஜோசுவாவும் காணப்படுகின்றார்கள். அவன் வழியாக இறைவனால நிறுவப்படும் யூதேயா அரசு மெசியாவின் ஆட்சிக்கு வழிவகுக்கும் என்ற கருத்து காணப்படுகின்றது. தாம் கண்ட 8 காட்சிகள் வழியாக இதை உணர்த்துகின்றார். இதன் இலக்கிய நடை காட்சியாகமத்தை ஒத்தது.

இதன் இரண்டாம் பகுதி (9 — 14) பிற்காலத்தையது. கிரேக்க மன்னன் அலெக்சாண்டர் காலத்திற்குப் பிந்தியதென ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். இதன் நடையும், நடக்கும் நிகழ்ச்சிகளும், பேசப்படும் அரசர்களும், போர்களும் வேறு. இது மகா அலெச்சாண்டரின் மரணத்தையடுத்து அவன் ஆளுநர்கள் அரசைத் தங்களுக்குள் பிரித்து, எகிப்கிய ஆளுநன் டாலமியின் கீழ் பலஸ்தீனா இருந்த காலத்தில் (300 — 200) எழுதப்பட்டிருக்க வேண்டும். இதைச் சக்கரியாஸ் II என்றழைப்பர். இதை எழுதியவர் யாரென்று தெரியாது. இங்கும் நாம் காட்சிகளையும் கற்பனைகளையும் காண்பதால், இதைச் சக்கரியாஸ் ஆகமத்துடன் இணைத்திருக்கின்றனர். இங்கும் மெசியாவைப் பற்றிப் பல குறிப்புகள் காணப்படுகின்றன. ஆனால் மெசியா சமுதை மீது வரும் எளிய மெசியாவாக வருணிக்கப்பட்டிருக்கிறது. துன்பத்தின் வழியாகத்தான் மெசியா தன் ஆட்சியை நிறுவுவார். இஸ்ராயேல் இனம் இறைவன் வழியாகவே விடுதலை பெற்றுச் சுத்திகரிக்கப்பட்டு, புதிய இஸ்ராயேல் இனம், புதிய யெருசலேம் உருவாகும் இஸ்ராயேலரிடையே இறைவாக்குப் பணி முடிவுறப் போவதைச் சக்கரியாஸ் அறிவிக்கின்றார்.

**அப்நியாஸ்** : இவரைப் பற்றிய வரலாறு ஒன்றும் அகப்படவில்லை. அவர் எழுதிய நூலின் காலத்தைப் பற்றிக் கருத்து வேறுபாடுகள் உண்டு. சிலர் ஜெரேமியாஸ் காலத்துக்கு முன்னர் என்பர். ஏனெனில் இந்நூலின் ஒரு பகுதி எரேமியாசின் நூலில் உண்டு. மற்றவர்கள் இதைப் பிற்காலத்தில் (321) எழுதப்பட்டதென்பர். பொதுவாக நாம் ஏறக்குறைய 550 இல் எழுதப்பட்டது எனலாம். இதுவே பழைய ஏற்பாட்டில் உள்ள நூல்களில் மிகச் சிறியது. ஏதோம் நாடே இதன் மையமாக அமைந்திருக்கிறது. ஏதோமியரும், இஸ்ராயேலரும் உறவினர்கள். ஈசாக்கின் இரட்டைப் பிள்ளைகளுள் ஒருவரான ஈசோவின் வழித்தோன்றல்கள் ஏதோமியர். யாக்

கோப்பின் வழித்தோன்றல்கள் இஸ்ரவேலர். ஆரம்பத்திலி ருந்தே இருவரும் எதிரிகள். பலமுறை போர் செய்திருக்கின் றனர்.

587 இல் பபிலோனியர் யெருசலேமை முற்றுகையிட்டுத் தரைமட்டமாக்கியபோது, ஏதோமியர் மகிழ்ச்சியடைந்தனர். தப்பியோடிய யூதரைப் பிடித்துக் கொடுத்தனர். எனவே எல்லா இறைவாக்கினரும் ஏதோமியரை இகழ்ந்தே பேசினர். நாட்டுப் பற்றுக் கொண்ட அப்தியாசும் ஏதோம் மீது வசை யையே பாடுகிறார். கி.மு. 550 இல் நப்தியர்கள் ஏதோமை கைப்பற்றி, ஏதோமியரை விரட்டி அடித்தனர். இதைக் கண்ட யூதர்கள் பூரிப்படைந்தனர். அவர்களின் கொடுமைகளே ஆண்டவர் அவர்களைத் தண்டிக்கிறார் என மகிழ்ந்தனர். இப்பின்னணியில் தான் அப்தியாஸ் தன் நூலை எழுதினார். ஏதோம நாட்டைக் கண்டிக்கின்றார், சபிக்கிறார். ஏதோம் நாட்டை அழித்து, இறைவன் இஸ்ராயேலருக்கு வெற்றி அளிப்பார் என்ற வாக்குறுதியும் கொடுக்கிறார்.

மலாக்கியா : இந்நூலை எழுதிய ஆசிரியரின் பெயர் தெரி யாது. இந்நூலில் காணப்படும் 'எம் தூதன்' எனப் பொருள்படும் 'மலாக்கி' எனும் எபிரேயப் பெயரை இதன் ஆசிரியருக்கு சூட்டியுள்ளனர். இவர் யூதர்கள் பபி லோனியாவிலிருந்து தாயகம் திரும்பி வந்தபின் பணிபுரிந்த வர். ஆலயம் மீளவும் கட்டப்பட்டு, வழிபாடுகள் நடந்த செய்தி காணப்படுகின்றது. ஆகவே இந்நூல் ஏறக்குறைய 450 ஆம் ஆண்டில் எழுதப்பட்டிருக்க வேண்டும். இறைவன் நீதியும் நேர்மையும் நிறைந்தவர். இறுதிநாளிலே தீர்ப்பு வழங்க வருபவர். அனைவரும் அவரவர் செயலுக்கேற்ற தண்டனையோ, பரிசோ பெறுபவர் என்பதே இந்நூலின் மையக் கருத்து.

யூதர்கள் தாய் நாடு திரும்பியபொழுது நம்பிக்கையுட னும், மகிழ்ச்சியுடனும் இருந்தனர். ஆனால் நாளடைவில் வரட்சி, பஞ்சம் போன்ற தொல்லைகளுக்கு ஆளாகி, மனம் சோர்ந்தனர். உள்ளத்தில் பல சந்தேகங்கள் எழுந்தன. இறைவன் கருணையுள்ளவர்தானா? ஏன் இறைமக்களைத் தண்டிக்கிறார்? இறைவனை வழிபட்டுக் கண்ட பயன் என்ன? என்ற கேள்விகள் எழுந்தன. இவற்றுக்கு விடைய ளித்து நம்பிக்கையூட்ட எழுதப்பட்டதே இந்நூல். கேள்வி பதில் பாணியில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இறைவன் யூத மக்கள்மீது அளவுகடந்த அன்பை கொண்டுள்ளார்; ஆனால் அர்ச்சகர்கள் இறைவனைத் தங்கள் இழிவான காணிக் கையால் அவமதிக்கிறார்கள். இறைமக்கள் தங்கள் கலப்புத்

திருமணம், மண முறிவு போன்றவற்றினால் இறைவனுக்குக் கோபமூட்டுகின்றார்கள். வருவாயின் பத்திலொரு பங்கை இறைவனுக்கு அளிக்க மறுத்து, இறைமக்கள் இறைவனிடம் கொள்ளையடிக்கின்றார்கள். ஆகவேதான் வாழ்வில் துன்பம், தண்டனை என்கிறார் ஆசிரியர். பாவிகள் இன்று இன்பம் அனுபவித்தாலும், ஆண்டவரின் நாளில் நீதி வழங்கப்படும். இறைவனுக்குச் சிறந்த பலி ஒப்புக்கொடுக்கப்படும் என்கிறார். இப்பகுதியில் நற்செய்தியாளர், திருமுழுக்கு அருளப்பரையும் திருச்சபை, திருப்பலியையும் காண்கின்றனர்.

யோவேல் : யோவேல் பத்துவேல் என்பவரின் மகன் என்பதைத் தவிர வேறொன்றும் எமக்குத் தெரியாது. நூலில் காணப்படும் சில ஆதாரங்களைக் கொண்டு இந்நூல் 440 — 400 இல் எழுதப்பட்டது எனலாம். ஏனெனில் இங்கு எந்த அரசரும் குறிப்பிடப்படவில்லை. யூதர்கள் கிரேக்கருக்குப் பணிந்திருந்தனர் என்று சொல்லப்படுகின்றது. ஆலயமும், மதில்களும் முற்றுப் பெற்றிருப்பதைக் காண்கின்றோம். அப்தியாஸ், மலாக்கியா போன்ற இறைவாக்கினரின் கருத்துக்களும் இங்கு காணக்கிடக்கின்றன.

இந்நூலில் இரு பிரிவுகளுண்டு. முதல் பகுதியில் வெட்டுக்கிளிகளால், வரட்சியால் நாடு, விளைச்சல், மிருகங்கள் பாதிக்கப்படுகின்றன. ஆகவே மனிதனது பாவத்தால் அவன் மட்டுமல்ல அவனைச் சார்ந்தவைகளும் தண்டனை பெறுகின்றன. நல்வாழ்வு வாழ்வதற்கு மனமாற்றமும், மனஸ்தாபமும் வேண்டும். எனவே அர்ச்சகர்களுக்கும் இறைமக்களுக்கும் அழைப்பு விடுகிறார் ஆசிரியர். ஆடைகளைக் கிழிக்காமல், உள்ளத்தைக் கிழித்து எழுப்பும் குரலுக்கு இறைவன் செவிசாய்த்து, இறுதிநாளில் நல்ல தீர்ப்பு வழங்குவார் அனைத்து மக்களும் இறைவனின் ஆவியைப் பெற்று இறைவாக்கு உரைப்பர் என்ற வாக்குறுதியும் அளிக்கப்படுகிறது. இறைமக்களைக் கொடுமைப்படுத்தும் பிறநாடுகளுக்குத் தீர்ப்பு வழங்கப்படும் என்கிறார் ஆசிரியர்.

யோனாஸ் : இந்நூல் இறைவாக்கினரின் நூல்களின் வரிசையில் வந்தாலும், இதில் இறைவாக்குரைகள் 3:4 இல் காணப்படும் அழிவுபற்றிய முன்னறிவிப்பு தவிர இல்லை. இது இறைவாக்கினரைப் பற்றிய நூலே தவிர இறைவாக்கு நூல் அல்ல. இதன் ஆசிரியரைப்பற்றி நமக்கு ஒன்றும் தெரியாது. ஆனால் பபிலோனிய அடிமைத்தனத்தின் பின் (400 — 200) எழுதப்பட்டிருக்கலாம் என்பது ஆராய்ச்சியாளர்

கருத்து. இஸ்ராயேலரின் ஆண்டவர் யூதருக்கு மட்டுமல்ல அனைவருக்கும் உரியவர், அவர் அளிக்கும் மீட்பும் அனைவருக்கும் உரியது என்பதே இந்நூலின் கருத்து.

பபிலோனியாவிலிருந்து திரும்பிவந்த யூதர்களிலே புறவினத்தாரைப்பற்றி இரு முரணான கருத்துக்கள் நிலவின. யூத மக்களுக்கு அளிக்கப்பட்ட மறை உண்மைகள் யூதர்களுக்கே உரியவை. வேற்றினக் கலப்பின்றி, அவர்களுடன் எவ்வித தொடர்புமின்றி வாழவேண்டும் என்ற குறுகிய கொள்கை உடையோர் ஒரு சாரார். இஸ்ராயேலரின் ஆண்டவர் அனைவருக்கும் உரியவர். அனைத்துலக மீட்பர். எனவே தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட உண்மைகளை உலக மக்களுடன் பகிர்ந்து வாழவேண்டும் என்ற பரந்த கொள்கையுடையோர் மறு சாரார். இப்போராட்டத்தை அழகாகக் கதையில் சித்திரித்து, முதற் பிரிவினரின் குறுகிய மனப்பான்மையை எள்ளி நகையாடி, இரண்டாம் குழுவினரின் பரந்த மனப்பான்மையே, பரந்த மனக் கொள்கையே சிறந்ததெனக் காட்டுகின்றார்.

ஆண்டவர் யோனாசை அழைத்து அசீரிய நாட்டின் தலை நகரமாகிய நினிவே செல்லும்படி கட்டளையிடுகின்றார். ஆனால் யோனாஸ் புறவினத்தாரிடம் செல்லவிரும்பாது கப்பலேறி தார்சுக்குச்செல்ல புறப்படுகின்றார். இறைவன் புயலாலும் திமிங்கலத்தாலும் அவரைத் தண்டிக்கிறார். யோனாஸ் மனந்திரும்பி கடவுளுக்குப் பணிந்து நினிவேக்குச் சென்று அதன் அழிவை முன்னறிவித்தார். அந்நாட்டு மன்னனும் மக்களும் அதைக்கேட்டு மனந் திரும்பி, நோன்பிருந்து தவம்செய்தனர். இறைவனும் அவர்களை மன்னித்து அவர்களை அழிக்கவில்லை. இதை ஏற்காத யோனாசுக்கு, இறைவன் நினிவே மக்களுக்கும் தம் இரக்கம், அன்பு உரியதென்பதை உணர்த்துகின்றார்.

இது ஓர் உருவக நூல், கற்பனைக் களஞ்சியம்: இதன் வழியாக வேறொரு உண்மை உணர்த்தப்படுகிறது புறா எனப் பொருள்படும் யோனாஸ் இஸ்ராயேலரின் அடையாளம். நினிவே பிறமறையினரைக் குறிக்கிறது. இவர்களுக்கு மீட்புப் பற்றி அறிவிக்க இஸ்ராயேல் இனம் அழைக்கப்பட்டது. ஆனால் இஸ்ராயேலர் இதைச் செய்ய மறுத்தனர். யோனாஸ் மீனால் விழுங்கப்பட்டது பபிலோனிய அடிமைத்தனத்தைக் குறிக்கிறது. இஸ்ராயேலின் கூக்குரலைக் கேட்டு 50 ஆண்டுகளுக்குப் பின் இறைவன் அவர்களை விடுவித்தார். அவர்களும் திரும்பித் தம் நாடுவந்தனர். தமக்கு அளிக்கப்பட்ட உண்மையைப் பிறமறை

யினருடன் பகிர்ந்துகொள்ளத் தயாராயினர் ஆனால் புறவினத்தார் இறைவனின் அன்பையும் அருளையும் எளிதில் பெறுவதை ஏற்க அவர்கள் இன்னும் தயாராகவில்லை; இதையே இக்கதை உணர்த்துகிறது.

## (12) பேர்சியரின் ஆதிக்க காலம்: (539 — 333)

பபிலோனிய அடிமைத்தனம் (586) பல காலத்துக்கு நீடிக்கவில்லை. பேர்சிய அரசு, சக்கரவர்த்தி சைரஸ் I தலைமையில், மொசேப்பெத்தோமிய அரசு முழுவதையும் கைப்பற்றியது (539). இவர்களே கீழ்நாட்டுக்கு வந்த முதல் மேல் நாட்டு அரசு. இவர்கள் தமக்குக் கீழ்ப்பட்டவர்களை மனிதாபிமானத்தோடு நடத்தும் பண்பைக் கொண்டவர்கள். அவர்கள் பபிலோனியரைத் தண்டிக்காமல், தூர இடங்களில் நல்ல உத்தியோகம் கொடுத்து அனுப்பினார்கள். பபிலோனியாவில் அடிமைகளாக நாடுகடத்தப்பட்டிருந்த யூதரை தம் சொந்த நாட்டிற்குப் போக அனுமதித்தார்கள். தங்கள் சொத்துக்களை எல்லாம் ஒழுங்கு செய்துவிட்டு, 537 இல் யூதர், 3 தலைவர்களின் கீழ் (செஸ்பசார், சொறோபாபல், யோசுவா, யெருசலேமிற்குப் பிரயாணமானார்கள். ஏறக்குறைய 42,000 யூதர்கள், 32,000 ஆண்கள், 7000 அடிமைகளுடன் திரும்பி வந்ததாகக் கூறப்படுகின்றது. அனேக குடும்பங்கள் பபிலோனியாவில் தங்கிவிட்டன. யெருசலேமிற்குத் திரும்பி வந்தவர்களுக்கும், அங்கு ஏற்கனவே இருந்தவர்களுக்கும் பிரச்சினை ஏற்பட்டது. பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு குடியேறிய பின், முதல்வேலையாக யெருசலேம் ஆலயத்தைப் புதுப்பித்துக் கட்ட ஆரம்பித்தார்கள், இது புதுப் பிரச்சினையைக் கொண்டுவந்தது. மக்கள் தங்கள் வீடுகளைக் கட்டுவதில் கவனம் எடுத்தபடியால், ஆலயம் கட்டுவதில் அக்கறை எடுக்கவில்லை. இவ் அசட்டைத்தனத்தை இறைவாக்கினர் அக்கேயுசும், சக்கரியாசும் கண்டித்து துரிதப்படுத்தினர். யூதர்கள் ஆலயம் கட்ட ஆரம்பித்தபொழுது, சமாரித்தரும் உதவி செய்ய முன்வந்தனர். இது இன்னுமொரு பிரச்சினையைக் கொண்டுவந்தது. யூதர்கள் அசுத்தமானவர்கள் என்று கருதும் சமாரித்தர் உதவி செய்வதை மக்கள் விரும்பவில்லை. இறுதியில் பேர்சிய அதிகாரிகளின் கண்காணிப்பில் ஆலயம் கட்டப்பட்டு சித்திரை 513, 16ஆம் திகதி புது ஆலயம் அபிசேகம் பண்ணப்பட்டது. இக்காலத்தில் பேர்சிய மன்னனின் நட்பைப் பெற்றிருந்த எஸ்திராஸ், நெகேமியாஸ் என்பவர்களின் உதவியுடன், யெருசலேம் நகரம் மதில்களுடன் புதுப்பிக்கப்பட்டு, யூத மதமும் புனரமைப்புச் செய்யப்பட்டது. புறவினத்தார் ஆலயத்திலிருந்து வெளியேற்றப்பட்டு, யூதர் தெரிந்தெடுக்கப்பட்ட

இனம் என்ற எண்ணம் உருவாகியது. 'சபாத்' அனுசரிக்கப் பட்டது. யூத மறைநூல் தொகுக்கப்பட்டது, வெளிநாடுகளுக் குச் சென்று குடியேறிய யூதர், அங்கு தம் மதத்தைப் பரப்பினர்.

எஸ்திரா — நெகெமியா

இஸ்ராயேலர் பபிலோனிய அடிமைத்தனத்திலிருந்து விடு தலை பெற்று, தம் சொந்த நாடு திரும்பி வந்து, புதிய எருசலேம் நகரத்தையும், ஆலயத்தையும் கட்டியெழுப்பி, யூத மதத்தைப் புனரமைப்புச்செய்த காலத்தில் முக்கிய பங்கெடுத்த வர்கள் எஸ்திராவும், நெகெமியாவும் ஆவர். இவர்கள் பபிலோனியாவில் வாழ்ந்த யூத சமூகத்தின் உறுப்பினர். இவர்கள் இருவரும் பேர்சிய மன்னனின் நட்பைப் பெற்றவர் கள். எஸ்திரா தலைமைக் குருவான ஆரோனின குடும்பத்தில் வந்த சாராயியாசின் மகன். இவர் மோசீசனின் திருச்சட்ட நூலில் வல்லுநர். அவர் ஆண்டவரின் திருச்சட்டத்தைக் கற்றறிவதிலும், அதன்படி நடப்பதிலும், இஸ்ராயேல ருக்கு அவர்கள் கடைப்பிடிக்கவேண்டிய சட்டங்களையும், பழக்கவழக்கங்களையும் புகட்டுவதிலும் ஆர்வம் கொண்டிருந் தார். ஆண்டவரின் அருட் கரம் அவரோடிருந்தது. இவர் பேர்சிய மன்னனால் விசேட கட்டளையுடன் எருசலேமுக்கு அனுப்பப்பட்டார். அதன்படி இஸ்ராயேலரின் குருக்கள், லேவியர், பாடகர், ஆலய ஊழியரிலிருந்து சிலரை அழைத்து திருச்சட்டத்தின்படி யூதாவையும், எருசலேமையும் பார்வை யிடவும், அரசரும் அவரது ஆலோசகரும் இஸ்ராயேலரின் கட வுளுக்கு பெற்றுக்கொடுத்த பொன்னையும், வெள்ளியையும், காணிக்கைகளையும் எருசலேமுக்கு எடுத்துச் செல்லவும் அனுப் பப்பட்டார்;

எருசலேம் மக்களை ஒன்று கூட்டி, சட்டங்களை எடுத் துரைத்து, அவற்றை கடைப்பிடிக்கும் வழக்கத்தைப் புதுப்பித் தார். வழிபாட்டைப் புதுப்பித்து உடன்படிக்கைக்கு மீண்டும் முக்கியத்துவம் கொடுத்தார், ஞான வாழ்விலும், நன்னெறியி லும் மறுமலர்ச்சியை ஏற்படுத்தினார். புறவினப் பெண்களை திருமணம் செய்த இஸ்ராயேலருக்கு அவர்களின் தீய செயலை உணர்த்தி, அந்நிய பெண்களை விலக்கிவிட்டு, உடன்படிக் கைக்கு பிரமாணிக்கமாய் வாழச்செய்தார், இப்பணியில் இவ ருக்கு நெகெமியா பக்கபலமாயிருந்தார். இருவரும் புதிய எருசலேம், புதிய ஆலயம், புதிய வழிபாடுகளை அமைத்து, உடன்படிக்கையைப் புதுப்பித்து, யூதமதத்தைப் புனரமைத்தனர்.

## (13) கிரேக்க ஆட்சிக் காலம்

333 இல் மசடோனியாவிலிருந்து சிறிய கிரேக்க அரசு, மகா அலெக்சாண்டரின் தலைமையில், பேர்சியா அரசைக் கைப்பற்றியது. அலெக்சாண்டர் உலகம் முழுவதையும் கைப் பற்றி, எங்கும் ஒரே மதத்தையும், கலாச்சாரத்தையும் நிலை நாட்ட விரும்பியும் அவன் விரைவில் (326 இல்) இறந்தபடியால் அது நிறைவேறாமல் போயிற்று. அவனது மகன் சிறுவனாக இருந்தபடியால், அரசு மூன்றாகப் பிரிக்கப்பட்டு, வெவ்வேறு படை அதிகாரிகள் அவற்றை ஆண்டார்கள். ஆரம்பத்தில் யூதா எகிப்தின் ஒரு பகுதியாகவிருந்தது, பின் 198 இல் சிரியா அரசின் கீழ் வந்தது. யெருசலேமில் பெரிய குரு பதவிக்கு இரு சகோதரர்களிடையே பிளவு ஏற்பட்டு, இதன் நிமித்தம் சிரியா எப்பிபானஸ் — அந்தியோக்கஸ் தலையிடவேண்டிய நிலை ஏற்பட்டது.

அவன் யூதாவைக் கிரேக்கமயமாக்க விரும்பி, படையை அனுப்பி பல யூதர்களைக் கைது செய்தான். யூத சட்டங் களுக்கு விரோதமான சட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. விருத்த சேதனம் செய்வது தடைவிதிக்கப்பட்டது. வேதாகமம் எரிக்கப் பட்டது. யெருசலேம் அந்நிய தெய்வங்களின் ஆலயமாக மாறியது, விலக்கப்பட்ட மாமிசத்தை உண்ண மறுத்தபடியால், மக்கேயாசின் ஏழு மக்களும் தாயும் கொல்லப்பட்டார்கள். மத்தாதியாஸ் தலைமையில் எதிர்த்து மீளவும் போர் ஆரம்ப மாகியது. இதில் மத்தாதியாசும், அவரது ஐந்து மக்களும் கொல் லப்பட்டனர். தொடர்ந்து மத்தாத்தியாசின் மூன்றாம் மகன் யூதாஸ் மக்கபேயுஸ் தலைமையில் போராடி, மத, அரசு உரிமை பெற்றார்கள். 141 இல் மக்கபேயுசின் மகன் சைமன் 586 க்குப் பின் முதல் யூத அரசனாக நியமிக்கப்பட்டான். மக்கபேயரின் சந்ததியினர்,அதிகார மோகங்கொண்டு தங்களுக்குள்ளே சச்சரவு களை ஏற்படுத்தினர். இது உரோமையர் நாட்டை முற்றுகை யிடுமட்டும் தொடர்ந்தது. கி.மு. 63 இல் பொம்பேயி என்பவன் தலைமையில் உரோமையர் நாட்டைக் கைப்பற்றினர்.

## (14) உரோமைப் பேரரசு ; (63)

மக்கபேயர்களின் சந்ததியினர் கொடியவர்கள். மதப்பற்றற்றவர்கள். தங்களது தவறான ஒழுக்கத்தா லும், போக்காலும் மக்கள் வெறுப்படையச் செய்தார்கள். கிரேக்க பண்பாட்டை யூத மக்களிடையே புகுத்த முயன்றனர். இதை மக்கள் எதிர்த்தார்கள். இவர்கள் தாவீது குலத்தவர் களோ, லேவி குலத்தவர்களோ இல்லாமல் இருந்தபோதிலும்,

அரச பட்டத்தையும், பெரிய குருவின் பதவியையும் தங்களிடையே எடுத்துக்கொண்டனர், ஆனால் அதற்கேற்றபடி வாழவில்லை. இவர்களைச் சார்ந்த அலெக்சாண்டர் செனேயஸ் என்பவன் பலஸ்தீனா முழுவதையும் ஆண்டான். அவன் பரிசேயரைக் கொடுமைப்படுத்தி, சதுசேயருக்கு ஆதரவளித்தான். இதன் விளைவாகப் பரிசேயருக்கும், சதுசேயருக்கும் இடையே சண்டை மூண்டது: உள்நாட்டுப் போர் ஆரம்பமாகியது. இரு பகுதியினரும் உரோமைப் பேரரசிடம் உதவிக்கு விண்ணப்பித்தனர். இது உரோமையர் பலஸ்தீன நாட்டுக்குள் நுழையச் சந்தர்ப்பம் அளித்தது. அவர்கள் பொம்பேயி என்பவன் தலைமையில் கி.மு. 63 இல் பலஸ்தீனாவைக் கைப்பற்றினர். பலஸ்தீனா உரோமைப் பேரரசுக்கு அடிமையானது. உரோமைத் தளபதி பொம்பேயி எருசலேம் ஆலயம் வரை சென்று ஆலயத்தைத் தீட்டுப்படுத்தினான். தாம் கைப்பற்றிய நாடுகளுக்கு அப்பகுதியின் அரசர்களையே தலைவராக நியமிப்பது உரோமையரின் கொள்கை. அவ் அரசர்கள் அங்கு அமைதியை நிலைநாட்டி, உரோமைக் கட்டளைகளைச் செயற்படுத்தி வருதல் வேண்டும், கப்பம் செலுத்தவேண்டும்.

பலஸ்தீனாவை ஆள்வதற்கு இதுமேயா நாட்டு அரச குடும்பத்தில் தோன்றிய மகா ஏரோது (கி.மு. 34 — கி.பி. 4) நியமிக்கப்பட்டான். இவன் சிம்மாசனம் ஏறியதோடு, யூதாவின் செங்கோல் யூதாவை விட்டு இடம்மாறியது. இவனது ஆட்சிக் காலத்தில் தான் கிறிஸ்து பிறந்தார்.

முற்றும்

தயாரிப்பு : அருட் திரு. பி. யேசுதாசன் அ.ம.தி.

வெளியீடு: யாழ். மறைக்கல்வி நிலையம்,
ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.

# ஆசிரியரின் ஏனைய படைப்புக்கள்

கிறிஸ்தவம் (க. பொ. த. உயர்தரம்) – பாடநூல்கள்

- ☐ ஒத்தமை நற்செய்திகள்
- ☐ புனித அருளப்பர் நற்செய்தி
- ☐ அப்போஸ்தலர் பணி
- ☐ இன்றைய உலகில் திருச்சபை
- ☐ உலக திருச்சபைச் சரித்திரம்

கிறிஸ்தவம் (க. பொ. த. உயர்தரம்) – வினாவிடைகள்

- ☐ இரட்சணிய வரலாறு (79 — 90)
- ☐ ஒத்தமை நற்செய்திகள் (79 — 87)
- ☐ புனித அருளப்பர் நற்செய்தி (79 — 89)
- ☐ அப்போஸ்தலர் பணி (79 — 90)
- ☐ இன்றைய உலகில் திருச்சபை (79 — 89)
- ☐ உலக திருச்சபைச் சரித்திரம் (79 — 89)

ஏனைய நூல்கள்

- ☐ சிலுவையில் சிந்தை (திருமணித்தியாலம்)
- ☐ வேதாகமத்தைப் படிப்பது எப்படி ?
- ☐ வேதாகமம் தோன்றியது எவ்வாறு ?
- ☐ உன் பெயர் பாறை !
- ☐ எச்சபையும் திருச்சபையா ?
- ☐ மரியன்னைப் பக்தி
- ☐ புனிதர் வழிபாடு சிலை வழிபாடா ?
- ☐ இறுதி அஞ்சலி (இறந்தோர்க்கான செப வழிபாடுகள்).

## கிடைக்குமிடங்கள்

மறைக் கல்வி நடுநிலையம்
ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்,

மறைக் கல்வி நடுநிலையம்
ஆயர் இல்லம்,
மட்டக்களப்பு.

மறைக் கல்வி நடுநிலையம்
புனித செபஸ்தியார் ஆலயம்,
மன்னார்.

மறைக் கல்வி நடுநிலையம்
நொறீஸ் வீதி.
கொழும்பு -11.

தேசிய மறைக் கல்வி நடுநிலையம்,
11, பொறல்ல குறுக்குத் தெரு,
கொழும்பு-8.

The Fernando Printers, Colombo-14.